உ

பரமபதி துணை.

# சோதிட கடலகராதி

இதில்

சோதிட யோகப்பொருளகராதியும்,

சோதிடக்கடல் போதினியும்,

அடங்கி இருக்கின்றது.

இஃது,

திரிசிரபுரம் நாராயணசாமிபிள்ளை அவர்கள் குமாரர்

ஜோசியர்.

நா. அரங்கசாமிபிள்ளை யவர்களால்

இயற்றப்பட்டது.

---

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

இ. ரா. ம. குருசாமிக்கோன் அவர்கள்

எஸ். முத்தையபிள்ளை அவர்கள்

கேட்டுக்கொண்டபடி

K. P. சிங்காரவேலுமுதலியார்

அண்டு ஸன் அவர்களால்.

---

சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1923 [அணா 12.

ரிஜிஸ்டர் காபிரைட்.

50677
1997

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

1904வு டிசம்பர்மீ 24வ சென்னப்பட்டணம் கிருஷ்ணாங் குளம் அம்மன்கோவில் தெருவு 39 நெ. வீட்டிலிருக்கும் கேளம் பாக்கம் பெருமாள் முதலியார் குமாரர் புஸ்தகவியாபாரம் சிங்கார வேலு முதலியாருக்கு திருச்சினாப்பள்ளிகோட்டை சின்னகடைத் தெருவிலிருக்கும் நாராயணசாமிபிள்ளை குமாரர்ஜோசியம். அரங்க சாமிபிள்ளை யெழுதிக்கொடுத்த யெடிட்டர்பாத்தியவிக்கிரயபத்திர மென்னவென்றால்யென்னால்பலசோதிட நூல்களிலிருந்து பிரயாசைப்பட்டு யெடுத்தெழுதிய சோதிடஅகராதி யோகப்பொருளகராதி சோதிடக்கடல்போதினி யென்னும் இவைமூன் றுமடங்கியசோதிட அகராதி யென்னும் புஸ்தகத்தை யென்னால் கவர்மெண்டில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு அனுபவித்துவருகிற அமைப்பு அல்லது யெடிட்டர் பாத்தியத்தை ரூபா, 50-க்கு தங்களுக்கு கிரயம்செய்து கொடுத்து இதற்கு முன் தங்களிடத்தில் நான் பெத்துக்கொண்டது ரூபா. 35. நாளதுதேதியில் பிராம்சேரி நோட்டின்பேரில் யெழுதிக்கொண்டது ரூபா. 15 ஆ வகை இரண்டுக்கு ரூபாய் அன்பதும் நான் பெத்துக்கொண்டபடியால் இனி மேற்படி புஸ்தகத்தைஅச்சில்பதிப்பித்து விற்பனைசெய்யும் முதலான யெவ்வித பாத்தியமும் ஷை புஸ்தகத்தில் யெனக்கு கிடையாது, தாங்களே அச்சில்பதிப்பித்து தங்கள்பேரால் ரிஜிஸ்டர்செய்து அச்சிட்டுவிற்பனை செய்துக்கொண்டு வரவும். மற்றவர்கள் அச்சிட்டால் அதினால்நேரிடும் சகல நஷ்டத்தையும் தாங்களே வாங்கவும். இது முதலான சகலபாத்தியத்தையும் தாங்களே அனுபவித்து கொள்வீர்களாகவும் இதற்குமுந்தி இந்த பாத்தியத்தை தங்களைத்தவிர வேறேயாருக்கும் அச்சிடும்படி யெவ்வித அனுமதியும் கொடுக்க வில்லை யென்று உறுதிசொல்லி யெழுதிக்கொடுத்த சொந்தகிரய சாசனம்.

ஜோசியம். அரங்கசாமிபிள்ளை.

சாக்ஷிகள்.

கணபதிமுதலியார் அறிவேன்

தி. கோ. புஸ்தககடை ரா. துரைசாமி நாயுடு அறிவேன்

தி. கு. கோவிந்தசாமி நாயுடு அறிவேன் குளித்தலை

தி. கோ. மலைவாசல் குஞ்சிதபாதம் புஸ்தகசாலை தி. பெ. இராமலிங்கம்பிள்ளை அறிவேன்.

தி. கோ. ஆண்டாள்வீதி அப்பாவுபிள்ளை குமாரன் புஸ்தகஷாப் மாமுண்டியாபிள்ளை அறிவேன்.

தி. கோ. புஸ்தகவியாபாரம் சு. குமாரசாமி பிள்ளை அறிவேன்.

இப்படிக்கி,

கே. பெ. சிங்காரவேலு முதலியார் அண்டு ஸன்.

நெ. 53, நம்மாழ்வார் தெருவு, சென்னை.

# நூன்முகம்.

கடல் சூழ்ந்த நெடிய பூவுலகின்கண் மாக்ஷிமை தங்கிய நமது ஆரிய மதாபிமானிகளே!

சோதிட சாஸ்திரமென்பது நம்முடைய சதுர்வேத ஆகமத்தின் சஷ்டாங்கங்களில் முதன்மை பெற்றதாகிய நேத்திராங்கமென்று நம் இந்துக்கள் யாவருமறிந்தவிஷயம் நம்முடைய நான்கு வருணாச்சிரமங்களில் எதையேனுங் கடைப்பிடித்து அதன் கொள்கையின்படி நடந்து வருபவர்களுக்கு இச்சாஸ்திர விஷயமானது எவ்விதத்திலேனும் அவர்களுக்கு சம்மந்தப் பட்டிருக்குமென்றால் இல்லற தருமத்தில் நின்று லௌகீக விஷயங்களில் வழுவாது நடக்கும் நம்மவர்களுக்கு இச்சாஸ்திரமானது நாள், நட்சத்திரம், திதி, யோகமுதலான சுபதினங்களையறிந்து நமது அநுஷ்டானத்தின்படி இகபர சாதகத்திற்குறிய தானம் தவம்முதலிய நற்கருமங்களை செய்துவருவதற்கு இது இன்றிமையாத சாதனமாக இருக்கிறதென்பதை யாவரும் பிரசித்தமாயறிந்த விஷயம். பூர்வகாலந்தொட்டு, நம்முடைய சோதிடமானது பொதுவாக உலகமுழுவதிலு முள்ள எல்லாவித மதஸ்தர்களிலும், எல்லாவிதஜாதியார்களிலும் எல்லாத்தேயத்தார்களிலும் சற்று அறிவும் சாந்தமும் நற்குணமும் கல்வித்திறமையு முள்ளவர்களால் அநுஷ்டிக்கப்பட்டு வந்ததை அத்தேயத்தரசர்களால், இச்சாஸ்திரம் நன்கு மதிக்கப்பட்டு மகிமைபெற்றிருந்ததாக அந்தந்ததேச சரித்திரங்களினாலும், ஒவ்வொரு மதஸ்தர்களின் வேதாகமசாஸ்திர புராணங்களின் உண்மையினாலும் அனேக உதாரணங்கள் காணப்படுகின்றன. அவ்வண்ணமே கிறிஸ்தவர்களின் சத்தியவேதமாகிய பைபில் என்னும் வேதபுத்தகத்தில் கிறிஸ்துவானவர் உலகரக்ஷகராகப் பிறந்தபொழுது, முன்னரே சில சோதிடசித்தாந்திசளுக்குத்தெரிந்து வானத்தில் ஓர்நட்சத்திரம்தோன்றி அதனால் அவர்களுக்குவழிகாட்டப்பட்டு சிலகாணிக்கைகளும் கொண்டுவந்ததாகவும், இன்னும் அநேகதிருஷ்டாந்தங்களும் அவைபோன்று அவ்வேதத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஓர்காலத்தில் பிரான்சுதேசத்தைஅரசாண்ட லூயிஸ், நெப்போலியன் முதலான சக்ரவர்த்திகளால், நம் சோதிட சாஸ்திரத்தை அவர்கள் பாஷையிலேற்படுத்தி பிரதிதினமுமவர்களுக்கு நடக்கக்கூடிய நன்மை தின்மைகளை பிரசன்னை மூலமாக முன்னரே தெரிந்துக்கொண்டு அதற்குத்தகுந்தபடி அவர்கள் நடந்துவந்ததாயுள்ள ஓர் சாஸ்திரத்தை, பின்னர் தஞ்சாவூர் சமஸ்தானத்தாரவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு எலலாரும் எளிதிலுணரும்பொருட்டு வெளிப்படுத்தியிருக்கும் ஓர் சாஸ்திரபுத்தகத்தை இப்போது நம் புத்தகக்கடைவீதிகளிலும் காணலாம், இன்னமும் டர்க்கி, அரேபியா, முதலான! துலுக்கராஜாங்கத்திலும் நம்இந்தியாவை அரசாண்டமகமதியர்களிலும் விளையாட்டுவிநோதஉற்சாகங்களிலும்நன்கு மதிக்கப்பட்டு அநேக வெகுமதிகளும் கீர்த்தியும் பெற்றதாக அற

சர்களின் சரித்திரங்களில் கூறியிருக்கின்றது.. தற்காலம் நம் இங்கி
லீஷ் அரசாங்கத்திலுங் கூட இங்கிலாந்து முதலானதேசங்களிலும்
இந்தியாவிலுள்ள அநேகஐரோப்பியர்கள் வானசாஸ்திரம்,பூகோள
சாஸ்திரம், சோதிடசாஸ்திர முதலிய நூற்களை செவ்வேகற்றுணர்
ந்து மிக பண்டிதர்களா யிருக்கிறார்களென்றும், கவர்ன்மெண்டா
ரவர்களும் நட்சத்திர ஆபீசு ஒன்றை ஏற்படுத்தி, பஞ்சாங்க முத
லானதுகளை கணித்து வருகிறார்களென்றும் நாமெல்லாரும் பார்த்
துமிருக்கிறோம். கேட்டுமிருக்கிறோம். மேற்கூறிய நான்கு வகுப்
பார்களிடத்திலுமே நமக்கு போதுமான அத்தாட்சிகள். சோதி
டம் பூர்வகாலந்தொட்டு நம்பிக்கையுள்ளதென்று நமக்கு கிடைக்கு
மாகில், மற்ற ஜாதியார்களிடத்திலும் மதக்கோட்பாடுகளிலும் நம்
சோதிடமானது எவ்விதத்திலும் கலந்து அவர்களுக்கு இன்றிமை
யாத சாதகமாயிருந்திருக்கு மென்பதில் சந்தேகம்வேண்டுவதில்லை

அப்படி யிருக்கினும் ஷை சாஸ்திரத்தின் ஒவ்வொரு அம்சங்
கள்மட்டும் அன்னியபுற மதஸ்தர்களுக்கு தெரிந்து யெவ்வளவோ
கென்னியமும் மேன்மையும் பெற்றிருக்குமானால் ஷை சோதிட
சாஸ்திரத்திற்கே முழு அம்சங்களுக்கும் மூலகாரணமான வேதா
கம கோட்பாட்டின்படி நடந்தொழுகும் நம்மவர்கள் இல்லறதரு
மத்தை வழுவாது நடத்துவதற்கு யெவ்வளவு முக்கிய சாதனமாக
இருக்கவேண்டும். ஆனால் சிலர் சோதிடம் மனிதனுக்கு யென்ன
காரியத்திற்கு வேண்டுமென்றும் அதுயில்லாவிட்டால் யென்னகா
ரியம் கெட்டுப்போகிற தென்றும் யெல்லாம் பிரமன்தலையில் யெ
ழுதிவைத்திருக்கிற யெழுத்துப்போல விதிப்படி நடக்குமென்றும்
ஒவ்வொருவரும் பிராரத்துவத்தை அனுபவித்துதான் தீரவேண்டு
மென்றும் சற்று அலட்சியமாக இதை நினைக்கக்கூடும் அதையும்
நாம் ஒருவாறு ஒப்புக்கொண்டாலும் மகான்கள் சோதிடம் யென்
னும் சாஸ்திரத்தை சாந்தி, பரிகாரப், தவம் என்னும் அஸ்திவார
த்தின்மேல் யேற்படுத்தி யிருப்பதால் நம்முடைய ஊழென்னும்
விதியையும் சாந்தி, பரிகாரம், தவம், முதலிய செய்கைகளினால்
விலக்கிக் கொள்ளலாமென்று இச்சாஸ்திரத்தின் துணிபு, சோதிட
சாஸ்திரத்தில் சொன்ன சாந்தியைச்செய்து விதியைவிலக்க பிரயத்
தனம் பண்ணாமல் விதிப்படிதானடக்கும் விதிப்படித்தானடக்கு
மென்று மௌனமாக விருந்துகொண்டுவிதிவழியே போனவர்கள்
யாரோ அவர்கள் பிராரத்துவத்தை அனுபவித்துத்தான் தீரவேண்
டும். அவ்வார்த்தை அப்பேர்பட்டவர்களுக்குத் தான் உரியது.
யெல்லாம் விதியென்று பேசினால் கடவுள் நமக்கு மதியை கொடுப்
பானேன். மதியை கொடுக்காவிட்டால் கட்டாயம் மற்ற ஜீவாத்
மாக்களைப்போல விதியை அனுபவித்தே தீர்ப்போமல்லவா ஆகை
யால் விதி இன்னதென்று இச்சோதிட சாஸ்திரத்தினால் அறிந்து
மகான்கள் காருண்யத்தினால் ஊழைவிலக்கி உய்யும் பொருட்டு
சொல்லியிருக்கும் சாந்தி பரிகாரங்களை புத்தியினால் செய்து முடிப்

போமாகில் விதியையும் விலக்கலா மென்பது இச்சாஸ்திரத்தின் துணிபு.

தெய்வத்தாலாகாதெனினு முயற்சி
மெய்வருந்தக் கூலிதரும்
ஊழையும் உப்பக்கங்காண்பர் உலைவின்றித்
தாழாது ஞற்றுபவர் (என்று நாயனாரவர்களும்)

சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயமொருநாளுமில்லை—உபாயம்
இதுவே மதியாகுமல்லாதவெல்லாம்
விதியே மதியாய்விடும் (என்று ஔவையாரும்)

பரமனருணேசன் பதம்பணிவார்க்கென்றும்
கருமஞ்சிதையமெனக் கண்டோம்—அருமந்த
கூட்டுத்தலைபோய் கொடியதக்கன் வேள்வியிலே
ஆட்டுத்தலையாகையால், (என்று குக நமசிவாயரும்)

இன்னம் அனேகமகான்களும் சொல்லியிருக்கிறார்கள். ஒருவனுக்கு சுகதுக்கங்களை ஜாஸ்தியாகவாவது கம்மியாகவாவதுசெய்வதற்கு ஊழுக்கு சக்தியில்லாமல் அது யேற்பட்டபடியே யிருந்தபோதிலும் பகவானைநோக்கி சரீரம்வருந்த ஒருவன்செய்யும் தவம் சாந்தி முயற்சிகளினால் அவன் உத்தேசித்து கேட்ட பலனை அடைவானென்பது திண்ணம். ஆகையால்சோதிடம் மனிதர்களுக்குஅவசியம் வேண்டியதாகவே இருக்கிறது. இவ்வருமையான சாஸ்திரத்தை வேதாந்த சாஸ்திரம்-தர்க்கசாஸ்திரம்-நன்னூல்-தொல்காப்பியம் இலக்கணக்கொத்து இலக்கண விளக்கம் சிற்றகத்தியம் பேரகத்தியம் முதலிய நூல்களைவாசித்து கூர்மையுள்ள அறிவும் புத்தி தீக்ஷண்யமும் அதிக ஞாபகசக்தியுமுள்ளவர்களே இந்த சாஸ்திரத்தை அறிவார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்குள்ளும் இச்சாஸ்திரத்தின் பலாபலனை பிறருக்குயெடுத்துச் சொல்வதென்றால் அதுபலிதமாவது சாமானியமன்று.

பிறருக்குஎடுத்துரைக்கும் தன்மையுடையோர்தான் லௌகீக காரியங்களில் பற்றில்லாதவராய் பஞ்சபூதமைந்தையும் ஒருங்கே சேர்த்து ஜீவனுக்கும் பரத்துவத்துக்கும் ஒரே சம்பந்தமாய் மனதைநாட்டி, யோகானுஷ்டானங்களைச் செய்து தான் முத்தியை அடையக்கூடிய பதவியில் நின்றவர்யாரோ அவர்களே பிறருக்கு எடுத்துரைக்கும் தன்மையுடையோராவர். உலகத்திலொருவர்முகம் ஒருவருக் கிருக்கமாட்டாது அதுபோல ஒருவர் ஜாதகம்போல் ஒருவருக்கில்லாமல் அநேகம் பேதங்களாக அமைக்கப் பட்டிருக்கும் ஜாதகங்களுக்கு ஆதிசிருஷ்டி கர்த்தாவே நெடுங்காலம் யோசித்து பிரத்தியேகமாய் சிருஷ்டிசெய்து ஒருவரை அனுப்பப்பட்டால் மாத்திரமே அவர் அந்த பேதாபேதங்களையும் ஒவ்வொருவர்களுக்கு மேற்பட்ட பிர்மலபி இன்னதென்று அறிந்து பிறருக்கு

எடுத்துரைப்பார்கள். இவ்விதமற்புதமாயுள்ள சாஸ்திரத்தைஅதற்குறிய அந்தணர்கள் கைநழுவவிட்டநிமித்தம் தற்காலம் காலாநுகூலத்தினுல் தங்கள் சுயபாஷையிலேனும் சற்றுமறிவிலா சில சோதிடவேஷதாரிகள் தோன்றினதினுல் நம்முடைய சோதிடம் நாளுக்குநாள் அமர பச்சத்துச்சந்திரனை யொத்து அநேகருக்கு நம்பிக்கையற்று வருகின்றது. அப்படி எவ்விதத்திலேனும் நம்பிக்கை குன்றினும் இந்துவென்று பெயருடைய ஒவ்வொரு குடும்பமும் உலகத்திலுள்ளமட்டும் இச்சோதிடபிரமை அவர்களை விட்டகலாதென்பது நமக்குத்திண்ணம். மேற்கண்ட சோதிட வேஷதாரிகளாயினும் தற்காலம் சோதிடமானது நம்மைவிட்டகன்று விடாவண்ணம் அவர்கள் கக்கத்திலிடுக்கியேனும் காப்பாற்றிவருவதைப்பற்றி அநேகர் சந்தோஷிக்கின்றனர். ஆனுலிப்போது வெளியிட்டிருக்கும் சோதிட கிரந்தங்கள் அந்த சாஸ்திரப்பயிற்சியை மிக உடையவர்களுக்கும் அந்த கிரந்தகர்த்தாக்களுக்குமேயன்றி மற்றவர்களுக்கு இலகுவில் அர்த்தந்தெரியாமல் வெகுவாய் உபயோகப் படாதவைகளாயிருக்கின்றன. இன்னும்சிலர் அதில் சில கிரந்தங்களுக்கு உரையெழுதினதாக வெளிவந்தும் அவ்வுரைக்கு உரைதேட பெரும் அகராதிகளை தேடவேண்டிய அவ்வளவு கடுஞ்சொற்களாயுமிருக்கின்றன. ஆனதினுல்சில சோதிடர்கள் இச்சோதிடசாஸ்திரத்திற்கு தனிமைபாய் ஓரகராதி உண்டாயின் தங்களுக்கும் தங்கள் சோதிட மாணுக்கர்களுக்கும் மிக உபகாரமாயிருக்குமென்று சொன்னதை உத்தேசித்து என் சிற்றறிவுக்கு தெரிந்தவரையில் தமிழ்பாஷையிலுள்ள சோதிடசாஸ்திர புத்தகங்களையும் கண்ணேக்கமிட்டு அவைகளிலுள்ள கடுஞ்சொற்களையும் அவ்வவ் கிரந்தகர்த்தாக்களால் சமயோசிதமாய்க் கூறப்பட்ட காரணப்பெயர்ச்சொற்களையும் பேரகராதி, சதுரகராதி,யாழ்ப்பாணத்தகராதி, நிகண்டுமுதலிய நூல்களிலுள்ள சோதிடச்சொற்களையும் தனியேஎடுத்து ஒருங்குசேர்த்து சோதிடப்பொருள்கூறி, 'சோதிட அகராதி'' என்று திருப்பெயர் சூட்டி யாவர்க்கும் உபகாரமாகும்படி வெளியிடலானதை களங்கமற்ற மனத்தினராகிய அறிஞர்கள் யாவரும் இதுவு மோருபகாரமேயென்று கருதுவரன்றி குறைகூருரென நம்புகின்றனன்.

இவ்விதமோர் சோதிட அகராதியை வெளிப்படுத்த வேண்டுமென வெகுநாளாக என்னிடம் முயற்சிசெய்து வந்தவர்களும் சோதிட அபிமானிகளுமான திரிசிரபுரம் புஸ்தகஷாப் ம-ா-ா-ஸ்ரீ, தி, சபாபதி பிள்ளையவர்கள், திண்டுக்கள் அணைப்பட்டி கிராமம் முன்சீப் ம-ா-ா-ஸ்ரீ, இராமநாத அய்யரவர்கள் இவர்களுடைய பெரும் நன்றியை யான் ஒருக்காலும் மறக்கத்தக்கதன்று.

இங்ஙனம்,

ஜோசியம் நா. அரங்கசாமிபிள்ளை,

சின்னக்கடைவீதி, திரிசிரபுரம்.

உ

கடவுள் துணை.

# நவக்கிரகங்களின் பெயர்.

சத்தாகிச் சித்தாகித்தானு யெங்கும்
சர்வமத சாட்சியாய் சொரூபமாகி
வித்தாகி முளையாகி வெளியாய் நின்று
விளைவதற்கோர் காரணமாய் விரிவாய் நின்ற
சித்தான பராபரத்தின் கிருபையாலே
சோதிடத்திற்ககராதி சுருக்கிச்சொல்ல
முத்தான நவக்கிரகராசி நாளின்
முழுப்பெயரை முன்னுரைத்து மொழிவோம் யாமே.

சூரியன் பெயர்:— அண்டயோனி, அரி, அரியமா, அருக்கன், அருணன், அலரி, அழல்வன், அனலி, ஆதவன், ஆதித்தன், ஆயிரஞ்சோதி, இரவி, இருள்வலி, இனன், உதயன், எல், எல்லை, என்று என்றூழ், எழ்பரியோன், ஒளி, ஒளியோன், ஒற்றையாழியோன, கதிரவன், கனலி, கிரணமாலி, சண்டன், சவிதா, சான்றோன், சித்திரைடாணு, சுடரோன், சூரன், செங்கதிரோன், சோதி, ஞாயிறு, தபனன், தரணி, திவாகரன், தினகரன், தினமணி, நபோமணி, பகலோன், பகல், பங்கயன், பதங்கன், பரிதி, பார்க்கன், பனிப்பகை, பானு, மார்த்தாண்டன், மித்திரன், விகர்த்தனன், விண்மணி, விரிச்சிகன், விரோசனன், வெஞ்சுடர், வெயில், வெய்யோன், ஆக 58. இன்னம் அனந்தம் பெயர் உள

சந்திரன் பெயர்:— அமுதகதிரோன், அம்புலி, அரி, அரிச்சிகன், அலவன், அல்லோன், ஆலோன், இந்து, இமகரன், இராக்கதிர், இனன், உடுபதி, உடுவின வேந்தன், கலாநிதி, கலையின்ன், களங்கன், குபேரன், குமுகநண்பன், குரங்கி, குழவி, சசி, சீதன், சுதாகரன், சோமன், தண்சுடர், தண்ணவன், தாராபதி, தானவன், திங்கள், தெவ்வு, நிசாகரன், நிசாபதி, நிலவு, பசுங்கதிர்த்தே, மிறை, மதி, மதியம், மானேந்தி, முயலின்கூடு, விது, வீபத்து, வெண்கதிரோன், வேந்தன், ஆக 43. இன்னம் அனந்தம் உள.

செவ்வாயின் பெயர்:—அங்காரகன், அரத்தன், அழலோன், அழல், அரிவன், ஆரல், உதிரன், குசன், குருதி, செந்தீவண்ணன், சேய், நிலமகன், பௌமன், மங்கலன், வக்கிரன், ஆக 15. இன்னமுள.

புதன் பெயர்:— அநுரு, அருணன், அநுவழி, கணக்கன், சௌமன், சாமன், சிந்தை, சௌமியன், தூதுவன், தேர்ப்பாகன், நற்கோள், நிபுணன், பச்சை, பண்டிதன், பாகன், பந்தி, புலவன், மதிமகன், மாலவன், மால், மேதை, ஆக 21.

வியாழன் பெயர்:— அந்தணன், அமச்சன், அரசன், ஆசான், ஆண்டளப்பான், குரு, சிகிண்டிகன், சீவன், சுரகுரு, தாராபதி, தெய்வமந்திரி, நற்கோள் பிரகஸ்பதி, பீதகன், பொன், மறையோன், வேதன், வேந்தன், ஆக 18.

சுக்கிரன் பெயர்:—அசுரமந்திரி, அநூவிலன்' ஆசான், உசனன், ஒள்ளியோன், கவி, காப்பியன் சல்லியன், சிதன், சீதகன், சுங்கன், தயித்தியமந்திரி, நற்கோள், பளிங்கு, பார்க்கவன், பிரசுரன், பிருகுபுகர், புயல், மழைக்கோள், வெள்ளி, ஆக 22.

சனியின் பெயர்:— அந்தகன், கதிர்மகன், கரியவன், காரி, கீழ்மகன், சந்தில், சவுரி சாவகன், தமனியன், நீலன், நோய்முகன், பங்கு, மந்தன், முடவன், முதுமகன், மேற்கோள் ஆக 16.

இராகுவின் பெயர்:— கரும்பாம்பு, தமம், மதிப்பகை, மதியுணி, ஆக 4.

கேதுவின் பெயர்:— கதிர்ப்பகை, சிகி, செம்பாம்பு, ஆக 3 இன்னம் அனந்தம் பாம்பின் பெயர்களெல்லாம் பொருந்தும்.

---

## இராசிகளின் பெயர்.

மேடத்தின் பெயர்:—ஆடு, உதன், கொறி, தகர், மறி, மை, யாடு, வருடை.

இடபத்தின் பெயர்:— இடபம், இருல், எருது, ஏறு, குண்டை சே, நந்தி, நரை, பசு, பாண்டில், பாறல், புல்லம், பூணி, பெற்றம், மூரி, விடை.

மிதுனத்தின் பெயர்:— இரட்டை, சயமகன், தண்டு, பாடவன், பாடவை, யாழி, விழவு.

கடகத்தின் பெயர்:— அலவன், கள்வன், குளிர், சேக்கை, ஞெண்டு, நண்டு நள்ளி, மதி.

சிம்மத்தின் பெயர்:— அரிமா, ஆளி, புலி, சிங்கம், இன்னம் சிங்கத்தின் பெயரெல்லாம் பொருந்தும்.

கன்னியின்பெயர்:—மாது, கோதை, இன்னம் பெண்ணின் பெயர்களெல்லாம் பொருந்தும்.

துலாத்தின் பெயர்:— கட்டளை, கோல், சீர், தராசு, துலை, தூக்கு, நிறை, வணிகன்.

விருச்சிகத்தின் பெயர்:— தெறுக்கால், தேள், பறப்பன்.

தனுசின் பெயர்:—காண்டீபம், கொடுமரம், சாபம், சிலை, துரோணம்.

மகரத்தின் பெயர்:—கலை, சுறா, தை, பங்குகிராகம், மான்.

கும்பத்தின் பெயர்:— கரீரம், குடங்கர், குடம், சாடி.

மீனத்தின் பெயர்:— சலசலம், சலசரம், மச்சம், மயிலை.

நட்சத்திரங்களின் பெயர்.

அசுவினியின் பெயர்:— இரலை, ஏறு, இவுளி, ஐப்பசி, சென்னி பரி, புரவி, மருத்துவ நாள், முதனாள், யாழ் வாசி,

பரணியின் பெயர்:— அடுப்பு, காடு, கிழவன், சோறு, தருமநாள், தாசி, தாழி, பகல்வன், பாகு, பூதம், போதம், முக்கூட்டு.

கார்த்திகையின் பெயர்:—அங்கி, அளகு, அளக்கர், ஆறுமீன், அறுவாய், ஆரல், இரால், எரிநாள், தழல், நாடன், நாவிதன், வாணன்.

உரோகணியின் பெயர்:— அயநாள், உருளி, உருள், உரோகணி, ஊற்றல், சகடம், சகடு, சதி, தேர், பண்டி, பார், விமானம், வையம்.

மிருகசீரிடத்தின் பெயர்:— இந்திரன், ஐந்தானம், மான்றலை, நரிப்புரம், பாலை, பேராளன், மதிநாள், மார்கழி, பாழ்கு, மும்மீன், வெய்யோன்.

திருவாதிரையின் பெயர்:— ஆதிரை, ஈசநாள், செங்கை, மூதிரை, யாழ்.

புனர்பூசம்:— அதிதிநாள்; ஆவணம், எரி, கரும்பு, கழை, பாலை, பிண்டி புனர்தம்.

பூசம்:—காற்குளம், குரு நாள், தை, கொடிறு, வண்டு.

ஆயிலியம்:— அரவுநாள், ஆயில், கௌவை, பாம்பு,

மகம்:— ஆதிச்சனி, யெழுவா யெழுஞ்சனி, கொடுநுகம், பிதிர் நாள், மாசி, வாய்க்கால், வேட்டுடன், வேள்வி,

பூரம்:—இடை யெழுஞ்சனி, எலி, கணை, நாவிதன், பகவதிநாள்.

உத்திரம்:—கடை, யெழுஞ்சனி, கதிர், நாள், செங்கதிர்நாள், செங்கதிர், பிரந்தநாள், பங்குனி, பாற்குனி, மானேறு.

அஸ்தம்:— அங்கிநாள், ஐமீன், ஐவிரல், களிறு, கன்னி, காமரம், கைமீன், கைனி கௌத்துவம், நவ்வி

சித்திரை:— அறுவை, ஆடை, சுவை, செவ்வி, தச்சன், துவட்டாநாள். தூசு, நடுநாள், நெய், பயறு, மீன்.

சுவாதி:— அனிலநாள், காற்று, தீபம், துணி, துளக்கம், மரக்கால், விளக்கு, வீழ்க்கை, வெறுநுகம்.

விசாகம்:— அனிலநாள், காற்று முந்து, நாள், சுளகு, சேட்டை, முறம், முற்றில், வைகாசி.

அனுஷம்:—தாளி, தேள், பனை. புல், பெண்ணை, போந்தை, மித்திரநாள்.

கேட்டை:— இந்திரநாள், எரி, செந்தழல், சேட்டை, வல்லாரை, வேதி.

மூலம்:— அசுரநாள், அன்றில், ஆனி, குருகு, கொக்கு, சிலை, தேட்கடை, வில்.

பூராடம்:—உடைகுலம், நீர்நாள் முற்குளம்,

உத்திராடம்:—ஆடி, ஆனி, கடைகுளம், விசுவநாள்.

திருவோணம்:— உலக்கை. ஓணம், சிரவணம், சோணை, நள்ளு, மாயோநாள், முக்கோல், வயிரம்.

அவிட்டம்:—ஆவணி, நாகப்புள், கொடி, பறவை, புள், விசுவ நாள்.

சதயம்:—குன்று, சுண்டன், செக்குபோர், வருணநாள்.

பூரட்டாதி:—நாழி, பூரட்டாதி, முற்கொழுங்கோல்.

உத்திரட்டாதி:— அரியநாள், நீபம் பிற்கொழுங்கோல், மன்னன், முறசு.

இரேபதி.— இரவிநாள், கடைநாள், கலம், குலம், சூலம், தொழு, தோணி, நாவாய், பஃறி, புருடநாள், பெருநாள்.

---

கிரகங்களின் காரகாதிபத்தியங்கள்.

சூரிய காரகாதி பத்தியத்தின் பெயர்:— பிதிர்காரகன், பிரதாபகாரகன், உஷ்ணகாரகன், சத்தியவசன காரகன், ஞான உதயகாரகன், ஆன்மா காரகன், உத்தியோககாரகன், வைத்தியகாரகன், பரிபாலனகாரகன், சித்தம், இவைகளுக்குசூரிய காரகனென்பர்.

சந்திரகாரகாதி பத்தியம்:— மாதுர், இடபாகம், அழகு, குளிர்ச்சி, முகம், சிலேத்துமம், வாசனை, திரவியங்கள், கருமம், சினேகம், முதலியவற்றின் காரகனென்பர்.

செவ்வாயின் காரகாதி பத்தியம்: சகோதிரம், சிறந்தபோர் பூமி, பித்த ரோகம், பராக்கிரமம் முதலியவற்றிற்கு காரகனென்பர்.

புதன்காரகாதி பத்தியம்:— வித்தை, மாதுலன், பந்துத்துவம் கேள்வி, செட்டு, முதலியவற்றிற்குக் காரகனென்பர்.

வியாழத்தின் காரகாதி பத்தியம்:—புத்திரன், வேதத்தெளிவு, நாணயம், ஆபரண முதலியவற்றிற்குக் காரகனென்பர்.

சுக்கிரம் காரகாதி பத்தியம்:— களத்திரம், சந்தோஷம், சுகம், மாணிக்கம், மந்திரம், சம்போகம், வாசனைத் திரவியம், மங்களகரம், அலங்காரம், வாகனம். பசுக்குலச் சேர்க்கை, சுகிர்தமுதலிய வற்றிற்குக் காரகனென்பர்.

சனியின் காரகாதி பத்தியம்:— ஆயிசு, பசி, தாகம், துற்பலம், ஆபத்து, அவஸ்தை, வாதரோகம், இவற்றிற்குக் காரகனென்பர்.

இராகுவின் காரகாதி பத்தியம்:— தீர்த்த யாத்திரை, சாஸ்திர சம்பன்னம், ஐஸ்வரியம், காம சம்போகம், எக்ஷணியாட்டம், பொய்க்குடிலம், வைத்தியம், தைரியம், பகைமை, பாண்டு, ரோகம், களவு, பரகிரகப் பிரவேசம், இவற்றிற்குக் காரகனென்பர்.

கேதுவின் காரகாதி பத்தியம்:— ஞானம், கேவலம், தெய்வத்தியானம், தவசு, மௌனம், வைராக்கியம், சன்னியாசம், நிதானம், திடச்சித்தம், மனவெறுப்பு இலாகிரிப்பழக்கம், வீடின்மை, மோக்ஷசாம்பிராச்சியம், வாழ்வு, இவற்றிற்குக் காரகனென்பர்.

---

இலக்கினமுதல் பனிரெண்டு ஸ்தானங்களின் பெயர்களாவன.

இலக்கினத்தின் பெயர்:— தலை, நிறம், சொரூபம், மூடி, மூர்த்தி, மெய்கீர்த்தி, ஜன்மம், அபிஷேகம், கல்வி சிந்திதம், பிரகிருதி, சந்தோஷம், மலை உயிர், தேகம், மனு இவை இலக்கினத்தின் பெயராம்.

இரண்டா மிடத்தின் பெயர்:— நேத்திரஸ்தானம் (வலதுகண்) பல், வாய், மூக்கு, நாக்கு, வாக்கு, முகம், புருவம், மாரகம், குடும்பம், தனம், சௌபாக்கியம் மூற் ஜென்மம், நெற்றி, பாத்திரம், ஜனரச்சகம், கேள்விஸ்தான மென்றும், மூன்றுமிடத்தின் பெயர்களாம்.

மூன்று மிடத்தின் பெயர்:— வல்லப ஸ்தானம், விஜயம், வெற்றி, பராக்கிரமம், தைரியம், பெலன், சகோதிரம், காவியம், அடிமை, வலதுகாது, ஆயுள், ஆபரணம், நல்ல பூஷணம், சேவகாவிருத்தி, வலதுகன்னம், பலதேச வர்த்தமானம், கேள்விஸ்தான மென்றும்மூன்றுமிடத்தின் பெயராம்.

நாலாமிடத்தின் பெயர்:— உயர்ந்த கல்விஸ்தானம், வாகனம், பூமி, சுகம், சயனம், சௌக்கியம், பந்துக்கள், நிட்சேபம், வஸ்திரம், தடாகம், கிணறு, அன்னை, வர்த்தகம், கண்டம், வலக்கை, வேதநூல், கடவுள் இவை நான்காமிடத்தின் பெயர்களாம்.

ஐந்தாமிடத்தின்பெயர்:— தந்தைஸ்தானம், சேய், பக்தி, புக்தி, மந்திரம், அன்பு, ஞானம், போசனம், பிரபு, மார்பு, புத்திரன், மாமன், இருதயம், பாசம், சிந்தனை, சித்தம், கர்ப்பம், மஞ்சமஸ்தான மென்றும் ஐந்தாமிடத்தின் பெயர்களாம்.

ஆறாமிடத்தின் பெயர்:— அவஸ்தை, ஸ்தானம், பிணி, யுத்தம் ரோகம், சோரம், ஆயுதப்பீடை, துயரம், இரணம், ஆபத்து, வயறு, சத்துரு, கடன், அவமிருத்து, பசி, தெய்வநிந்தனை, யென்றுமாறாமிடத்தின் பெயர்களாம்.

ஏழாமிடத்தின் பெயர்:— களத்திரஸ்தானம், போகம், சுகம், விவாகம், வர்த்தகம், சற்கருமம், யாத்திரை, மனமகிட்சி, நல்யோகம், மாரகம், ஸ்தான மென்றும் ஏழா மிடத்தின்பெயர்களாம்.

எட்டா மிடத்தின் பெயர்:— தண்டனை, ஸ்தானம், கொடுமை, அபானநோய், ஆயுள், தொலை அவமதிப்பு, விதி, அறிவின்மை, எளிய சீவனம், துன்மரணம், ஆயுதபீடை, பகை, விரோதம், பெருந் துயர் விக்கினம், பாழ், பிழைஸ்தானமென்றும் எட்டாமிடத்தின் பெயர்களாம்.

ஒன்பதாமிடத்தின் பெயர்:— நிதி, திரவியம், பாக்கியம், சினேகம் குருபக்தி, திருப்பணி, தருமம், தவம், பகுணம், பக்தி, நவமணி, புத்திரர், வித்தை, மாளிகை, பிதிர், சுகம், உபதேசம், யோகம், ஞானம், இவை ஒன்பதாமிடத்தின் பெயர்களாம்.

பத்தாமிடத்தின்பெயர்.—துடை வள்ளம், இடதுகை, வெகுமானம், காரியம், கருத்ம், தொழில், வியாபாரம், உத்தியோகம், தெய்வபக்தி, பிரதிஷ்டை, பூர்வகருமம், சற்கருமம், மெஞ்ஞானம், கருணை, வேளாண்மை, இவைபத்தாமிடத்தின் பெயர்களாம்.

பதிநோரா மிடத்தின் பெயர்:—இடதுசெவி, இடது கன்னம், இடதுகால், இடது துடை, புதையல், துயர்நிவர்த்தி, ஜேஸ்ட சகோதிரம், களவு, வம்பு, மூர்க்கம், துற்சேர்க்கை, சூது, ரசவாதம், கபடம், துன்மார்க்கம, அறிவு, சிவிகை, ஆயம், லாபம், விரையம், வியம் இலக்கின மூலமென்றும் பதிநோராமிடததின் பெயர்களாம்,

பனிரெண்டாமிடத்தின் பெயர்:- ஜீவனம், வேள்வி, வியாச்சியக்கவலை, சன்னியாசம், அசௌக்கியம், யூழி திரவியசேதம், தேசாந்திரம், சாவு, துற்சேர்க்கை, செலவு, மோக்ஷம், தியாகம், சயனம், அழிவு, பதவி. சிவயோகம், சமாதி, இடதுகண், இவை பனிரெண்டாமிடத்தின் பெயர்களாம்.

கடவுள் துணை.

# சோதிட அகராதி.

உடல்பொருளாவிக் குடையோனெவனே.
அகராதிக் கவனே காப்பு.

அ

அ-முதலெழுத்து, கணிதத்திற்கு எட்டென்னு மெண்ணின்குறி.

அகணித பஞ்சாங்கம்— அலகிடாது சொல்லும் பஞ்சாங்கம்.

அகணித பஞ்சாங்கி— கணக்கிடப்படாது பஞ்சாங்கம்சொல்லுவோன்.

அகணிதம்— மனக்கணிதம், ஓர் சோதிடநூல், கணக்கின்மை

அகஸ்தியர்— தமிழ்ப் பாஷையில் சோதிடம் பாடியவர்களிற் ஓர் இருஷி.

அகர்பதி-சூரியன்.

அகர்பதி, அகர்மணி — உதயற்காலம்

அகி—இராகு, ஓர் வால் நட்சத்திரம்.

அக்கினிநாள்-கொடியநாள்

அசீதகரன்-சூரியன்

அசுபதி-ஓர் நட்சத்திரம், முதல் நட்சத்திரம்.

அசுரகுரு-சுக்கிரன்

அசுரநாள்-மூலநாள்

அசுரமந்திரி-சுக்கிரன்

அசுவினி- முதல்நட்சத்திரம்

அசௌக்கிய ஸ்தானம் - பனிரெண்டாமிடம்.

அஸ்தமனம்— அத்தமனம், சூரியன் மேல்திசையில் அடங்கும் சமயம்.

அட்டமம்— உதயலெக்கினத்திற் கெட்டாமிடம்.

அருத்

அஞ்சனன்-சனி

அஞ்சிடன-சூரியன்

அதிகண்டம்— நித்திய யோகங்களிலொன்றுபிராணவஸ்தை.

அதிகமாதம்— ஆறுவருஷத்திற் கொருதரம் ஒரு வருஷத்திலதிகநாளாகும் மாதம்.

அஸ்தம், அத்தம் — அஸ்தமிக்கை ஓர் நட்சத்திரம்.

அத்தன்—உதய லெக்கினத்திற்குப் பதிஞேரா மிடம், ஒன்பதா மிடத்திற்கும் பொதுப்பெயர்.

அத்தியாசனம்— ஏகோதிட்டம், அபரக்கிரிகையின் ஓர் பகுதி.

அதிதிநாள்-புணர்பூசம்

அத்திரிசாதன்-சந்திரன்

அரசன்-வியாழன்

அரத்தன்-செவ்வாய்

அரவு-இராகு-கேதுக்களுக்குப் பொதுப் பெயர்

அரவுநாள்-ஆயிலியநாள்

அரா-இராகுகேது

அரி-சந்திரன்

அரிட்டம்-தோஷம்

அரிச்சிகம்— சந்திரன், சூரியன், சிம்மவிராசிக்கும் பெயர்

அரிமா-சிங்கவிராசி

அரியமா, அருக்கன் — சூரியன், சிம்மவிராசிக்கும் பெயர்

அருணன்-புதன்
அருத்தோதயம்— குரு அஸ்தமிக்க சூரியன் உதிக்கும் சமயம் அறுபது வருஷத்திற்கொருதரம் தைமாதத்தில் ஓர் ஞாயிற்றுக் கிழமையில் சூரியன் மகரத்திலும் சந்திரன் விதீபாத யோகங்கூடின திருவோண நட்சத்திரத்திலும் இருந்து ஒன்றாக உதயமாதல் இந்நாளில் தீர்த்தவிசேட கட்டத்தில் ஸ்நானஞ்செய்து தரும தானம் செய்யில் விசேடம்.
அருந்ததி—ஓர் நட்சத்திரம், வசிஷ்டர் மனைவி.
அருந்ததி காட்டல்—கற்பில் அருந்ததிபோலிருக்கும் கலியாணத்தில் மணப் பெண்ணுக்கு அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டல்.
அருத்தநாள்-பாதிநாள்
அந்திப்பொழுது - சந்தியாவந்தனம் செய்யுங்காலம், மாலை
அந்திசந்தி- காலைமாலை
அந்தகன்-சனி
அந்தணன்-வியாழன்
அந்தியகாலம்-மரணகாலம்
அந்தியகருமம்-மரணச்சடங்கு
அந்தியமம்-இரேவதி
அபசித்து மூர்த்தம் எட்டாமூர்த்தம்.
அபமிருத்து-அபமரணம்
அநாவிலன்-சுக்கிரன்
அபரபக்கம் சந்திரன்பின்பக்கம்
அபசவ்வியம்-இடதுபக்கம்
அபிசித்து—ஒரொட்டு நட்சத்திரம், இது உத்திராடத்திற்குப் பின்சோதிட விஷயமாய் சேர்க்கப்படுவது ஓர் முகூர்த்தம்.
அபிஷேகஸ்தானம் - இலக்கினம்
அப்தம்-ஆண்டு
அப்பன்வீடு உதயலக்கினத்திற்கு ஒன்பதாமிடம், பிதிர்வீடு
அமைச்சன்-வியாழன்
அமாவாசி-இரவிமதியோகம், சூரிய சந்திரர் கூடும் நாள்.
அமிர்தகிரணன் / அமுதகிரணன் / அமுதகதிரோன் } சந்திரன்
அமைப்பு-விதி
அம்புலி / அம்புலிமான் } சந்திரன்
அயனகாலம்—சூரியன் ஒரு அயனத்தை சுற்றிவருங்காலம்
அயனுள்-உரோகணி
அலரி-சூரியன்
அலவன் கற்கடகவிராசி, சந்திரன்
அலிக்கிரகம்-புதன், சனி
அல்லோன்-சந்திரன்
அவசித்து—உத்திராடத்திற்கும், திருவோணத்திற்கும், நடுநாள்
அவமானம்—லெக்கினத்திற் கெட்டாமிடம்
அவமானத்திறை - எட்டாமிடத்ததிபதி.
அவிட்டம்—ஓர்நாள், ஓர் நட்சத்திரம்.
அழல்வன் / அழலோன் } சூரியன் செவ்வாய்க்குப் பொதுப் பெயர்
அழல்—கேட்டை நாள், செவ்வாய்
அழிவு-பனிரெண்டாமிடம்
அறிவநாள்-உத்திரட்டாதி
அறிவன்-செவ்வாய் புதனுக்கும் பொதுப் பெயர்.
அறுவாய்-காத்திகை

அறுவை-சித்திரை சட்சத்திரம்
அறிவின்மைஸ்தானம்- எட்டாமிடம்
அனலி-சூரியன்
அனிலநாள்-சோதி விசாகநாளுக்கும் பெயர்
அனுரு-புதன்
அனுவழி-புதன்
அனுமதி-பௌரணை
அன்றில-மூலநட்சத்திரம்
அன்னகோட்டகன்-சூரியன்
அன்பு-ஐந்தாமிடம்
அன்னை-நாலாமிடம்
அங்காரகன்-செவ்வாய்
அங்கி-கார்த்திகைநாள்
அங்கிநாள்-அஸ்தநாள்
அடுப்பு-பரணநாள்
அண்டயோனி-சூரியன்
அளகு }
அளக்கர் } கார்த்திகை
அம்மை-மறுபிறப்பு
அவமிருத்து ஸ்தானம்ஆறாமிடம்
அவஸ்தை }
அவமிருத்து } லெக்கினத்திற் காராமிடத்தின்பெய
அவமதிப்பு ஸ்தானம்—எட்டாமிடத்தின்பெயர்

ஆ

ஆக்கிரகாய்னி-மிருகசீரிடம்
ஆங்கிரசு ஓர் வருஷம்
ஆசனன்-சுக்கிரன்
ஆசான்-வியாழன் சுக்கிரனுக்கும் பொதுப்பெயர்
ஆசிரபம்-மூலநட்சத்திரம்
ஆசுவினம் }
ஆசுவிசம் } அற்பசிமாதம்
ஆசௌசம்-அசுத்தம், தீட்டு,சூதகம்
ஆச்சந்திரார்க்கம்- சூரியசந்திருள்ள மட்டும்
ஆடி-ஓர் மாதம், உத்திராடநாள்
ஆடு-மேடராசி
ஆடை-சித்திரைநாள்
ஆட்டை-மிதுனராசி, ஆண்டு
ஆண்டு-வருடம்
ஆண்டளப்போன்—வியாழன்
ஆதபன் }
ஆதவன் } சூரியன்
ஆதித்தன் }
ஆதாயம்-லெக்கினத்திற்குப் பதினோராமிடம்
ஆதி—சூரியன்
ஆதிரை-திருவாதிரைநட்சத்திரம்
ஆதிச்சனி-மகநட்சத்திரம்
ஆதேசப்-கிரகசாரம்
ஆத்திரேயன்-சந்திரன்
ஆபோக்கிலியம்-லெக்கினத்திற்கு மூன்றும், ஆறாம், ஒன்பதாம், பனிரெண்டாமிடங்கள்
ஆயம் - இலக்கினத்திற்கும் பதினோராமிடம்
ஆயனம்-வருடம்
ஆயிரங்கதிரோன் }
ஆயிரஞ்சோதி } சூரியன்
ஆயிரங்கிரணன் }
ஆயிலியம்-ஓர்நாள்ஓர்நட்சத்திரம்
ஆயில்-ஆயிலியம்
ஆயுள்காரகன்-சனி
ஆயுட்டானம் - இலக்கினத்திற்கு எட்டாமிடம் மூன்றுமிடம் சந்திரனிருந்த வீட்டிற்கு மெட்டாமிடம்
ஆயுதபீடை-இலக்கினத்திற்கு ஆறாமிடம்
ஆரல்-செவ்வாய், கார்த்திகைநட்சத்திரம்
ஆரியன்-வியாழன்
ஆருத்திரை-திருவாதிரை நட்சத்திரம்

ஆர்மதி-கற்கடகவிராசி
ஆலோன்-சந்திரன்
ஆவணப்-புனர்பூசம்
ஆவணி-ஓர்மாதம், அவிட்டநாள் சிராவணம்
ஆவணியவிட்டம்- ஆவணிமாதத்தில் வருஷம் விசேஷமான அவிட்டநட்சத்திரம்
ஆறுமீன்-கார்த்திகைநட்சத்திரம்
ஆனி-ஓர்மாதம், உத்திராட நாள்
ஆனியம்-மூலநாள்
ஆபரணஸ்தானம் இலக்கினத்திற்கு மூன்றாமிடம்
ஆபத்துஸ்தானம் இலக்கினத்திற்காறாமிடம்
ஆளி-சிம்மவிராசி

இ

இகழ்ச்சிஸ்தானம் - இலக்கினத்திற்காறாமிடம்
இசைநாள்-உத்திரட்டாதி, பூரட்டாதி
இடபவீதி-சூரியன் மூவகை வீதியில் நடுவீதி
இடபம்-இடபராசி, யெருது
இடதுசெவி, இடதுகன்னம், இடதுகால், இடதுதுடை } இவை இலக்கினத்திற்கு பதினோரா மிடத்தின் பெயர்
இடை-பௌரணை
இடைச்சனி, இடையெழுஞ்சனி } பூரநட்சத்திரம்
இந்தரி-இராகு
இந்திரநாள்-கேட்டை
இந்திரன்-மிருகசீரிடம்
இந்திரகூடல்-அமாவாசை
இந்து-சந்திரன்
இந்துபம்-மிருகசீரிடம்

இபவ-விபவ வருஷம், ஓர் வருடத்தின் பெயர்
இமகரன்-சந்திரன்
இரங்குமிராசி-கடகமுதல் தனுசு வீருகவுள்ள ராசி
இரணத்துருவம்-கிரகஸ்புடத்தில் கழிக்கப்படுவது
இரட்டை மிதுனவிராசி
இரவி-சூரியன்
இரவிநாள் இரேவதிநாள்
இரவு-நிசி, இரா, இராத்திரி
இரலை-அசுவதி-நட்சத்திரம்
இரவோன், இராமன் } சந்திரன்
இராகு-கரும்பாம்பு நவக்கிரகங்களிலொன்று
இராகுகாலம்-இராகுவின் காலம்
இராக்கதிர்-சந்திரன்
இராசதம் முக்குணவேளையிலொன்று
இராசி-ஓரை, கூட்டம், இல், பவனம்
இராசி சக்கரம்-இராசி மண்டலம்
இராசி நாதன் - அவ்வவ்விராசியினின்று ஆளுகை செய்யும் கிரகம், இராசியாதிபதி
இராசிபுடம்-இராசிகளில் கிரகம் நிற்குநிலை
இராசிப்பொருத்தம்-இராசியிணக்கப் பொருத்தத்தி லொன்று
இராசிமண்டலம் - இராசிவட்டம்
இராசுவட்டம்-இராசிசக்கரம்
இரா-இரவு, நிசி, இரா
இரால் - இடபராசி, கார்த்திகை நாள்
இருசுடர்-சூரிய சந்திரர்
இருதயம் - இலக்கினத்திற்கு ஐந்தாமிடம்

ஈர்ங்

இருது-இரண்டுமாதப்பருவம்
இருதுகாலம் - கருப்பந்தரிக்கும் நாள்
இருத்தை - இருபத்துநாலு நிமிஷங்கொண்ட ஓர் நாழிகை, சந்திரன் நாலு ஒன்பது பதிஞேராம் பக்கம்
இருள்-அந்தகாரம்
இருள்வலி-சூரியன்
இருபிறப்பு-சந்திரன்
இனன்-சூரியசந்திரர் [கடைநாள்
இரேவதி - கடைசி நட்சத்திரம்
இரௌத்திரி-ஐம்பது நாலாவது வருடம், முகூர்த்தம்
இலக்கினம்-இராசிகளின் உதயம்
இலக்கினபுடம் - இராசியைப்பற்றிவரும் சுத்தபுடம்
இலம்பிதம்-சந்திரபுடத்தைச்சூரியபாதையில் சேற்குமோரளவு
இலாபஸ்தானம் - இலக்கினத்திற்
இல்-இராசி [குபதிஞேராமிடம்
இளவேனில் சித்திரவைகாசி பருவம்

ஈ

ஈசநாள்-ஆதிரைநாள்
ஈச்சுர } பதிஞேருவதுவருடம்
ஈஸ்வர }
ஈரவன் } சந்திரன்
ஈர்ங்கதிர் }

உ

உசனன்-சுக்கிரன்
உச்சம்-உயர்ச்சி, கிரக உச்சம், நீச்சத்திற்கேழாமிடம்
உச்சக்கிரகம்-உயர்ச்சி பெற்றகிரகம், சுபக்கிரகநிலை
உச்சி-நண்பகல்
உடுப்பகை-சூரியன்
உடுபதி-சந்திரன்

உதய

உடுவின் காந்தன் } சந்திரன்
உடுவின் வேந்தன் }
உடைகுளம்-பூராடநட்சத்திரம்
உஷ்ணகாரகன்-சூரியன்
உத்தியானுசன்-வியாழன்
உதயம்-உதயவிராசி இலக்கினம், உதித்தல், கிரகத்தோற்றம்
உதயகாலம் } அருஞேதயம்
உதயகாலை }
உதயன் -சூரியன்
உதயாதி-விடியல்
உதயலக்கினம்-ஜென்ம லக்கினம் தற்காலத்துதிக்கும் விராசி
உதயாதிபன்-ஜென்மராசியிலிருக்
உதரதி-சூரியன் [கும் கிரகம்
உதன்-மேடவிராசி
உதிரன்-செவ்வாய்
உந்தரகாலம்-சாந்திரமாதம், அதுபூரணை துவக்கி மற்ற பூரணையளவும் வருங்காலம்
உத்தரகிரியை-அசுபக்கிரியை
உத்தரபாத்திரபதம் - இரேவதி, உத்திரட்டாதி [திரம்
உத்தரபாற்குனி - உத்திரநட்சத்
உத்தரமந்தோச்சம் - சூரியனுக்கும் கிரகத்துக்குமுள்ளதூரம்
உத்தரம - உத்திர நட்சத்திரம், மறுமொழி
உத்தியோகஸ்தானம்-பத்தாமிடம்
உதயகாரகன்-சூரியன் [ம்
உத்தராயணம்- சூரியன்வடக்கில் சஞ்சரிக்கும் தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனியென்னும் ஆறுமாதகாலம்
உத்தானம்-அஸ்தநட்சத்திரம்
உத்திரட்டாதி- இருபத்தாராவது நட்சத்திரம் [நாள்
உத்திரம்-ஓர் நட்சத்திரம், சூரிய

உத்திராடம்-ஓர் நட்சத்திரம்
உத்கியோகஸ்தானம் - லெக்கின த்திற்கு பத்தாமிடம்
உத்தியோககாரகன்-சூரியன்
உபசயம்-முதலாமிராசியிலிருந்து மூன்றும் ஆறும் பத்தாம் பதி னோராமிடங்களுக்குப்பெயர்
உபநயனம்-பூநூற்சடங்கு
உபதேசம்-லெக்கினத்திற்கு ஒன் [பதாமிடம்
உபயம்-இரண்டு
உபயராசி-மிதுனம், கன்னி, தனி சு, மீனம்
உருளி
உருள் } உரோகணிநட்சத்திரப்
உரோகணி
உரோகணி
உரோணி } ஓர் நட்சத்திரம்
உரோகஸ்தானம் -லெக்கினத்திற் காராமிடம்
உலக்கை-திருவோணநக்ஷத்திரம்
உலகநேத்திரன்
உலகபாரணன் } சூரியன்
உவா-அமாவாசை
உவாமதி-பூரணசந்திரன்
உயிர்-லெக்கினம், யெட்டாமிடத் திற்கும் பெயர்
உயர்ந்தகல்விஸ்தானம் - லெக்கி னத்திற்கு நாலாமிடம்

ஊ

ஊர்ச்சம்-கார்த்திகைமாதம்
ஊற்றால்-உரோகணி நட்சத்திரப்

எ

எக்ஷணி-குறிசொல்லும்தேவதை
எக்ஷணிகாரகன்-இராகு [டம்
எண்சாஸ்திரம்-கணிதம், சோதி
எதிர்நோக்கு நட்சத்திரம்-எதி நாள், பக்கநாள்
எதிர்நோக்கு - ஏழாம் பார்வை,



எயிறிலி-சூரியன் [நேர்பார்வை
எரி-புணர்பூசம், கேட்டை நட் சத்திரம்
எரிநாள்-கார்த்திகை நட்சத்திரம்
எருது-இடபவிராசி
எலி-பூரநட்சத்திரம்
எலித்திசை-வடமேற்றிசை
எல்-சூரியன், நாள்
எல்லவன்-சூரியன், சந்திரன்
எல்லை
எல்லி } சூரியன்
எல்லிநாதன்-சந்திரன்
எல்லிப்பகை-சூரியன்
எல்லு
எல்லோன் } சூரியன்
எழுவாயெளுசனி-மகநக்ஷத்திரம்
என்றவன்
என்று
என்றாழ் } சூரியன்

ஏ

ஏழாமிடம்-களத்திரஸ்தானம்
ஏழ்பரியோன்-சூரியன்
ஏழ்பிறப்பு-ஊர்வன, தாவரம், தேவர், நீர்வாழ்வன பரவை, மக்கள், விலங்கு
ஏறு-அசுபதி, இடபராசி
ஏரி-புனர்பூசம்

ஐ

ஐந்தானம்-மிருகசீரிடம்
ஐந்திரி-கேட்டை நட்சத்திரம்
ஐப்பசி-ஓர் மாதம், அசுவினாள், ஆசுவீனம், ஆசுவீசம்
ஐமீன் அஸ்தநட்சத்திரம், உரோக ணி நட்சத்திரம்
ஐவிரல்-அஸ்தநட்சத்திரம்

ஒ

ஒளியோன்-சூரியன்
ஒளிசூரியசந்திரர்பொதுப்பெயர்

கர்ப்

ஒள்ளியோன்-சுக்கிரன்
ஒற்றையாழியோன்-சூரியன்

ஓ

ஓடதிபதி-சந்திரன்
ஓரை-இலக்கிணம், ஐந்துநாழிகை [நேரம்
ஓரைக்கதிபன் - இலக்கிணதிபதி, ராசிக்கதிபதி
ஓணம்-திருவோரை நட்சத்திரம்

க

ககன்-சூரியன்
கங்குல்-பரணிநாள், இருள்
கங்குற்கிறைவன்-சந்திரன்
கஞ்சரன்-சூரியன்
கசரிபு-சிங்கம்
கடன்ஸ்தானம் - லெக்கினத்திற் [காறுமிடம்
கடையெழுஞ்சனி-உத்திரநாள்
கடைக்குளம்-உத்திராடநாள்
கடைநாள் } ரேவதி நக்ஷத்திரம்
கடைமீன்
கட்டளை-துலாராசி
கணக்கன்-புதன்
கணிதம்-எண்ணிக்கை, சோதிட நூல், அறுபத்துநாலு கலைக்கியானத்திலொன்று, கணிதம் யெட்டுவகைப்படும் அவை-சங்கலிதம், விபகலிதம், குணனம் பாகாரம் வர்க்கம், வர்க்கமூலம், கனம், கனமூலம், இவற்றுள் சங்கலிதமென்பது கூட்டல், விபகலிதமென்பது கழிச்சல், குணனமென்பது பெருக்கல், பாகாரமென்பது பங்கிடல், வர்க்கமென்பது சமமாகிய வீரெண்ணின் பெருக்கம், வர்க்கமூல மென்பது அதன் வரம் பறிதல், கனமென்பது சமமாகிய மூவெண்ணின்பெருக்கம், கனமூலமென்பது அதன் மூலமாகிய ஒருமூலையறிதல்

கர்ப்

கனை பூரம்
கண்டீரவம்-சிங்கம்
கண்டம்-லெக்கினம் நாலு, யேழு பத்தாமிடங்கள்
கதிர்-சூரியன்
கதிரவன் } சூரியன்
கதிரோன்
கதிர்நாள்-உத்திரநட்சத்திரம்
கதிர்ப்பகை-கேது
கதிர்மகன்-சனி
கத்தரி-அக்கினிநட்சத்திரம்
கயினி-அஸ்தநட்சத்திரம்
கர-இருபத்தைந்தாவது வருடம்
கரி-சனி
கரீரம்-கும்பவிராசி
கரும்பு-புணர்பூசம்
கருங்கோள்-இராகு
கருமஸ்தானம்- லெக்கினத்திற்கு பத்தாமிடம்
கருடற்கண்ணன்-புதன்
கருநாகம் } இராகு
கரும்பாம்பு
கருப்பஸ்தானம் - லெக்கினத்திற்கு ஐந்தாமிடம்
கர்ப்போட்டம்-இது மார்கழிமாதத்தில் சூரியன் தனுசில் பிரவேசித்த பதிமூன்றேமுக்கால் நாளுக்குமேல் பனிரெண்டுநாள் மேகம் கருக்கொள்ள வோடும் நாள்.
கர்க்கடகம்-கடகவிராசி
கலம்-இரேவதி
கலாநிதி-சந்திரன்
கலாபதி
கலாபூரணன்
கலாமிருது } சந்திரன்
கலாவதி

கரக

கலி-சனி
கலியாப்தம-கலிவருடம்
கலிந்தன்-சூரியன்
கலியுகம்-கடையுகம் இது நாலு லெக்ஷத்தி முப்பத்தீராயிரம் வருஷம் கொண்டது.
கலிலம் - அவயவங்க ளமையாது சுக்கிலசுரோணிதங்கள் திரண்டு ஒன்று சேர்ந்த பிண்டத்தின் பெயர்.
கலை-மகரவிராசி, சந்திரன் ஒரு பாகையில் அறிபதிலொன்று.
கலையினன்-சந்திரன்
கல்விஸ்தானம்- லெக்கினத்திற்கு நாலாமிடம்
கழை-புணர்பூசம்
களங்கன்-சந்திரன்
களத்திரகாரகன்-சுக்கிரன்
களத்திரம்-லெக்கினத்திற் கேழாமிடம்
களவன் } கற்கடகவிராசி
கள்வன் }
களிறு-அஸ்தநட்சத்திரம்
கனலி-சூரியன்
கன்னி - அஸ்தநட்சத்திரம், ஓர் ராசி, இதற்கு மாதர்களின் பெயரெல்லாம் பொருந்தும்.
கவி-சுக்கிரன்
கவிப்பு-ஆரூடத்திற்கு சூரியனிற்கு நிலை

கா

காகவாகனன் } சனி
காககேது }
காகப்புள் } அவிட்டநாள்
காக்கை }
காப்பியன்-சுக்கிரன்
காரி-சனி

கிரக

காரியஸ்தானம்-லெக்கினத்திற்கு பத்தாமிடம்
கார்-ஆவணி புரட்டாசிமாச பருவம்
கார்கோள்-சனி
கார்த்திகை-ஓர் நட்சத்திரம், ஓர் மாதம்
காமன்-சுக்கிரன்
காமம்-ஏழாமிடம்
காமீ யேழுக்குடையவன்
காமரம்-அஸ்தம்
காமபதி-யேழுக்குடையவன்
காலசக்கரம்-ஆயுட்காலம், கிரக பலசக்கரம்
காலபுருஷம்-ஓர் சோதிடநூல்
காலயுத்தி - ஐம்பத்திரண்டாவது வருடம்
காலன்-சனி
காற்குளம்-பூசநட்சத்திரம்
காற்றுநாள்-சோதிநாள்
காற்றுமுந்துநாள்-விசாகம்

கி

கிரகம்-கோளவக்கிரகம் - ஒன்பதுக்கும் பொதுப்பெயர்
கிரகபதி-சூரியன்
கிரகசாந்தி-தோஷநிவர்த்தி
கிரகசாரம்-கிரகநடை
கிரக செபம் - கிரக ஆராதனையிலொன்று
கிரகணம் - சூரிய சந்திரர்களுக்கு இராகு கேதுக்களால் வரும்பீடை
கிரகதானம் - கிரகா ராதனையில் ஒன்று
கிரகதிமை-கிரகதோஷம்
கிரகநிலை-கிரகநிற்கும்நிலை
கிரகநீசம்-கிரகங்கள் நீசம் பெறுதல் கிரகம் பெலக்குறை வடைதல்
கிரகநோக்கு-கிரகபார்வை

குதப

கிரகப்பகை- கிரகங்கள் ஒன்றுக் கொன்று பகைப்படுதல்
கிரகபாடு-சூரியனோடு வேறெந்த கிரகமாவது சேர்ந்து ஓர் ராசி யில் நிற்றல்
கிரகப்பிரீதி - கிரகத்திற்குத் திருப்தி செய்தல் [பீடை
கிரகபீடை-கிரகநிலையினால் வரும்
கிரகபுடம்-கிரகங்களின் தற்கால
கிரகமாலிகை-கிரகஒழுங்கு [நிலை
கிரகவட்டம்-கிரக சக்கரம்
கிரணமாலி
கிரணன் சூரியன்
கிரந்த கர்த்தர்-நூலாசிரியர்
கிராந்தி மண்டலம் - சூரியனது பாதை
கிரி-லெக்கினம்
கிருதாந்த சனகன்-சூரியன் [ரம்
கிருத்திகை-கார்த்திகை நட்சத்தி
கிழமை-வாரம்
கிழவன்-பரணிநாள்
கிழான்-சூரியன்

கீ

கீர்த்திஸ்தானம்-லெக்கினம்
கீசன்-சூரியன்
கீழ்மகன்-சனி

கு

குரு-அமாவாசை
குடங்கர், குடம் } கும்பவிராசி
குடும்பஸ்தானம்-இரண்டாமிடம்
குணதிசை-கிழக்கு
குண்டை-இடபராசி
குசன்-செவ்வாய்
குசேசசயகரன்-சூரியன்
குதப்காலம் - பிதிர் புண்யகாலம் இது பதினேழரை நாழிகை முதல் இருபது நாழிகைவரை,

குதப

குதபன்-சூரியன்
குபேரன்-சந்திரன், வடக்கு
குமுதசகாயன், குமுதநண்பன், குமுதபதி, குமுதபாந்தவன் } சந்திரன்
கும்பி-கும்பராசி
கும்பம்-ஓர் ராசி, மேடத்திற்கு பதினோராமிராசி
குரங்கி-சந்திரன்
குரு-வியாழன்
குருநாள்-பூசம்
குருகடாக்ஷம்-வியாழத்தின் கிருபை
குருகு-மூலநாள் [பை
குருச்சந்திரயோகம்-கடகம், மகரம் லெக்கினமாக விருந்து வியாழனும் சந்திரனுங்கூடி லெக்கிணத்திலாவது யேழிலாவது யிருக்கும் யோகம்
குருதி-செவ்வாய்
குருத்துரோகி-சந்திரன் [பெலன்
குருசாரபலன் - வியாழகெதியின்
குருபுகர் சந்திரயோகம் - வியாழன், சந்திரன், சுக்கிரன், மூன்றுபேரும் ஒருராசியில் நிற்ப
குருபுடம்-வியாழபுடம் [து
குருவாரம்-வியாழக்கிழமை
குரோதன-ஐம்பத்தொன்பதாவ
குலம்-இரேவதி [துவருடம்
குலவாரம்-அங்கார சுக்கிரவாரங்
குலாகுலதிதி-ஆறுந்திதி [கள்
குலாகுலவாரம்-புதவாரம்
குளிகன-சனியின்பிள்ளை, தூமாதி பூஞ்சகிரகங்களிலொன்று
குளிர்ச்சேர்க்கை-கடகவிராசி
குறிப்பு-பிறந்தநாளை (தினசுத்தியை) எழுதிவைக்கும் ஓலை
குறிப்பு ஓலை-சாதக ஓலை

கொடு

குழவி-சந்திரன்
குவலயப்பிரியன்-சந்திரன்

கூ

கூதிர்காலம்-குளிர்காலம் [ணமி
கூர்த்தநீ-சித்திரைமாசம் பௌர

கெ

கெற்போட்டம்- கருப்போட்டம் மார்கழிமாதத்தில் அவ்வவ்மாதத்தைப்பற்றிமேகமோடுவது
கெண்டம்-தத்து அது கால், அரை, முக்கால், முழுக்கெண்டமென்று நாலுவகையாம்

கே

கேது-ஓர் கோள்செம்பாம்புமோக்ஷகாரகன்
கேந்திரம்-உதயம், நான்காமிடம், யேழாமிடம், பத்தாமிடம், வட்டத்தின்பத்தி [நிற்றல்
கேந்திரித்தல்-கேந்திரம் பெற்று
கேரளம் - சோதிட சாஸ்திரத்திலொன்று மலையாளதேசத்தில் வழங்கிவரும் நூல்

கை

கைமீன் } அஸ்தநாள், அத்தநட்
கைனி } சத்திரம்

கொ

கொக்கு-மூலநாள்
கொடி—அவிட்டநாள்
கொடியன்-கேது
கொடிவாகனன்-சனி
கொடிறு-பூசநட்சத்திரம்
கொடுநுகம்-மகநட்சத்திரம்
கொடுமரம்-தனுவிராசி
கொடும்புலி-சிம்மவிராசி
கொறி-மேடவிராசி [மிடம்
கொலை - லெக்கினத்திற்கெட்டா
கொலையோன் - எட்டாமிடத்ததிபதி

கோ

கோகிலாஷ்டமி - ஆவணிமாதத்தில் கிருஷ்ணன் பிறந்ததினம் ஸ்ரீ ஜயந்தி
கோசாரபலன் - தற்காலம் நவக்கிரகங்கள் நிற்கும் நிலையின்பேரில் பலன் சொல்லும் விதத்திலொன்று
கோசாரம் - சந்திரராசியிலிருந்து கிரகங்கள் நிற்கும் நிலை
கோணம் - திரிகோணம் ஒன்று ஐந்து ஒன்பதா மிடத்தின் பெயர்
கோணமாதம்-மார்கழிமாதம்
கோதை-கன்னியாராசி
கோபதி-சூரியன்
கோய்-பரணி நட்சத்திரம்
கோல்-துலாவிராசி
கோலாட்டமி-கார்த்திகை மாதத்து பூர்வபக்கத்தட்டமி
கோளம் - சனி செவ்வாய்க்கும் பொதுப்பெயர்
கோளரி-சிம்மவிராசி
கோன்-வியாழன்
கோள-கிரகம்
கோள்சாரம்-கோசாரம்

கௌ

கௌஸ்துவம் } அஸ்த நட்சத்
கௌத்துவம் } திரம்
கௌமுதம் - கார்த்திகை மாதம்
கௌமுதீபதி-சந்திரன்
கௌமோதம் கார்த்திகைமாதம்
கௌதை-ஆயிலியம்

ச

சகசட்சு } சூரியன்
சகசாட்சி }
சகடயோகம்-வியாழனுக்கு ஆறு

யெட்டு பனிரெண்டில் சந்திரனின்று இருவர் நிற்கும் ஸ்தானங்களும் சத்துரு அல்லது நீச்சம்பெற்று நிற்பது
சகடம் } உரோகணி
சகடு }
சகத்திராமீசன்-சூரியன்
சக்கராதி-வியாழன்
சகுணம்-நிமித்தம் [ன்று
சகுனி-கரணம் பதினொன்றிலொ
சகோதரத்தானம் - ஜென் மராசிக்கி மூன்றுமிடம்
சக்கரம் - அறுபது வருடங்கொண்ட ஒரு வட்டம்
சக்கிரபந்து-சூரியன்
சக்கிரவாந்தவன்-சூரியன்
சங்கிரமம் - கிரக நடை, மாதப்பிறப்பு
சங்கிரமித்தல்-சூரியமுதலிய கிரகங்கள் ஒரு ராசியிலிருந்து வேறொரு ராசிக்குப்போகுதல்
சங்கிராந்தி-தைமாசப்பிறப்பு
சசதரன் } சந்திரன்
சசாங்கம் }
சசி }
சசிகன்னம்-பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரம்
சசித்துருவம்-சந்திரன் நிலை
சசிப்புடம்-சந்திரன் சுத்தப்புடம்
சஞ்சயனம்-இறந்தவர்களின் இரண்டாநாள் கிரிகை, காடாற்றுதல்
சட்சி } ஆறுந்திதி
சஸ்டி }
சண்டன்-சூரியன்
சதயம்-ஓர் நட்சத்திரம்
சதி-உரோகணி
சத்தமி } ஏழாந்திதி
சப்தமி }
சத்துருஸ்தானம்-லெக்கினத்திற்காறுமிடம்
சந்திரன்-சம்பவபுதன்
சந்திரமங்தோச்சம்-சந்திரன் சூரியனுக்குத் தூரமாய்ப் போகத்தக்கமுனை
சந்திரநாசம்-இராகு
சந்திரநாள்-திதி, கலை, சுக்கிலம், பூருவம், சந்திர நாளின் கூறுபாடுகளாவன நந்தை, பத்திரை, சயை, இருத்தை
சந்திரன்-சந்திரபகவான், நவக்கிரகங்களில் சுபக்கிரகங்களிலொன்று
சந்திரமங்களயோகம்- சந்திரனும் செவ்வாயும், கூடி லெக்கினத்திற்கு ஏழாமிடத்திலிருப்பது,
சந்திரகலை-இடகலை
சந்திரிகை-நிலவு
சந்தில்-சனி
சப்தமத்தோன் - ஏழாமிடத்திற்குடையவன்
சமாதி - பனிரெண்டாமிடத்தின் [பெயர்
சமிதை-ஓமவிரகு
சமீனம்-வருடாந்தம்
சமுச்சரணம்-பிள்ளைபிறப்பு
சமுதயம் - இலக்கினம், நாள்பிறப்பு
சமுத்திரநவநீதம்-சந்திரன்
சமை-அமாவாசை
சம்பு-ஆதித்தன்
சய-இருபத்தெட்டாவது ஆண்டு
சயந்தமாலை-ஓர் சோதிடநூல்
சயந்தன்-சந்திரன்
சயமகன்-மிதுனராசி
சயனஸ்தானம்-லெக்கினத்திற்கு நாலாமிடம் பனிரண்டாமிடம்
சயம்-சூரியன்
சயித்திரம்-சித்திரைமாதம்

சயை-சந்திரன்மூன்றுயெட்டுபதி மூன்றாம் பக்கங்கள்

சரதலம்-கிரககதியறிகைகுறி [ரம்

சரநட்சத்திரம்-இயங்கு நட்சத்தி

சரமாதம்-ஆடி, அற்பசி தை, சித்திரைமாதம்

சரம் } சரராசி. மேடம், கட
சரராசி } கம், துலாம், மகரம்.

சருவதாரி } இருபத் திரண்டாவ
சர்வதாரி } து வருடம்

சருவசித்து-சருவசித்து வருடம்

சனனகாலம்-ஜென்மகாலம், பிறந்தநாள்

சனி-ஓர் கிரகம், பாபக்கிரகங்களில் முக்கியமானது, ஓர் நாள்

சனிமூலை-வடக்கு

சனியன் } சனிபகவான்
சனிச்சுரன் }

சன்மவாரம்-பிறந்தநாள்

சன்னியாசம்-பனிரண்டாமிடம்

சற்கருமஸ்தானம்-ஏழாமிடம்

சவுரி-சனி

சவலைமதி-அமாவாசை

சவிதா-சூரியன்

சவுமம்சிற்பநூல் முப்பத்திரண்டி லொன்று

சவுமன்-புதன்

சவ்வியம்-வலபக்கம்

சலசரம் } மீனவிராசி
சலசலம் }

சல்லியன்-சுக்கிரன்

சா

சாடி-கும்பவிராசி

சாதகம் - சோதிட நூலில் திதி முதலியஏழ்வகையுறுப்புகளின் நிலையை யுணர்ந்து அதினால்வரும் பலாபலனை எழுதிவைக்குமோர் புஸ்தகம்



சாதககலங்காரம் - ஓர் முக்கிய சோதிடநூல், தமிழ் பாஷையிலேற்பட்ட சோதிட நூலுக்கெல்லா முதன்மைநூல்

சாதகன்-சாதகத்திற்குடையவன்

சாதேவன் - பஞ்சபாண்டவர்களிலிளையோன், சோதிடநூலறக் கற்றோன்

சாத்திரக்காரர்-சோதிடர்

சாஸ்திரம் - சோதிடம், கலைநூலுக்கெல்லாம் பொதுப்பெயர்

சாத்தவீகம் } முக்குண வேளையி
சாத்வீகம் } லொன்று

சா திரமாதம்-சந்திரன் சுற்றிவருவதினாலுண்டான மாதம்

சாந்திரமானம் - சாந்திரமாதங்களால் வரும் வருடம்

சாந்திராயனம்-ஓர்விரதம்

சாமம்-நடுராத்திரி

சாமன்-புதன்

சாமி-லெக்கினாதிபதி

சாமிநாதன்-லெக்கினாதிபதி

சாமுத்திரிகம்-அங்கலக்ஷணம்

சாயாபதி-சூரியன்

சாயாபுத்திரன்-சனி [ஆண்டு

சார்வரி- - முப்பத்தினாலாவது

சாவகன்-சனி

சாவித்திரன்-சூரியன்

சாவு - லெக்கினத்திற்கு யெட்டு பனிரெண்டாமிடத்தின் பெயர்

சான்றோன்-சூரியன்

சி

சிகண்டிசன்-வியாழன்

சிகண்டிதன்-வியாழன்

சிகரகேந்திரம்-சூரியனுக்கும் மற்ற கிரகத்திற்கு முள்ள தூரம்

சிசி-கேது

சிலை-தனுசுராசி

சீதன் . | சுடர்

சிங்கம்-ஓர் ராசி
சிதகன்-சுக்கிரன்
சிதன்-சுக்கிரன் [மிடம்
சித்தம்-லெக்கினத்திற்கைந்தா
சித்தயோகம்-சுபயோகம் [தாண்
சித்தார்த்தி-ஐம்பத்தி மூன்றாவ
சித்திரைபானு-சூரியன் பதினாறாவது வருடம்
சித்திராதன்-சூரியன்
சித்திரைமாதம்-சைத்திரம், மது
சிந்திதம்-லெக்கினம்
சிந்துநந்தனன்-சந்திரன்
சிந்தை-புதன்
சிந்தைகூடியன்-புதன்
சிரவணம்-திருவோணம்
சிரார்த்தம்-இறந்தோருக்குச் செய்யும் வருடக்கிரியை, அதுயாகம் இருபத்தொன்றி லொன்று
சிராவணம்-ஆவணிமாதம்
சிரீமுக-ஏழாவதாண்டு
சிலை-மூலநாள்
சிவகன்மகன்-செவ்வாய்
சிவசன்-சுக்கிரன்
சிவசேகரம்-சந்திரன்
சிவயோகம்-பனிரண்டாமிடம்

சீ

சீணசந்திரன்-தேய்பிறை
சீதகரன்-சந்திரன்
சீதன்-சந்திரன்
சீதகம்-சந்திரன், சுக்கிரன், பொதுப் பெயர்
சீதகன்-சுக்கிரன்
சீதகிரணன், சீதபானு, சீதமயூகன் } சந்திரன்
சீதமரீசி
சீமந்தம் - கருப்பந்தரித்த ஆறு

ஏழாமாதம் செய்யுமோர் சடங்கு
சீமுக-ஏழாவதாண்டு
சீரம்-சூரியன்
சீர்-துலாவிராசி
சீவன்-வியாழன்
சீவநாள்-ஆயுள்காலம்
சீவனம்-பனிரண்டா மிடத்தின் பெயர்

சு

சுகம்-நாலாமிடத்தின் பெயர்
சுக்கிராச்சாரியன்-சுக்கிரகன்
சுக்கில-மூன்றாவதாண்டு
சுங்கன்-சுக்கிரன்
சுசி-ஆடிமாதம், சூரியன் சந்திரன் சுக்கிரன் இவைகளுக்கு பொதுப்பெயர்
சுசிரோசி-சந்திரன்
சுண்டன்-சதயம் [பெயர்
சுடர்-சூரியர் சந்திரர் பொதுப்
சுடரோன்-சூரியன்
சுதாகரன், சுதாங்கரன், சுதாசூதி, சுதாதாரன், சுதாநிதி, சுதாபிரிதி } சந்திரன்
சுன்-சனி
சுரகுரு-வியாழன்
சுரபி-சித்திரைமாதம்
சுரன், சுரோத்தமன் } சூரியன்
சுவசந்தம்-சித்திராபூரணை
சுவனல்-சூரியசந்திரபொதுப் [பெயா
சுவாதி-சோதிநாள்
சுவை-சித்திரைநாள்
சுளகு-விசாகநாள்

சுரு-மகரராசி
சுற்றத்தார்- பதிநாலாமிடம்

சூ

சூது-பதினோராமிடம்
சூலம்-ரேவதிநட்சத்திரம்
சூரசூதன்-புதன்
சூரன்-சூரியன்
சூரியகிரகம்-இராகுகேது
சூரியசங்கிராந்தி-மாதப்பிறப்பு
சூரியபகவான்-சூரியன்
சூரியபுத்திரன்-சனி
சூரியன்-ஆதித்தன், நவக்கிரகங்களுக்கெல்லாம், முதன்மையான கிரகம்
சூரியகிரணம்-கதிர், கரம், தீவிரம்
சூரியசந்திரரை சூழத்தோன்றும் வட்டம்-பரிவேடம், உட்கோள், வட்டம்
சூரியமண்டலம்-விசயம்
சூனியதிதி-சிரார்த்தத்திற்கு கூடாததிதி
சூனியமாதம்-ஆடி, புரட்டாசி, மாசி, மார்கழி, மாதங்கள்

செ

செக்கு-சதயநட்சத்திரம்
செங்கதிரோன்-சூரியன்
செங்கை-திருவாதிரைநட்சத்திரம்
செங்கதிர்நாள், செங்கதிர்பிறந்தநாள் } உத்திரநாள்
செந்தழல்-கேட்டைநாள்
செந்தீவண்ணன்-செவ்வாய்
செஞ்சுடர், செஞ்சுடர்பகவன் } சூரியன்
செந்நாகம், செம்பாம்பு } கேது
செனனபத்திரிகை-சாதகம்
செனனீ ஜென்மம்-(ஜெனனீ)முற்பிறப்பு
சென்னீ-அசுவினிநாள்



சென்மம், சென்மம் } லெக்கினம்
செலவு-பனிரெண்டாமிடம்
செவ்வாய்-ஓர்கிரகம், ஓர்நாள்
செவ்வி-சித்திரைநாள்

சே

சே-இடபராசி
சேட்டை-விராகநாள் கேட்டை
சேய்-செவ்வாய்
சேயஸ்தானம்-ஐந்தாமிடம்
சேதம்-பனிரெண்டாமிடம்
சேவகாவிருத்திஸ்தானம் — மூன்றாமிடம்

சை

சைங்கிகேயம்-இராகு
சைத்திரம்-சித்திரைமாதம்
சைத்திராவிலி-சித்திராபூரணை
சைத்திரி-சித்திரைமாதம்

சொ

சொட்சேத்திரம், சொச்சேத்திரம் } கிரகங்களின் சொந்தவீடு
சொரூபம்-இலக்கினம்

சோ

சோசியம்-சோதிடசாத்திரம
சோதகர் - ஏழு தலைமுறையின் அலவு இறந்த பிதிர் எழுதலைமுறைபுத்திர
சோதகும்பம்-சுத்தமான நீருள்ள கும்பம்
சோதி-சூரியன், சுவாதிநாள், ஈஸ்வரிக்கும் பெயர்
சோதிடநூல் - வேதாங்கங்களிலொன்று, கலைஞ்ஞானம் அறுபத்துநான்கிலொன்றுகணிதம்
சோபகிருது - முப்பத்தேழாவதாண்டு
சோரஸ்தானம்-ஆறாமிடம்

தடம்

சோமசுதன்-புதன்
சோமபந்து-சூரியன் புதனுக்குப் பொதுப்பெயர்
சோமன்-சந்திரன்
சோணை-திருவோணநாள்
சோது-பரணி

சௌ

சௌண்டிகரணம் - சிராத்தக்கிரியைகளிலொன்று
சௌமன்-புதன்
சௌமியன்-புதன்
சௌரமாதம்-சூரியமாதம்
சௌரன்-சூரியன்
சௌரி-சனி

ஞ

ஞண்டு-கற்கடகவிராசி
ஞமகண்டன் - காணுகிரகத்தொன்று

ஞா

ஞானி-சேது
ஞானம்-லெக்கினத்திற் கைந்தாமிடம் பத்தாமிடம்
ஞாயிறு சூரியன்

ஞெ

ஞெண்டு-கற்கடகவிராசி

த

தகர்-மேடவிராசி
தசவாஜி-சந்திரன்
தசம்-பத்து
தசாசுபன்-சந்திரன்
தச்சன்-சித்திரைநாள்
ததி-ஒனபதாமிடம்
தடம-துலாராசி
தட்சஜபதி-சந்திரன்
தட்சணாயணம்-சூரியன் தெற்கில் சஞ்சரிக்குங்காலம்
தண்கதிர், கண்சுடர் - சந்திரன்

தாது

தண்டனைஸ்தானம்-எட்டாமிடம்
தண்டு-மிதுனவிராசி
தண்ணவன்-சந்திரன்
தபனன்-சூரியன்
தபன்-சூரியன்
தமம்-இராகு
தமன்-இராகு
தமணியன்-சனி
தமோக்கினன், தமோபகன், தமோனுதன் - சூரியசந்திரர்
தயித்தியமந்திரி-சுக்கிரன்
தரணி-சூரியன்
தராசு-துலாராசி, பரணிநாள்
தராத்துமதசன்-செவ்வாய்
தரிடயாமினி - அமாவாசியிருட்டு
தரிசவிபத்து-சந்திரன்
தருணி-சூரியன்
தருமஸ்தானம்-ஒன்பதாமிடம்
தருமநாள்-பரணிநாள்
தலை-இலக்கினம்
தலைநாள்-அசுவினிநாள்
தலையுவா-அமாவாசை
தவம்-ஒன்பதாமிடம்
தவனன்-சூரியன்
தனம்-இரண்டாமிடம்
தனிட்டை-அவிட்டநாள்
தனுசு-ஓர் விராசி
தன்வந்திரி-சூரியன்
தழல்-கார்த்திகைநாள்

தா

தா-வியாழன்
தாசி-பரணிநாள்
தாசு-இரண்டரைநாழிகை
தாது-பத்தாவதாண்டு
தாதை-ஒன்பதாமிடத்ததிபதி
தாட்சாயனிபதி-சந்திரன்
தாமநன்-சூரியன்

தாமதவேளை-முக்குண வேளையி லொன்று
தாமந்தி-சூரியன்
தாமரைநாயகன்-சூரியன்
தாமனபருவம்-சித்திரை சுக்கில பட்ச சப்தமி
தாரகாபதி-சந்திரன் வியாழனுக் கும் பொதுப்பெயர்
தாராகணம்- நட்சத்திரக்கூட்டம்
தாராதிபதி-சந்திரன்
தாராபீபன்-சந்திரன்
தாராபதி-சந்திரன்-வியாழன்
தாராபூஷணம்-இரவு
தாராமண்டலம்-நட்சத்திர மண் டலம்
தாரைமணாளன்-சந்திரன்
தாரை-இராசி
தாரையோன்-இராசியாதிபதி
தாருண-பதினெட்டாவதாண்டு
தார்மிகை-ஏகாதசிதிதி
தாவுரி-இடபவிராசி
தாழி-பரணிநாள்
தாளி-அனுடநாள்
தானத்திரை-லெக்கினதிபதி
தானவன்-சந்திரன்

## தி

திக்கு-திசை, அது கிழக்கு, தென் கிழக்கு தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு வடக்கு, வடகிழக்கு, இவையன்றி ஆகா யம் பாதாளம் இவையும் சேர் த்து தசதிக்குயென்பது முண் டு அவைகிழக்கு கருடத்திசை தென்கிழக்கு பூனைத்திசை, தெ ற்கு சிங்கத்திசை தென்மேறகு சுணங்கன் திசை, மேற்கு நா கத்திசை, வடமேற்கு, எலித் திசை, வடக்கு யானைத்திசை வடகிழக்கு முயல்திசை, ஆகா யம் விசும்புத்திசை. பூமி பா தாளத்திசை,
திக்குபாலகர்-இவைகள் கிழக்கா திமுறையே இந்திரன், அக்கினி யமன் நிருதி, வருணன் வாயு, குபேரன் ஈசானன்
திக்குபதிக் கிரகம்-திசாதிபதிகள் இவர் கிழக்காதி முறையே சூரியன் சுக்கிரன், செவ்வாய், இராகு, சனி சந்திரன், புதன், வியாழன்
திங்கநாள்-மிருகசீரிடம்
திங்கள்-ஓர்வாரம், சந்திரன்,பனி ரண்டு மாதங்களுக்கும் பொ துப்பெயர்
திசிலன்-சந்திரன்
திசை-ஒவ்வோர் திக்குப்புற மர சாளுமதிகாரி, ஒவ்வோர் கிர கத்தினதிகாரம்
திதி-சந்திரநாள் பஞ்சாங்க உறு ப்பினென்று. சிரார்த்தம்
திதிட்சயம்-அமாவாசை
திதித்துவயம் - ஒருநாளில்வரும் மூன்றுதிதி
திதிநிச்சயம்-சிரார்த்தத்திற் கே ற்ற திதியை நிச்சயித்தல்
திதிநியதம்-திதிநிச்சயம்
திதிப்பிரணி-சந்திரன்
திமிரறிபு-சூரியன்
திமிராரி-சூரியன்
தியாச்சியம - ஒவ்வொரு நாளில் கழிவாகிய மூன்றே முக்கால் நாழிகை விலக்குகை
தியுபதி-சூரியன்
தியுமணி-சூரியன்
தியுதம்-கிரணம்
திரமாதம்-ஆவணி, கார்த்திகை, மாசி, வைகாசி

தீத்தாங்

திரயாங்கம்-மூவங்கம் (திதி, வாரம். நட்சத்திரம்)
திரயீத்து-சூரியன்
திரயோதசி- பதின்மூன்றாந்திதி
திரவியம்-ஒன்பதாமிடம்
தராராசி-இடபம், கும்பம், சிங்கம், விருச்சிகம்
திரி-மூன்று
திரிகோணம்-மூக்கோணம்
திரிதசாசாரியன்-வியாழன்
திரிதசி- திரயோதசி
திரிதிரை-மூன்றாந்திதி
திரிநேத்திரசூடாமணி-சந்திரன்
திரிலோகேசன்-சூரியன்
திருவாதிரை-ஓர் நாள்
திருப்பணி - ஒன்பதாமிடத்தின் பெயர்
திரேககரணம் - இராசியை மூன்றாய் பகிர்தல்
திரேக்காணம் - உதயராசியை மூன்றாய் பகிர்தல்
திவசகரன்-சூரியன்
திவசம்-சிரார்த்தம், நாள்
திவாகாரன்-சூரியன்
திவாமணி-சூரியன்
திவார்த்தம்-மத்தியானம்
தினகரன்-சூரியன்
தினத்திரயம்-ஒருநாளில், மூன்று பெருநாள் சம்பவிப்பது
தினபலன்-நிதம் நடக்கும் பலன் ஐந்து ஆறு ஏழு எட்டு பதினொன்று பனிரெண்டாமிராசிகள்
தினப்பிரணி-சூரியன்
தினமணி-சூரியன்
தினம்-நாள்

தீ

தீகன்-சந்திரன்
தீக்கதிர்-சூரியன்
தீக்கருமம்-தூர்க்கருமம்
தீத்தாங்கலம்
தீத்தம்-சிங்கம்
தீபம்-சுவாதி
தீமான்-வியாழபகவான்
தீர்த்தன்-வியாழபகவான்

து

துங்கமங்தோச்சம்-கிரக வட்டத்தினது தூரமான நிலை
துங்கீசன் - சூரியன், சந்திரன், பொதுப்பெயர்
துங்கீபதி-சந்திரன்
துதியை-இரண்டாந்திதி
துது-இருது
துணி-சுவாதிநாள்
துடை-பத்தாமிடத்தின் பெயர்
துந்துமி - ஐம்பத்தாராவது வருடம்
துரகதி-பஞ்சகதி அவைமல்லகதி "யூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதி
துருவம் - கிரகநடையின் தூரம், துருவ நட்சத்திரம், நித்திய யோகத்தொன்று
துரோணம்-தனுசு
துர்க்கை-பூரநட்சத்திரம்
துர்மதி-துன்மதி வருடம்
துலாம், துளா, துலை - துலாராசி
துலாதரன்-சூரியன்
துவட்டாநாள்-சித்திரைநாள்
துவாதசம்-பனிரெண்டு
துவாதசாங்கிசம்- இராசியைபனிரெண்டாய் பகிர்தல்
துவாதசாதித்தர் - பன்னிருசூரியர் அவை தாத்துரு, சக்கரன் அரியமன்மித்திரன், வருணன் அஞ்சுமான் இரணியன், பக

தேகம்;

வான், திவாச்சுவரன், பூடன், சவித்துரு, துவட்டன், இவர் மேடமுதல் மீனமீறாய் விராசியில் அவ்வவ் மாதத்தில் புகுந்து சூரியனுக்கு முறையே செல்வர்.

துவாதசான்மா-சூரியன்

துவாதசி-பனிரெண்டாந்திதி

துவாபரம்-மூன்றாம்யுகம்

துவிதம்-இரண்டு

துளக்கம்-சோதிநாள்

துளங்கொளி-கேட்டைநாள்

துற்காநவமி - புரட்டாசி மாதப் பூருவபக்கத்து நவமி

துற்பிட்சம்-பஞ்சம் [டு

துன்மதி- ஐம்பத்தைந்தாவதாண்

துன்மரணம் - லெக்கினத்திற் கெட்டாமிடம்

தூ

தூக்கு-துலாராசி

தூர்க்கை-பூரநாள்

தூசு-சித்திரைநாள்

தூதன் / தூதுவன் } புதன்

தெ

தெட்சிணம்-தெற்கு, வலப்பக்கம்

தெய்வம்-வருடம், கடவுள்

தெய்வமந்திரி-வியாழன்

தெய்வபக்திஸ்தானம் பத்தாமி

தெய்வு-சந்திரன் [டம்

தெரிவூன்றி-இராகு

தெறுக்கால்-விருச்சிகவிராசி

தெற்கு-தக்கணம், தென், யாமம்

தென்மேற்கு-நிருதிரை

தே

தேகம்-லெக்கினம்

தேசாந்திரம்-பனிரண்டாமிடம்

தேசிகன்-வியாழன்

நந்தி

தேட்கடை / தேட்டை } மூலநாள்

தேம்பிறை-அபரபக்கத்து சந்தி

தேவருடையான் [ரன்

தேரோன்-சூரியன்

தேர்-உரோகணிநாள்

தேர்ப்பாகன்-புதன்

தேவதாடம்-இராகு

தேவர்கோன் / தேவமந்திரி } வியாழன்

தேள் - அனுடநாள், விருச்சிகவி

தேனெல்-அசுவினிநாள் [ராசி

தை

தை-மாசம், பூசநாள், மகரராசி

தைத்தியகுரு-சுக்கிரன்

தைவலேககன்-சோதிடன்

தைரியஸ்தானம்-மூன்றாமிடம்

தொ

தொழில்ஸ்தானம் - பத்தாமிடம்

தொழு-இரேபதி நட்சத்திரம்

தோ

தோணி-இரேபதிநாள்

ந

நகபதி-சந்திரன்

நண்டு-கடகராசி

நடுநாள்-சித்திரை நட்சத்திரம்

நட்சத்திரம்-பஞ்சாங்கவுறுப்பி னொன்று

நட்சத்திரநேமி-சந்திரன்

நட்சத்திரேசன்-சந்திரன்

நட்டசந்திரன்-ஆவணி பூர்வபக்கத்துச்சதுர்த்திப்பிறை

நட்டெந்துகலை - பூர்வபக்கம்துப் பிரதமை

நந்தன - இருபத்தாறாவதாண்டு

நந்தி-இடபராசி

நபசட்சு-சூரியன்

நபமணி-சூரியன்

நரிப்புறம்-மிருகசீரிடம்

நரை-இடபராசி
நர்மடன்-சூரியன்
நவக்கிரகம்-நவக்கோள், அவை சூரியன்முதல் கேந்திராகவும்
நவச்சிவரர்த்தம்-ஒன்று, மூன்று ஐந்து, ஏழு, ஒன்பதாம், பதினொராம் நாள்களில் செய்யும் சிரார்த்தம்
நவதானியம்-ஒன்பது தானியம், அவை உளுந்து, எள்ளு, கடலை கொள்ளு, சாமை, தினை துவரை, நெல்லு, பயறு
நவதி-தொண்ணூறு
நவமி-ஒன்பதாந்திதி
நவராத்திரி-கன்னியா மாதத்தில் இலக்குமி சரஸ்வதி துர்க்கையாகிய சத்தீகளை பூசிக்குமொன்பது தினம்
நவ்வி-அஸ்தம்
நவாகம்-பிரதமை
நவாங்கிசம்-இராசியைஒன்பதாய் பகிர்தல்
நவாமிசம்-இராசியை ஒன்பதாய் பகிர்தல்
நள-ஐந்தாவதாண்டு
நள்-உச்சிப்பொழுது திருவோணம்
நள்ளி-கற்கடகராசி
நள்ளு-திருவோணம்
நற்கோள்-நற்கிரகம், புதன் வியாழன், சுக்கிரன்

## நா

நாக்கு - லெக்கினத்திற்கு இரண்டாமிடம்
நாக்கு ஸ்தானம்-லெக்கினத்திற்கு இரண்டாமிடம்
நாகதைவிகை-தசமிதிதி
நாகத்திசை-மேற்குத்திசை
நாடன்-கார்த்திகை நாள்
நாட்பொருத்தம்-ஜென்ம நட்சத்திரப்பொருத்தம் இது தசப்பொருத்தத்தொன்று
நாண்மீன்-நட்சத்திரம்
நாமராசி-இராசிப்பொருத்தம்
நாயிறு-சூரியன்
நாய்த்திசை-தென்மேற்கு
நாழி-பூரட்டாதிநாள்
நாழிகை-உத்திரட்டாதி, விநாடி அறுபது கொண்டது, கடிகை கன்னல் விகலை
நாள்-அலவை, ஆனியம், எல், எல்லை திவசம், திவா, தினம், பகல்
நான்கு-சது
நாவாய்-ரேபதிநாள்
நாவிதன் - கார்த்திகை நட்சத்திரம்
நாவிதம்-பூரம்

## நி

நிசாசன், நிசாகேது, நிசாபதி, நிசாமணி, சார்த்துனன் — சந்திரன்
நிதாககரன்-சூரியன்
நிதி-ஒன்பதாமிடம்
நித்தியோகம்-தினஅதிட்டம், திநயோகம், அவை அதிகண்டம், அரிடணம், ஆயுஷ்மான், ஐந்திரம், கண்டம், சாத்தியம், சித்தம், சித்திசிவம், சுகர்மம், சுபம், சுப்பிரமம், சூலம், சோபனம், சௌபாக்கியம், திருதி துருவம் பரிதம், பிரமம், பரீதி, வச்சிரம், வரியான் விட்கம்பம், விதிபாதம், வியாகாதம், விருத்தி, வைதிருதி
நித்தியானத்தியாயம் - அட்டமி
நிந்தனஸ்தானம்-அமாவாசி சது

பகலோன்

ர்த்தசி, பௌர்ணமி என்னும் தினங்கள்
நிபுணன்-புதன்
நிரஞ்சனே-பௌரணே
நிருதிதிசை-தென்மேற்றிசை
நிறம்-இலக்கினம்
நிறுப்பான்- துலாராசி
நிட்சேபப்-நர்லாமிடம்
நிலவு-சந்திரன்
நிலமகன்-செவ்வாய்

நீ

நீதம்-மேகம் [மிடம்
நீசத்தானம்-உச்சத்திற்கேழா
நீசபங்கராஜயோகம்-ஓர் யோகம்
நீசப் பெலக்குறைவு-பங்கம்
நீபம்-உத்திரட்டாதி நாள்
நீர்நாள்-பூராடநாள்
நீலன் }
நீலவசம் }
நீலவண்ணன் } சனி
நீலவாசன் }

நெ

நெடுமன்-பாம்பு
நெய்-சித்திரைநாள்
நெற்குறி-நெற்கொண்டு சொல்லு போர் சோசியம்
நெற்றிஸ்தானம் -இரண்டாமிடம்
நேமி-வட்டம்
நேர்வாள்-சித்திரைநாள்

நை

நைச்சி-பாம்பு
நைருதி-நிருதிதிசை

நொ

நொடி-காலநுட்பம்

நோ

நோய்முகன்-சனி
பகலவன்-சூரியன், பரணிநாள்

ப

பகலோன்-சூரியன்
பகலவன்-சூரியன்

பஞ்சரம்

முகூர்த்தம்
பஞ்சதசம்-பதினைந்து
பகல்மானம்-பகல்நாழிகை
பகல்வாயில்-கீழ்த்திசை
பகவதிநாள்-பூரநாள்
பகவான்-சூரியன், துவாதசாதித் தாலொருவன்
பகற்பாடு-பகற்காலம் [வன்
பகன் - துவாசுசாதித்தரிலொரு
பகுளசத்தமி-கிருஷ்ணபக்கசத்த
பகுளம் கிருஷ்ணபக்கம்
பகைத்தானம்-ஆறுமிடம் [ளுள்
பகைநாள்-பிறந்த நாளுக்கு, முத
பக்திஸ்தானம்-ஐந்தாமிடம்
பக்கசரம்-சந்திரன்
பக்கசன்மன்-சந்திரன்
பக்கதி-பிரதமை
பக்கம்-பட்சம், பதினைந்து நாள்
பங்கயன்-சூரியன்
பங்கு-சனி, முடவன்
பங்குக்கிரகம்-மகரராசி
பங்குபட்டநாள்-இரண்டுராசியில் தன்னங்கிசம், சேர்ந்து, விற் கும், பெருநாள்
பங்குனி-ஓர் மாதம் உத்திரநாள்
பசதன்-சூரியன்
பந்துஸ்தானம்-நாலாமிடம்
பசு-இடபவிராசி
பசுங்கதிர்-சந்திரன்
பசுங்கதிர்த்தே-சந்திரன்
பசுசகன்-சோதிடன்
பசேலிகன்-சூரியன்
பஞ்சகதி-துரககதி ஐந்து
பஞ்சரம்-ஐந்தின் கூட்டம்
பஞ்சகவ்வியம்-பஞ்சதிரவியம் அவை கோசலம் கோமூத்தி ரம் தயிர், நெய், பால், என்பன
பஞ்சகோணமண்டலம் - சுக்கிர மண்டலம்

பஞ்சமி.

பஞ்சசதம்-பதினைந்து
பஞ்சதசி-பூரணை
பஞ்சபட்சி-எழுத்துப்பொருத்த மறியுமைந்து பட்சி, அவை, வல்லூறு ஆந்தை, காகம், கோழி, மயில் ஓர் சகஸ்திரம
பஞ்சமி - ஐந்தாந்திதி, அவிட்ட முதலைந்து நாள்
பஞ்சாங்கபலன்-பஞ்சாங்கம் நிருமித்தலில் கண்டபலன்
பஞ்சாங்கம்-சோதிடத்திற்குறிய வைந்துருப்பு அவை வாரம் திதி, நட்சத்திரம், யோகம், கரணம
பஞ்சமஸ்தானம் ஐந்தாமிடம்
பஞ்சாங்கவாக்கியம் கணிதமுறை யுமென்று
பஞ்சார்க்கம்-ஐந்தருக்கம் அவை இந்திரவில், கேது, தூபம, பரிவேடம், விதிபாதம்
பஞ்சி-பஞ்சாங்கம்
பஞ்சசாரன்-கணிதன்
பஞ்சிகை-பஞ்சாங்கம்
பஞ்சிதம்-விண்மீன்
படர்க்கை-மூன்றுமிடம்
படுவான்-மேற்றிசை
பட்சம்-பதினைந்து நாள்கொண்டது
பட்சாந்தம்-அமாவாசை, பூரணை
பட்சிசாஸ்திரம்-பஞ்சபட்சியைக் குறித்தறியும் நூல்
பட்டாரகன்-சூரியன்
பச்சை-புதன்
பணகரம், பணாகரம், பணாபவம் } பாம்பு, இராகுகேதுகளின் பொதுப் பெயர்.
பணாதரம
பணபரம் - இரண்டுஐந்து எட்டு

பதுகம்.

பதினோராமிடங்கள்
பணை-அனுஷம்
பண்டகேந்திரம்-ஓர் கணிதம்
பண்டி-உரோகணி நாள்
பண்டிதன்-புதன்
புண்ணவர்சாமி-லெக்கினாதிபதி
பதம்-நாழிகை, பூரட்டாதி
பதனகேந்திரம்-உதயத்திலிருந்து நாலாம் ஏழாம் பத்தாமிடம்
பதங்கன்-சூரியன்
பதி-வியாழன்
பதிற்றுப்பத்து-நூறு
பதிற்றெண்பான் - தொண்ணூறு
பதினாயிரம் ஓரெண் பத்தாயிரம்
பதினாலு லோகம் கீழேழுலகுமேழ் மேலுலகு அவை அதலம, விதலம், சுதலம், தராதலம் இரசாதலம், காதலம், பாதலம, இவை ஏழுங்கீழுலகு பூலோகம, புவலோகம, சுவலோகம, சனலோகம், தபோலோகம், மகலோகம், சத்தியலோகம், இவை ஏழும மேலுலகு
பதுமகந்து சூரியன்
பதுமபாணி-சூரியன்
பதுகம்-சோதிநாள்
பதுமலாஞ்சனன்-சூரியன் [டா,
பத்திரபதை- இரேபதி-உதிரட்
பந்துக்கள்-நாலாமிடம
பபதி-சந்திரன்
பயறு-சித்திரைநாள்
பயானகம்-இராகு
பயத்தியகாரன்-சூரியன்
பரணம்-பரணி
பரணி-ஓர்-நாள், அடுப்பு
பராக்கிரமகாரகன்-செவ்வாய்

பருதி.

பராபவ-நாற்பதாவதாண்டு
பராயணம்-இராசிமண்டலம்
பராபரி-மூன்றாம்வருடம்
பராக்கிரமஸ்தானம்-மூன்றாமிடம்
பரி-அசுபதிநாள்
பரிகாரம்-பிராயசித்தம்
பரிதாபி-நாற்பத்தாறுவதாண்டு
பரிதி சூரியன் வட்டம்
பரிவற்சரம்-வருடம்
பரிவிருத்தி-கிரகச்சுற்றமுழுவட்டம்
பரிவேடம் - சூரியசந்திரரைச் சூழத்தோன்றும் வட்டம்
பரிவேதனம்-விவாகம்
பரீகம்-நித்தியயோகத்தோன்று
பரீபாவி-ஓராண்டு
பஃறி-இரேபதி
பருதி-சூரியன்
பருவசந்தி உவாக்கடையும் பிரதமை முதலும் பொருந்தும் சந்தி
பருவம் - அமாவாசை, பூரணை, இருது
பர்க்கன்-சூரியன்
பலபை-சூரியன் மையவரியால்கிற்கையில கடிகாரமத்தியில் விழுமநிழல்
பல்லு-இரண்டாமிடம்
பவரணை-பூரணை
பவனாசம்-பாம்பு
பவுரணமி-பௌரணை
பவுரணை-பௌரணை
பறப்பன-விருச்சிகம்
பறவை-அவிட்டநாள்
பற்கன்-சூரியன்
பற்குனி-உத்திரநாள், பங்குனி
பனிக்கதிர்-சந்திரன்
பனிகாலம்-மார்கழிமுதல்நான்கு மாதம்

பாகை.

பனிப்பகை-சூரியன்
பனிமலை-இமயமலை
பன்னிரண்டாதித்தர்- துவாதசாதித்தர்
பன்னொன்று-பதினொன்று
பளிங்கு-சுக்கிரன்

பா

பாகம்-ஓர் கணிதம்
பாகனம்-ஓர்வருடம்
பாகன்-பதன்
பாகு-பரணிநாள்
பாகுலம்-கார்த்திகைமாதம்
பாகை-பகுதி, வட்டத்தின் முன்னூற்றறுபதிலொருபங்கு
பாகோடன்-சூரியன்
பாக்கியத்தானம் - ஜென்மத்துக்கு ஒன்பதாமிடம்
பாக்கியம்-தனம், ஒன்பதாமிடம்
பாடவள் } மிதுனராசி
பாடவன் }
பாடவை }
பாட்டியமி-பிரதமை
பாட்டியம் - பிரதமை
பாணிக்கிரகணம்-விவாகம்
பாண்டில்-இடபராசி
பாண்டுரோககாரன் - இராகு
பாதங்கி-சனி
பாதசாரம் - கிரகம் அன்றன்று நிற்குநிலை
பாதச்சனி - வாக்குத்தானத்துச் சனி
பாதம் - வட்டத்தி நான்கிலொன்று இராகு
பாதலம் – சூரியனிற்குமிராசிக்கு நாலாமிராசி
பாதாரம்-கிரணம்
பாதார்த்தம்எட்டினொன்று
பாதாளகிரகணம்-காணுக்கிரகணம்

பாறல்.

பாதிச்சாமம்-பாதியிரா
பாதிமதி-அர்த்தசந்திரன்
பாதிமம்-நான்கிலொன்று
பாநு-சூரியன்
பாத்திரபதம்-இரேவதி,உத்திரட்டாதி புரட்டாசி மாதம்
பாநாள்-அத்தசாமம்
பாநேமி-சூரியன்
பாபக்கிரகம்-இராகுகேது சனி செவ்வாய் சூரியன
பாமன்-சூரியன்
பாம்பு-இராகு, கேது, ஆயிலியம்
பாரதகண்டம் - நவகண்டத்தொன்று
பாரதம்-பாரதவருடம், ஐந்தாம் வேதம்
பாரதவருடம்-பாரதகண்டம்
பாராசாரியம்-பாராசரராலேற்படுத்திய ஓர் சோதிடநூல்
பாரிசகிரணம்-பக்கக்கிரணம்
பார்-உரோகணிநாள்
பார்க்கவன்-சுக்கிரன் [ண்டு
பார்த்திய - பத்தொன்பதாவதா
பார்வணம்-பூரணை, யாகமிருபத்தொன்றிலொன்று
பார்வணன்-சந்திரன்
பாலசூரியன்-உத்யாதித்தன்
பாலார்க்கன்-இளஞ்சூரியன்
பாலாரிட்டம்-மீயழு வயதுக்குள் வரும்அரிட்டம்
பாலை-புனர்பூசநாள், மிருகசீரிடநாள்
பால்வீதிமண்டலம்-வானட்சரேகையினொன்று, சோதிவரி
பாறல்-இடபராசி
பாற்குணம்-பங்குனிமாதம்
பாற்குனி-உத்திரநாள்
பாங்குனிகம்-பங்குனி

பிதிற்

பானு-சூரியன், ஒளிகிரணம் சிற்பநூல் மூப்பத்திரெண்டிலொன்று
பானுமைந்தன்-சனி
பானுவாரம்-ஞாயிறுக்கிழமை
பாழ்-லக்கினத்திற்கெட்டாமிடம்

பி

பிங்கலன்-சூரியன்
பிங்கள-ஐம்பத்தோராவதாண்டு
பிங்களை-ஆயுட்காலத்தின்மூன்றிலொரு பகுதி
பிண்டி-புனர்பூசம்
பிண்டிலன்-சாதககணிதன்
பிதிர்-சந்தை, தந்தைமூதாக்கள்
பிதிர்த்தானம்-ஒன்பதாமிடம், சிரதார்த்தத் தானங்களிலொன்று
பிதிர்கடன்-சிரார்த்தமுதலியதென்புலத்தோர்கடன்
பிதிர்கருமம்-சிரார்த்தமுதலிய தென்புலத்தோர்கடன்
பிதிர்காலம்-சிரார்த்த புண்ணிய காலம் அதுபதினெண்ணாழிகைதொடங்கி இருப்பதுநாலு நாழிகைபரியந்தம்
பிதிர்ஸ்தானதிபதி-ஒன்பதாமிடத்திற்குடையோன்
பிதிர்காரகன்-சூரியன்
பிதிர்தர்ப்பணம-பிதிர்பலி
பிதிர்திதி-அமாவாசை
பிதிர்தைவதம்-மகம்
பிதிர்நாள்-அமாவாசிஇறந்தோர் நாள் மகம்நாள்
பிதிர்பதம்-தெற்கு
பித்தரோககாரகன்-செவ்வாய்
பிந்தியாகாலம்-சாயங்காலம்
பிணிஸ்தானம் - ஆறுமிடம்
பிப்பலாதம்-சூரியகிரணம்

பிரபவ

பிம்பபம்-சந்திரசூரியமண்டலம்
பிம்பம்-சந்திரசூரியமண்டலம்
பிம்பிகை-சந்திரசூரியமண்டலம்
பிரகணேமி-சந்திரன்
பிரகற்பதி-வியாழன்
பிரகஸ்பதி-வியாழன்
பிரகாசத்துமா-சூரியன்
பிரகிருதிஸ்தானம் - லெக்கினம்
பிரசாபதி-சூரியன்
பிரசூரன்-சுக்கிரன்
பிருகு-சுக்கிரன்
பிரசோற்பதி-ஐந்தாவதாண்டு
பிரதமகாலம்-விடியற்காலம்
பிரதமை-முதல்திதி
பிரதிதேவன்-சூரியன்
பிரதோஷகாலம் } திரயோதசித்
பிரதோஷ புண் } திதியிற் பொ
ணியகாலம் } ழுது அஸ்த
மிக்குமுன் மூன்றே முக்கால் நாழிகை தொடங்கி அஸ்தமித்து மூன்றேமுக்கால் நாழிகை, பரியந்தமுள்ள நேரம்
பிரதோஷம் - அஸ்தமனத்திற்கு முன்னும் பின்னும் மூன்றே முக்கால் நாழிகை, இராவின் முதற்சாமம் திரயோதசி விரதம்
பிரத்தியக்கு-மேற்கு
பிரத்தியோதனன் சூரியன்
பிரபாவ-முதலாண்டு
பிரமாகரன்-சந்திரன், சூரியன
பிரமம்-சூரியன, சந்திரன் நித்தியயோகத்தொன்று
பிரமநாள்-உரோகணி
பிரமாதி-பதின்மூன்றாவதாண்டு
பிரமாதீச்ச - நாற்பத்தேழாவதாண்டு
பிரமோதூத-நான்காவதாண்டு
பிரபு-ஐந்தாமிடம்

புசை

பிரசீந்திலகம்-சந்திரன்
பிராதக்காலம்-விடியல்
பிராதா-அண்ணன்
பிராதாஸ்தானம்-பதினோரா[மிடம்
பிராத்தியக்கு-தெற்கு
பிராமி-உரோகணி
பிரபெக்கினம் - யெட்டாமிடம்
பிலவ-முப்பத்தைந்தாவதாண்டு
பிலவங்க-நாற்பத்தோராவதா[ண்டு
பிறை-சந்திரன்
பிற்கொழுங்கோல்-உத்திரட்டா
பிற்சாமம்-நான்காம்சாமம்
பிற்பக்கம்-அமரபட்சம்
பின்பனி - இருபருவத்தொன்று அதுமாசி பங்குனி
பின்னிலவு-அமரபக்கம்
பின்னேரம்-சாயங்காலம்
பிழை-யெட்டாமிடம்

பீ

பீடைமாதம்-மார்கழிமாதம்
பீடை-ஆராமிடம்
பீடைஸ்தானம்-ஆராமிடம்
பீதன்-வியாழன்
பீதன்-சூரியன்
பீமரதி-பிறந்தயெழுபத்தேழாண்டிலேழாமாதத்தேழாமிரவு
பீயு-சூரியன்

பு

புகர்-சுக்கிரன்
புங்கசவசனம்-ஐந்தாமாதச் சட[ங்கு
புங்கவன்-வியாழன்
புசியம்-தைமாதம்
புசை - ஒன்று இரண்டு மூன்றியேழு எட்டு ஒன்பதாமிராசி
புனர்பூசம்-அதிதிநாள்
புண்ணியஸ்தானம் - உதயத்திற்கொன்பதாமிடம்
புண்ணியத்திசை-வடதிசை

புந்தி.

புத்தாதன்-சந்திரன்
புதன்-ஓர் கிரகம், ஓர்நாள் [ம்
புதயல்ஸ்தானம்- பதினோராமிட
புதானன்-வியாழன்
புதுநிலா-வளர்பிறை
புத்திரத்தானம்-உதயத்திற்கைந்தாமிடம்
புத்திரஸ்தானம்-ஒன்பதாமிடத்திற்குப் பெயர்
புத்திரனுதன் - புத்திரஸ்தானுதி
புத்திரகாரகன்-வியாழன் [பதி
புநர்தம்-புநர்பூசம்
புநர்வசு-புநர்பூசம்
புந்தி-புதன்
புந்திவாரம்-புதவாரம்
புயல்-சுக்கிரன்
புரகிதன்-சிரார்த்தகருமாதிப்பா
புரட்டாசி-ஓர்மாதம் [ர்ப்பான்
புரட்டாசிமாளயம்-புரட்டாசிமாதத்தில் செய்யும் சாதாரணமாசியம்
புரட்டை-புரட்டாதி
புரவி-அசுவினிநாள்
புருடநாள்-இரேபதிநாள்
புருவஸ்தானம்-இரண்டாமிடம்
புரோகிலன்-அரசர் பஞ்சகுழுவினொருவன் அவன் வருங்காரியஞ்சொல்வோனும் கிருத்தியம் பண்ணுவிப்போனு மாகிபார்பான், வியாழன்,
புரோட்சித்தல்- தெளித்தல், சுத்தம் செய்தல்
புலரி-விடியல்
புலவன்-புதன்
புலி-சிம்மவிராசி
புல்-அனுடநாள்
புல்லம்-இடபவிராசி
புவனசாஸ்திரம் - பூமிசாஸ்திரம்

பூதம்.

புவனத்திரயம்-திரிலோகம் அது சுவர்க்க, மத்திய பாதாளம்
புவனம் } பூமி
புவனி
புற்பதி } அனுடநாள்
புற்ருனி
புனர்பூசம-ஓர் நட்சத்திரம்
புனீதம்-புனர்பூசம்
புள்-அவிட்டம்

பூ

பூ-பூமி
பூகோளசாஸ்திரம்பூமிசாஸ்திரம்
பூமன்-செவ்வாய்
பூமிஸ்தானம்-நாலாமிடம்
பூசம்-ஓர் நட்சத்திரம்
பூணி-இடபராசி
பூணூல்-உபவீதம்
பூணூல்கலியாணம் - உபநயனச்சடங்கு
பூதநம்-சந்திர சூரியகிரணம்
பூதம்-பரணிநாள்
பூரட்டாதி-ஓர்நாள்
பூரணசந்திரன்-நிறைகால சந்திர
பூரணமி-பௌரணமி [ன்
பூரணமை-பௌரணமி
பூரணுனகம்-சந்திர கிரணம்
பூரணேந்து-பூரணசந்திரன்
பூரணை-சந்திரனைந்தாம் பத்தாந்திதிபௌரணை
பூரம்-ஓர் நாள்
பூராடம்-ஓர் நாள்
பூரி சிரார்த்தக்கிரியையினென்று
பூருவகாட்டை-கிழக்கு
பூருவதிக்கு-கிழக்கு
பூருவதிசை-கிழக்கு [மிடம்
பூருவஜென்மஸ்தானம்-இரண்டா

பெ

பெண்-கன்னியாரசி

மகம். மணி

பெண்ணை - அனுடநாள்
பெலன்-மூன்றுமிடம்
பெருக்கல்-அதிகப்படுதல்
பெருநாள் - அசுவினி முதலிய நாள், இரேபதி
பெரும்பொழுது - ஆறு பருவம் அவைகார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்
பெற்றம்—இடபவிராசி

பே

பேதன்-சந்திரன், சூரியன்
பேராளன்-மிருகசீரிடம்
பேரு-சூரியன்

பொ

பொங்குசனி-இரண்டாமுறையே மூரையாய் வருஞ்சனி
பொழுது-சூரியன்
பொன்-வியாழன்
பொன்னவன்-வியாழன்

போ

போகஸ்தானம்-யேழாமிடம்
போதம்-பரணிநாள்
போந்து-அனுடநாள்
போந்தை-அனுடநாள்
போர்-சதயம்

பௌ

பௌஷம்-தைமாதம்
பௌடம்-தைமாதம்
பௌரணமி-பூர்ணை, அனுமதி
பௌரணை-உவா
பௌமன்-செவ்வாய்

ம

ம- சந்திரன்
மகதந்திரம் - சிற்பநூல் முப்பத்திரண்டி லொன்று
மகத்திருநாள்- மாசிமகம்
மகம்-ஓர்நாள்
மகரம்-ஓர்ராசி
மகாசாந்தபனம்-ஆறுநாள்யனுஷ்டிக்கு மோர்விரதம், அது முதனாள் கோசலமும் இரண்டாம்நாள் கோமயமும், மூன்றாம்நாள் பாலும் நாலாம்நாள் தயிரும், ஐந்தாம்நாள் நெய்யும் ஆறும்நாள் தருப்பையவித்த நீருமுண்டனுஷ்டிப்பது
மகாபவன்-சுக்கிரன்
மகாபிரளயம்-நானூற்று முப்பத்திரண்டுகோடி வருடமுடிவில் வரும்கழிவு,பிரமகற்பத்தழிவு
காமகம்-மாசிமகத்திற் குருவருநாள்
மகாவிசுவம்-மேடசங்கிராந்தி
மகிரன்-சூரியன்
மகீசுதன்-செவ்வாய்
மங்கலவாரம்-செவ்வாய்க்கிழமை
மங்கலன்-செவ்வாய்
மங்களாதிபன்-ஏழுக்குடையவன்
மச்சம்-மீனராசி
மணப்பொருத்தம்-விவாகத்திற் குரியபொருத்தம்பத்து அவை இராசி இராசித்தலைவர், இரைச்சு, கணம், ஸ்திரி தீர்க்கம், தினம், மகேந்திரம், யோனி, வசியம், வேதம்
மணி-நேரம், இரண்டரை நாழிகைகொண்ட நேரம்
மணிக்கூடு-நாழிகைவட்டம்
மணிமான்-சூரியன்
மண்டலம்-வட்டம்
மதி-கற்கடகவிராசி, சந்திரன்
மதிக்கலை-பதினாறு
மதிதிசை-வடக்கு
மதிநாள்-மிருகசீரிடம்
மதிப்பகை-இராகுகேது
மதிமகன்-புதன் (இவன்சந்திரன்

னுக்கும் உரோகணிக்கும் பிறந்தபிள்ளை)
மதியம்-சந்திரன், மத்தியானம்
மதியுண்ணி-இராகு கேது
மது-சித்திரை மாதம்
மத்தியானம்-உச்சிப்பொழுது
மந்தகேந்திரம் - கிரகநடையினொன்று
மந்தவாரம்-சனிக்கிழமை
மந்தன்—சனி
மந்தார்த்தம்-சூரியனது மையத்திலிருந்து வேறொரு கிரகத்திற்குள்ள தூர அளவு
மந்திரி-வியாழன்
மந்தோச்சம் - கிரகவட்டத்தின் தூரமான முனை
மயனூல்-சிற்பசாஸ்திரம
மயன்—ஓர் தேவதச்சன்
மயிலை-மீனவிராசி
மயில்-பஞ்சபட்சியினொன்று
மயூரகதி-துரகதி ஐந்தினொன்று
மரக்கால்-சோதிநாள்
மரணச்சனி-மூன்றுமுறை உடலியிர் பனிரண்டாமிராசியில் வருஞ்சனி
மரணம் - இரண்டாமிட மேழாமிடம்
மருத்துவநாள்-அசுபதி
மலை-லெக்கினம்
மல்லகதி பஞ்சகதிஐந்திலொன்று
மழைமரக்கால்-மழையினளவு
மழைக்கோள்-சுக்கிரன்
மறி-மேடவிராசி
மறை-நாலாமிடம்
மறையவன்-வியாழன்
மனு-லெக்கினம்
மனைவிஸ்தானம்-ஏழாமிடம்
மன்னன்-உத்திரட்டாதிநாள்
மன்னவன்-வியாழன்

மா-ஓரெண், அது இருபத்தொன்று
மாகண்டம் - அதிகண்டம், யோகம் இருபத்தேழிலொன்று
மாகலி-சந்திரன்
மாகம்-மகநாள், மாசிமாதம்
மாகாணி-ஓரெண், அது பதினாறிலொரு பங்கு
மாசம்—மாதம்
மாசாந்தம்-அமாவாசியை
மாசி-ஓர்மாதம், மகநாள் கும்பவிராசி
மாசிகம் / மாசியம் } இறந்தோருக்குமாசந்தோறுஞ்செய்யுமோர் கடன்
மாதப்பிறப்பு-சூரியன் ஓர் ராசியினின்று மற்றொராசிக்குச்செல்லும் சமயம்
மாதவம்-வைகாசிமாதம்
மாதிரு-இரேபதி, மாதா
மாதிருஸ்தானம்-நாலாமிடம்
மாதிர்காரன்-சந்திரன்
மாது-கன்னியாராசி
மாதுலன்-ஐந்தாமிடம்
மாதுலஸ்தானம்-ஐந்தாமிடம்
மாமகம்-மாசிமகம், மாமாங்கம்
மாமாங்கம் - குருசிங்கவிராசியிலிருக்கும்போது மாசிமாதத்தில மகநட்சத்திரம் வரும்நாள் இது கும்பகோணத்தில்பன்னிரண்டு வருஷத்திற்கோர் தடவை நடக்கும் விசேட திருவிழா
மாமன்-ஐந்தாமிடம்
மாமன்காரகன்-புதன்
மாயோனாள்-திருவோணம்
மாரகம்-மரணம்

| மித்துரு. | முகலி. |
|---|---|
| மாரகஸ்தானம் - இரண்டுமூன்று யெட்டு பதினோராமிடங்கள் | மிருகம்-மிருகசீரிடம் |
| மாரகன்-கொல்வோன் | மிருகலாஞ்சனன்-சந்திரன் |
| மார்பு-ஐந்தாமிடம் | மிருகாங்கம்-சந்திரன் |
| மாரிக்காலம்-ஐப்பசியின் கார்த்திகை பருவம் | மிருகாங்கன்-சந்திரன் |
| மாரிக்குடா-வடகீழ்த்திசை | மிருதாண்டன்-சூரியன் |
| மாரிநாள்-உத்திரநாள் | மிருதண்டன்-சூரியன் |
| மார்க்கசிரம்-மார்கழிமாதம் | மிருத்துநிலை - மிருத்துகிரகநிலை |
| மார்த்தண்டம்-சூரியன் | மிருதுநட்சத்திரம் - இலகுநட்சத்திரம் |
| மார்த்தண்டன்-சூரியன் | மிருதை-பூமி |
| மார்கழி-ஓர்மாதம் மிருகசீரிடம் | மிருத்தியு-மரணம் |
| மாலவன்-புதன் | மிருத்தியுபுத்திரன்-கேது |
| மாலி-ஆதித்தன் | மிருத்துகாரகன்- மரணத்தைசெய்யும் கிரகம் |
| மாலை—அந்திபபொழுது | மிருத்துகிரகம்-மிருத்துகாரகன |
| மாலோன்-புதன் | மிருத்துசாந்தி-அவமிருத்தை நீககும் சாந்தி |
| மால்-புதன் | மீ |
| மாழ்கு-மிருகசீரிடம் | மீனமாதம்-பங்குனிமாதம் |
| மாளயபட்சம் - புரட்டாசிமாதத்து அமரப்பக்கத்து பிரதமை முதல் பூர்வபக்கத்து சதுர்த்திமட்டு முள்ளகாலம் | மீனம் ஓர் ராசி |
| மாளபம் - புரட்டாசி மாதத்தில் செய்யும் பொதுசிரார்த்தம் | மீனசுவை-சித்திரைநாள் |
| மானேந்தி-சந்திரன் | மீன்-சித்திரை |
| மானேறு-உத்திரம் | மு |
| மான்—மகரராசி | முகம்-இரண்டாமிடம் |
| மான்றலை-மிருகசீடம் | முகூர்த்தம் இரண்டுநாழிகைகொண்டநேரம், சுபவேளை |
| மி | முக்கால்நோக்கு - கிரகநோக்கினொன்று |
| மிகிரன்-சந்திரன் சூரியன் | முக்குணம்-மூன்றுகுணம், அவை இராசதம், சாத்துவீகம் தாமதம் |
| மிதுனம்-ஓரிராசி இரட்டைபுணர்ச்சி | முக்குணம்-பூராடம் |
| மித்திரநாள்-அனுடம் | முக்கூட்டு-பரணி |
| மித்திரன்-சூரியன், துவாதசாதித்தரிலொருவன் | முக்கோல்-திருவோணம் |
| மித்துரு-சினேகிதன் | முசலி-சந்திரன் |
| மித்துருத்தானம் - ஜென்மத்துக்கு நாலாமிடம் | முடவன்-சனி |
| மிருகதரன்-சந்திரன் | முடி-லெக்கினம் |
| | முண்டிரபாதி-சூரியன் |

முதிரை.

முதலெழுஞ்சனி-மகம்
முதநாள்-அசுபதி
முதிர்வேனில்- ஆனிஆடியின் பருவம்
முதீ-சந்திரகிரணம்
முதுமகன்-சனி
முத்தித்தானம் - பனிரெண்டாமிடம்
முப்பூரம்-பூரம், பூராடம், பூரட்டாதி
மும்மீன்-மிருகசீரிடம்
முயலின்கூடு- சந்திரன்
முயற்றிசை- வடகீழ்த்திசை
முரசு-உத்திரட்டாதிநாள்
முழுநாள் - இராசிக்குப் பங்குபடாதநாள்
முழுநோக்கு-பூரணநோக்கு, இது கிரகநோக்கிலொன்று
முருமதி-பூரணச்சந்திரன்
முரம்-விசாகநாள்
முறசு-உத்திரட்டாதி
முற்குளம்- பூராடம்
முற்கொழுங்கோள்-பூரட்டாதி
முற்சனனம்-முற்பிறப்பு
முற்சனி-மகநாள்
முற்பகல்-ஒருபகலின்முற்பகுதி
முற்பணி } மார்கழி தை மாதங்
முன்பணி } களின் பனி
முற்றில்-விசாகம்

மூ

மூக்கு-இரண்டாமிடம்
மூக்குஸ்தானம்-இரண்டாமிடம்
மூதிரை-திருவாதிரைநாள்
மூலத்துருவம்-கிரகவீதியின் மூலநீள அளவு
மூலநாள்-மூலநட்சத்திரம்
மூரி-இடபராசி

யாமம்.

மெய்-லெக்கினம்

மே

மேரு-லெக்கினம்
மேடம்-ஓர் ராசி
மேஷம்-ஓர்-ராசி
மேடவீதி - சித்திரை வைகாசி ஆனிமாதங்களில் சூரியன் செல்லும் வீதி
மேடாயனம் } ஆதித்தனிடப வி
மேஷாயனம் } ராசியினின்று கற்கடகராக்கிச் செல்லும் பாதை உத்தராயணமூலம்
மேற்கு-குடக்கு மேல் வாருணம்
மேதை-புதன்
மேற்கோள்-சனி

மை

மை-ஒரெழுத்து, மேடவிராசி
மைதுனம்- மிதுனவிராசி

மோ

மோக்ஷம் } உதயலெக்கினத்திற்
மோச்சம் } குப் பனிரெண்டாமிடம்

ய

யக்கியநாழிகை - மகநட்சத்திரம்
யமுனைசனகன்-சூரியன்
யவனாசார்யன்- சோதிடசாஸ்திரகர்த்தாவாகிய ஓர்முனி

யா

யாத்திரைஸ்தானம்-யேழாமிடம்
யாமபதி-சந்திரன்
யாமம்-தெற்கு, இராத்திரி, சாமம்
யாமிநீபதி-சந்திரன்
யாமியம்-தெற்கு
யாமியாயனம்-தக்ஷணாயனம்
யாமீரன்-சந்திரன்

வசு.

யாமினியம்-தெற்கு
யாமீரை-இராத்திரி
யாமை-இரா தெற்கு பரணி
யாளி-சிம்மவிராசி
யானைத்திசை-வடக்கு
யாழ்-அசுவதி, திருவாதிரை

யு

யுகம்-ஓர் காலத்தளவுபூமி
யுகளம-இரண்டு
யுகளி-இறண்டு
யுகமட்-இரண்டு
யுதகம்-இரண்டு
யுவ-ஒன்பதாவதாண்டு
யுத்தஸ்தானம்-ஆறாமிடம்
யுழி-பனிரெண்டாமிடம்

யோ

யோகம் - அதிட்டம், பஞ்சாங்க உறுப்பினென்று பலன், பொருத்தம்
யோசியம்-சோதிடம்
யோனிபேதம்-பிறவிபேதம்
யோனிப் பொருத்தம் - மணப் பொருத்தம் பதினென்று

வ

வக்கிரம்-மீளமடங்குதல் மீளுதல் பின்திரும்புதல்
வக்கிரன்-சனி, செவ்வாய்
வசந்தகாலம்-சித்திரை வைகாசி யின் பருவம்
வசந்தமாதம் சித்திரைமாதம்
வசியம் - மணப்பொருத்தம் பதி
வசு-சூரியன் [னென்று
வசுநாள்-அவிட்டநாள்
வசுபை-புநர்பூச நட்சத்திரம்
வச்சிரம் நித்திய யோகத்தொ
வடகலை-கிரந்தநூல் [ன்று

வாக்கு.

வடகீழ்திசை-ஈசானம் [நனி
வடகோடு-வக்கிரசந்திரனின்வட
வட்டம்-பரிவேடம், வட்டவடிவு, ஆழி, கடகம் கனம்
வணிகன்-துலாராசி
வண்டு-பூசநாள்
வயிரம்-திருவோணம்
வரயோகம்-சுபயோகத்தென்று
வரியோன்-நித்திய யோகத்தொ [ன்று
வருடபலன்-வருஷத்திற்குகண்ட [பலன்
வருடப்பிறப்பு-புதுவருஷத்தோ
வருடம்-ஆண்டு [ற்றம்
வருஷம்-ஆண்டு
வருடாங்கம்-மாரம்
வருடாந்தரம்-வருஷமுடிவு
வருடாயுதம்-பதினாயிரம்
வருடை-மேடவிராசி
வருணநாள்-சதயநாள் [ருவன்
வருணன்-துவாத சாதித்தரிலொ
வர்த்தகஸ்தானம்-நாலாமிடம்
வலதுகண்ஸ்தானம்-இரண்டா
வல்லாரல்-கேட்டைநாள் [மிடம்
வல்லாரை—கேட்டைநாள்
வல்லபஸ்தானம்-மூன்றாமிடம்
வளர்பிறை-பூருவபக்கத்துச்சந்தி
வள்ளுவசாஸ்திரம்-ஓர் சோசியம்
வள்ளுவன்-ஓர் ஜாதியார், புரோகிதன் வருங்காரியஞ்சொல்லுவோன்

வா

வாகனஸ்தானம்-நாலாமிடம்
வாக்குதேவதை-வியாழன் [டம்
வாக்கு—ஜென்மத்திற் கிரண்டாமி
வாக்குத்தானம்-ஜென்மத்திற்கிரண்டாமிடம்

வி.

வார்சாம்பதி-வியாழன்
வாசி-அசுபதி
வாடை-வடக்கு
வாதரோககாரகன்-சனி
வாமக்தோன்-சந்திரன்
வாணிகன்-துலாராசி
வாணன்-கார்த்திகைநாள்
வாயுமூலை-வடமேற்கு
வாய்க்கால்-மகநாள்
வாரம் - ஏழுகிழமை கொண்டது பஞ்சாங்க உறுப்பிலொன்று
வாராதிபன்-கிழமைக்கதிபன்
வாலசந்திரன்-இளம்பிறை
வாலசூரியன்-இளவாதித்தன்
வால்வெள்ளி-ஓர் நட்சத்திரம்
வானம்-ஆகாயம்
வானரகதி - தூரககதியைந்திலொ [ன்று
வானவில்-இந்திரவில்
வான்மீன்-ஓர் நட்சத்திரம் உடு, சோதி, தாரகைதாரா

வி

விகர்த்தனன்-சூரியன்
விக்கம்-சந்திரன் சூரியன்
விசகம்-கேது
விசகன்-சந்திரன்
விகலை-காலநுட்பம், நாழிகை
விகாரி-இருபத்திரண்டாவதாண்டு
விகிர்தி-இருபத்திநாலாவதாண்டு
விக்கிரம்-பதினான்காவதாண்டு
விக்கிரமஸ்தானம்-மூன்றாமிடம்
விசயை-மூன்றாம் எட்டாம் பதினைந்தாம் திதிகள்
விசர்க்கம் - தெட்சணாயனபாதை
விசாகம்-ஓர்நாள் வைகாசி
விசு பதினைந்தாவதாண்டு [சன்
விசுவகன்-மா-சூரியன் - தேவதச்
விசுவசங்கிராந்தி-சூரியன் விசுவத்தினின்று அயல்ராசிக்கிப்

விபவ.

போவது
விசுவதினம்-இராப்பகல்நாழிகை சரியாக இருக்கும் நாள்
விசுவநாள்-உத்திராடம், அவிட் [டம்
விசுவாவசு-இருபத் தொன்பதாவதாண்டு
விடபகதி-தூரககதியைந்திலொன்
விடபம்-இடபராசி
விடை-இடபராசி
விட்டம்-உத்திரம்
விஷ்கம்பம்- நித்தியயோகத்தொ
விண்மனி-சூரியன் [ன்று
விண்மீன்-நட்சத்திரம்
விதிசை-இரண்டாந்திதி
விதி-யெட்டாமிடம்
வித்தைதஸ்தானம் - நாலாமிடம், ஒன்பதாமிடம்
வித்தைகாரகன்-புதன்
விது-சந்திரன்
விதுட்சயம்-தேய்பிறை
விதுந்துதம்-இராகு
விதுப்பிரியை-உரோகணி
விநாடி-காலநுட்பம்
விநாடிகை-காலநுட்பம்
விநாயகசஸ்டி-கார்த்திகைமாதத்தில் கார்த்திகை கழிந்த இருபத் தோராம் நாள் வரும் சஸ்டி
விநாழிகை - நாழிகை யறுபதி [லோர் பங்கு
விபவ-இரண்டாவதாண்டு
விபாகரன்-சூரியன்
விபாதம்-உதயகாலம்
விபாவசு-சந்திரன் சூரியன்
விபுதன்-சந்திரன்
விமர்த்தனம்-கிரகணம்
விமர்த்தார்த்தம் - கிரகண பரிச

விழவு.

காலந்தொடங்கி மோக்ஷம்வ [ரைக்கும்
விமானம்-உரோகணி
விம்ஸதி-உருபது
விம்பம்-சாயை, சந்திர சூரியர்க ளின் மண்டலம்
விய-இருபதாவதாண்டு
வியம்-பனிரெண்டாமிடம்
வியதீபாதம்-நித்தியயோகத்தொ [ன்று
வியன்மணி-சூரியன்
வியாகம்-ஓர்நட்சத்திரம் [மத்தி
வியாழகேந்திரம்-வியாழவீதியின்
வியாழதிசை-வியாழனுக்குச் செ ல்லுங்காலம் [தேவகுரு
வியாழம்-ஓர்கிரகம் ஓர் கிழமை
வியாழவட்டம்-வியாழத்தின் பன்னிருவருடச் சுற்றி
வியாச்சியக்கவலே-பனிரெண்டா [மிடம்
விலாசி-சந்திரன்
வில்-மூலம்
விரசநன்-சந்திரன்
விரிச்சிகம்-ஓர்ராசி ஓர் மாதம்
விருச்சிகம்-ஓர்ராசி ஓர்மாதம்
விரிச்சிகன்-சூரியன்
விரையன்-பனிரெண்டாமிடம்
விரோசனன்-சந்திரன் சூரியன்
விரோத - இருபத்திமூன்ருவதா [ண்டு
விரோதிகிருது - நாற்பத்தைந்தா [வதாண்டு
விரோதஸ்தானம்-பெட்டாமிடம்
விவசுதன்-சூரியன்
விழவு-மிதுனவிராசி
விளக்கு-சுவாதிநாள்
விளங்குதிங்கள்-சுக்கிரன் [ண்டு
விளம்பி-முப்பத்திரண்டாவதா

வேதீ.

வீகோத்திரன்-சூரியன்
வீபத்து-சந்திரன் [வன்
வீரன்-மூன்ருமிடத்திற் குடைய
வீரனுதன் - மூன்ருமிடத்திற்கு டையவன்
வீழ்கை-சுவால்நாள்

வெ

வெங்கதிர்-சூரியன்
வெஞ்சுடர்க்கிரணன்-சூரியன்
வெண்கதிரோன்-சந்திரன்
வெண்கதிர்-சந்திரன்
வெயில்-சூரியன் சூரியக்கிரணன்
வெய்யவன்-சூரியன்மிருகசீரிடம்
வெய்யோன்-சூரியன்
வெள்ளி-சுக்கிரன்
வெள்ளிக்கிழமை-சுக்கிரவாரம்
வெள்ளிப்பிரிவு-சுக்கிரனிருந்தரா சிவிட்டுப்பிரிதல்
வெறுதுகம்-சோதிநாள்
வெற்றிஸ்தானம்-மூன்ருமிடம்

வே

வேதய்-நாலாமிடம்
வேதன்-வியாழன் நாலாமிடத்து க்குடையவன்
வேதா-சூரியன்
வேதாங்கம்-வேதசாஸ்திரம், வே தப்பகுதி, அதுசந்தோபிசிதம் சோதிடம், நிகண்டு, நிருத்தம் மந்திரம், வியாகரணம், என அறுவகையாம்
வேதி-கேட்டைநாள்
வேதோதயன்-சூரியன்
வேந்தன்-வியாழன்

வைகாசி.

வேள்ளி-பனிரெண்டாமிடம்-மக நட்சத்திரம்ா

வேட்டுவன்-மகம், நட்சத்திரம்

வை

வைகறை-விடியல்முதல் பத்துநாழிகை யளவு காலம். விடியற்கா்லம் [சகம்

வைகாசி-ஓர்மாதம், விசாகம், வை

வையம்.

வைகாலம்-சாயங்காலம் [கம்

வைசாகம்-வைகாசிமாதம், விசா

வைசாகி - வைகாசிமாதம், விசா

வைநாயிகை சதுர்த்தி திதி [கம்

வையகம்-உரோகணி, பூமி

வையகம்-உரோகணி, பூமி

வைரோசனன்-சூரியன்

வைவஸ்வதி-தென்றிசை

வைச்சுதன்-சனி

சோதிட அகராதி.

முற்றிற்று.

---



# யோகப்பொருளகராதி.

### அ

அங்கயோகம்—லெக்கினத்திலாவது கேந்திர மூலத்திரி கோணங்களிலாவது உச்சத்திலாவது மந்திரி நின்றால் அங்கயோகம்

அங்சாவதார யோகம்—லெக்கினம் சரராசியாகயிருந்து பதினொன்றில் குருவும் பனிரெண்டில் செவ்வாய் நிற்க வெள்ளியும் காரியும் கேந்திரி கோணமேவி அம்மாவாசி அல்லது பௌரணையில் ஜெனனமாயின் அங்சாவதாரயோகம்

(2) லெக்கினம் சரராசியாகி குரு திரிகோணமேவி மற்ற கிரகங்களெல்லாம் ஆறெட்டில் பனிரெண்டில் நின்றாலும்

(3) லெக்கினம் ஸ்திரராசியாகி குருபார்க்க ஒரு பாவக்கிரகம் உச்ச கேந்திரத்தில் நின்றிடினும் அங்சாவதாரயோகம்

அனபாயோகம்— சந்திரனுக்கு முன்ராசியில் சுபக்கிரகங்கள் நின்றால் அனபாயோகம் அதின்பலன் மந்திரிவல்லமை, கல்வி, மாதர்கள் சொற்கேட்பது அதிகதைரியம் ஒழுக்கம் அபிமானம் நல்லகுணமுடையவன் (2) சந்திரனுக்கு பின் ராசியில் சுபக்கிரகங்கள் நின்றால் அது அனபாயோக மென்றுபெயர் அதின்பலன் தைரியம், கல்வி தனவான். வார்த்தையில் வல்லமை, தர்மசிந்தையுடையது

### இ

அவயோகம்—லெக்கினத்திலும் பனிரெண்டாமிடத்திலும் ஏழு கிரகங்கள்கூடி நின்றால் அது அவயோகம் நன்மையுள்ளவன் பயிர்ச்செலவு அதிகமுடையவனாகயிருப்பன்

இந்திரயோகம்—பதினோராமிடத்திற்குடையவர் ஐந்தாமிடத்திலும் ஐந்துக் குடையவர் பதினொன்றிலும் கிரகம் மாறி நின்று நாலுக்குடையவனோடே சந்திரனும் கூடி நிற்பது. இதின் பலன் நாற்பத்திநாலு வயதுக்குமேல் நல்ல யோகத்தை அனுபவிப்பன்

இரக்ஷயோகம்—ஒன்பதுக்குடயவனின்றது வாதசாங்கிசத்தில் ஐந்துக்குடையவனும் சந்திரனும் கூடிநிற்பது. இருபத்தெட்டு வயதுக்குமேல் எழுவருஷம் நல்லயோகம்

இரகிவியாமம்—பத்தினில் செவ்வாய்நின்று சூரியன் இரண்டாமிடத்தில் உச்சனாகி குரு ஒன்பதாமிடத்தில் நிற்பது பதினாலுவயதுக்குமேல் எட்டுவருஷம் நல்லயோகம்

இராஜயோகம்—கருமாதிபதியாவது லாபாதிபதியாவது சந்திரனுக்கு கேந்திரத்தில்நின்று ஐந்து பதினொன்றுக் குடையவர் குருவாக இருக்குமாகில் இராஜயோகம் பதினைந்து வயதுக்குமேல் நல்லயோகம் (2)

இ

ஒன்பதுக்குடையவனேறிய அங்கிசாதிபதி குருவுடனே கூடி இரண்டில் நின்று அவனும் லெக்கினத்திற்கு இரண்டு ஒன்பதுக்குடையவனுகியிருப்பது. இதுவும் பதினைந்து வயதுக்கு மேல் நல்லயோகம் (3) ராகுவிருந்த ராசிக் குடையவன் உச்ச கோணத்திருக்க செவ்வாய் பெலத்து நிற்பது இதுவும் பதினைந்து வயதுக்கு மேல் நல்லயோகம் (4) நாலுக்குடையவனின்ற ராசியாதிபதி பத்தில்நிற்க இவ்வருடன் லெக்கினுதிபதி கூட அல்லது ஒருவருக்கொருவர் பார்ப்பது இது பதினாறு வயதுக்குமேல் நல்லயோகம்(5)சூரியன், சந்திரன் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இந்த ஏழு கிரகங்களும் சராசரி ஏறிநிற்பது இதின்பலன் பிறர் தயவை விரும்புவது இராவழி நடப்பது அலைச்சல் சஞ்சாரம் செய்வதும்

இராஜமந்திரியோகம்—ஐந்துக்குடையவன் கோபு ராங்கிசமேறகுருலெக்கினத்தில் மேவலெக்கினுதிபதியும் ஐந்துசகுள்ள வரும பார்க்க புதன் ஏறிய ராசிக்குடையவன் கேந்திரத்தில் நிற்பது (2) லெக்கினுதிபதியும் குருவும கூடி கேந்திரமேற் செவவாய் அவர்களுக்கு ஏழில் நின்று பார்த்தாலும அல்லது சூரியன் செவ்வாய் குரு இவர்கள் சேர்ந்தாலும (3) சூரியன், சந்திரன் குரு, சுக்கிரன் இவர்கள் கூடினுலும் அல்லது இவர்கள் தனித்தனியே பரவிநிற்க சுக்கிரனே நீச்சனுகிலும் சுபராகிலும் பார்த்தாலும் அல்லது இரண்டு முதல் எட்டாமிடம் வரையில் ஏழுகிரகம் நின்றாலும் (4) அசுவினி புனர்பூசத்தில் சனியிருக்க மகம், மிருக சீரிடத்தில குருவிருக்க சித்திரை பூசத்தில் புதனிருக்க மகத்தில் சுக்கிரன்நிற்க பரணி சுவாதி நட்சத்திரத்தில் ஜெனனமாயினும் (5) கருமதானத்தில் சூரியன் செவ்வாய் நிற்க மூன்றுமிடத்தில் சனிநின்றாலும் பாக்கியஸ்தானத்தில் குருவும் பத்தில் செவ்வாய்யும் நாலில் சுக்கிரன் நின்றாலும் மந்திரியோக மென்பர்

இரேகாயோகம்—சூரியன் குரு சுக்கிரன் லெக்கினுதிபதி இவர்கள் பாவவர்க்கமேறிநீசமூடம் பற்ற நாலுக்குடையவர் பாவரோடுகூடி ஆறெட்டுபன்னிரெண்டில் நிற்பது இதின் பலன் தரித்திர யோகம்

இலட்சுமியோகம்— லெக்கினுதிபதி கேந்திர மூலத்திரிகோணத்தில் உச்சமாகபெலத்து நிற்கினும் ஒன்பதுக் குடையவன் நாலிநிற்க சுக்கிரனதேவலோகாங்கிசத்திலிருந்தாலும், ஒன்பதுக் குடையவன் சுக்கிரன்கூடி பாரிசாதாங்கிசம் பெற்றிருந்தாலும் (2) ஐந்து பன்னொன்றுக் குடையவர் கிரகமாறிநிற்க லெக்கினுதிபதி கே

இ

ந்திர கோணத் திருந்தாலும், சூரியன் பாராவதாங்கிசந் தன்னிலிருக்க கருமாதிபதி பெலக்க நாலுக்குடையவன் உச்சத்திலிருந்தாலும், கேந்திரகோணத்தில் செவ்வாய் சுபருடனே கூடிநிற்க லெக்கினாதிபதி ஒருபாவியுடனே கூடிபெலமாயிருந்தாலும்

(3) குரு லெக்கினத்திலிருக்க அல்லதுபார்க்க சூரியன் உச்சனாகி மூன்று அல்லது நாலாமிடத்தில் சுக்கிரனின்றாலும், சுக்கிரன் உத்தமாங்கிசம் பெற்று ஒன்பதில்சுபரிருக்க மூன்றுமிடத்தில் உச்சக்கிரக மிருந்தாலும் சந்திரன் குரு சுக்கிரன் இவர்கள் பாராவதாங்கிசம் பாரிசாதாங்கிசம் தேவலோகாங்கிசமாகி அவ்வீட்டுக்கிறையவர்களாக நின்றாலும்

(4) சூரியனும் சுக்கிரனும் சிங்காசனாங்கிசம் தேவலோகாங்கிசத்திலிருக்க சந்திரன் உச்சமாயிருக்கிலும் கேந்திரகோணத்தில்மூன்று கோளிருந்து நாலுகிரகம் மித்துரு பார்வை பெற்று மதிக்கி முன்பின் சுபகிரகமிருந்து லெக்கினத்தில் குருவும் ஏழில் சுபக்கிரகமும் இரண்டில் புதனும் பனிரெண்டில் சுக்கிரனு மிருந்தாலும்

(5) ஏழுகிரகம் நட்பாச்சி உச்ச கேந்தாரங்களிலிருக்க இரண்டு ஒன்பதுக்குடையவர் கேந்திரத்திலிருப்பதை சுக்கிரன் பார்த்தாலும், இலட்சுமி யோகம் இதின் பலன் நாற்பத்துநாலு வயதுக்கு மேலாகிய வருஷம் நல்லயோகமென்பர் பாபத்துக்குடையவன் ஆட்சி உச்சத்திலிருக்க ஐந்துக் குடையவன் களங்கமற ஒன்பதி லிருக்க ஆயுள்வரை நல்லயோகத்தை யடையான் இவ்வித இலட்சுமி யோகத்தை யுடையவர்கள் அழகு அதிகவித்தை கீர்த்தி நற்குணம் தேசாதி பத்தியம் பிரசித்தி புத்திரமித்திரர்களத்திரமுண்டாகி வாழ்வார்களென்பதாம்

இலாவண்யயோகம்— லெக்கினாதிபதியும் நாலுக் குடையவனும் சந்திர லெக்கினத்திலிருக்க மூன்றுக்குடையவன்உச்சமாயிருப்பது இது ஜெனித்த ஒன்றரை ஆண்டின்மேல் முப்பதுவருடம் நல்லயோகம்

உ

உச்சபங்க நீசயோகம்— ஆறெட்டுபனிரெண்டில் உச்சர்நிற்க சத்துருவினல் பார்க்க சரராசி அங்கிசம் ஏறியிருந்தாலும், சத்துருவைகூடி உச்சமாயிருந்தாலும் உச்சபங்க ராசயோகம்

எ

எக்காளயோகம்— நாலுபத்துக்குடையவர்கள் ஒன்றுக்கொன்று நட்பாக கேந்திரத்திலிருக்க லெக்கினாதிபதி பெலமாக இருந்தாலும், நாலுக்கதிபன் கேந்திர மூலத்திரி கோணத்தில் உச்சமாக இருந்தாலும்,

(2) உச்சாதிபதியுடன் லெக்கினாதிபதிகூடி உச்சாங்கிசம் பெற்றிருந்தாலும், ஒன்பதில் பாவ

சடக.

ரும்சுபரும்கூடி நிற்க பத்தாமிடத்தில் சூரியனும், சனியும் கூடஇலக்கினம் உபய ராசியானாலும், எக்காள யோகமாம் இதென்பலன்தேசாதிபதிசதுரங்கப்பதாதியதிபதியாம், வித்துவான்கிர்த்தி மூர்க்கன் ப்ரதாபன் யாருக்கும் உபகாரியாவான்.

(3) நாலுயெட்டுக் குடையோர்கிரகமார அல்லது கூடி கேந்திரத்தி லிருந்தாலும், எக்காள யோகம் இதன் பலன்காமிசுயகருமவல்லவன் சுருபானம் செய்திடுவேன் கோபிசர்வஜன தூஷிகன்

(4) லெக்கினாதிபதி பாக்கியாதிபதி இவர்கள் உச்சமூலதிரிகோணங்களில் பெலத்து நின்றாலும், சனிவர்க் கோத்தமமாய் உச்ச மூலதிரிகோணங்களிருந்தாலும், குரு அல்லதுபுதன் ஏழாமிடத்தில்உச்சம் பெற் றிருந்தாலும் எக்காளமென்பர்

(4) சரராசிலெக்கினமாகி குருவினால்பார்க்க சுபர்கள்கேந்திரம் பெற்றுஇராத்திரியில் ஜெனனமானாலும் யெக்காள மென்பர் இதன்பலன் மந்தன்மன்னவாநிகருஞேன், அல்பசம்பந்தன் போகி

க

கட்கயோகம்—சதிர லெக்கினத்தில் சூரியநிற்க ஒன்பதில் சந்திரனும் செவ்வாயும் கூடிநிற்கினும செவ்வாய் அங்கிசாதிபதி கேந்திர கோணத்தில் குருபா

களத்திர.

ர்க்க நின்றாலும் ஏழாமிடத்தில் குருநிற்க ஒன்பதில் சுக்கிரன் நிற்க நாலில் சனியிருக்க லெக்கினத்தில் புதன் பாவர்களால் பார்க்கப்படாம லிருந்தாலும், கட்கயோகமென்பர்

(2) அஞ்சுஒன்பதுக்குடையோர் கூடி கேந்திரிக்க லெக்கினாதிபதியும் கேந்திர கோணம்பெற்றாலும், நாலு ஒன்பதுக்குடையோர்களும், முன்போல் கூடி கேந்திரிக்க ஒன்று ஏழுக்குடையவர் கிரகமே மாற பாக்கியத்தோன் கேந்திரகோணமிருந்தாலும்கட்கயோகமென்பர்

(3) கருமத்தானாதிபதி நாலிலிருந்திட பாக்கியத்தானாதிபதி சிங்காசநாங்கிசம் பெற்று நிற்க அட்டமாதிபதி உச்சம் பெற்றிருந்தாலும் கட்கயோக மென்பர்

கதா யோகம்—இரண்டா மிடத்தில் குரு சுக்கிரன் சந்திரனுடன் கூடிநிற்க பாக்கியாதிபதியினால் பார்க்கப்பட்டால் கதா யோகமென்றும், இருபத்தாறு வயதுக்குமேல் யேழுவருடம் நல்ல யோகமென்பர்

கந்துகயோகம்—கருமாதிபதிபாக்கியத்தானத்திலிருக்க லெக்கினத்தில் இரண்டுக் குடையவனிருக்க லெக்கினாதிபதிநாலிலிருக்க கந்துகயோகமென்பர்

கமலயோகம்—லெக்கினம் நாலு ஏழுபத்தில் ஏழுகிரகங்கள் இருப்பது இதன் பலன் நல்ல

கார்முக.

குணம் கீர்த்தி சகல சம்பத்து முள்ளவன்

2) நாலில் குருபத்தில் சுக்கிரன் பதினொன்றில் புதன் கேந்திரத்தில் சனி இருந்தாலும் சந்திரனும் சுக்கிரனும் உச்சம்பெற்று நாலில் புதனிருந்து அமாவாசை அல்லதுபௌரணையில் ஜெனிப்பதும் கமலயோகம்

கருடயோகம்—பூருவ பட்சத்து சந்திரனிருந்த அங்கிசாதிபதி உச்சனாகவிருந்து பௌரணையில் ஜெனிப்பதுகருடயோகம் வயது நாற்பத்தி நாலுக்கு மேல்பதினெட்டுவருடம் நல்ல யோகமென்பர்

களத்திரயோகம்— இராஜயோகம் வீரசூரம் அழகு, சோதி வல்லாணமை புத்திர மித்திராள் பாக்கியம் இவைகளையுடைய வர்களுக்கு களத்தி யோகமென்று பெயர்

கா

காந்தர்வயோகம்— அஞ்சக்குடையவன் மூன்றிலாவது பதினொன்றிலாவதிருக்க குருவும் லெக்கினாதிபதியும் கூடிநின்றுசூரியன் உச்சமாயும் சந்திரன் யொன்பதிலுமிருந்தால் காந்தர்வயோகமெனபர் ஆறுவயதுக்குமேல் யெட்டு வருடம் நல்லயோகம்

காமினியோகம்—சந்திரனும் சுக்கிரனும் ஏழில் நின்று செவ்வாய் பதினொன்றிலேறி குரு பாக்கியம் பெற்றிருக்க லெக்கினாதிபதி சுபருடன் கூடினால் காமினி யோகம் நாற்பத்திர

கூப.

ண்டுவயதுக்குமேல் நாற்பத்திரண்டு வருடம் நல்யோகமென்பர்

கார்முகயோகம்— பத்துக்குடையவன் லெக்கினாங்கிசமேறி நிற்க பத்துக்குடையவன் நங்கிசத்தில் லெக்கினாதிபதியேறி நிற்க இவர்களைகுருபார்த்தால் கார்முகயோகம் இது ஒன்பது வயதுக்குமேல் முப்பது வருடம் நல்லயோகம்

கு

குசுமயோகம்—திரராசி லெக்கினமாக அதில் சுக்கிரன்நிற்க சந்திரன் கேந்திரத்திலோ திரிகோணத்தில் பாவர்கள்நின்று மற்றயிடங்களில் சுபகிரகங்கள் நின்றால் குசுமயோகமென்பர்.

குரோதயோகம்— லாபாதிபதி நின்ற திரேக்காணராசியில்சூரியன்,செவ்வாய், ராகுஇவர்கள் நின்றாலும் பார்த்தாலும் குரோதயோகமாம், இது முப்பத்திமூன்று வயதுக்கு மேல் எட்டுவருடம்நல்லயோகமென்பர்

கூ

கூபயோகம்—ராகு நின்ற ராசியாதிபதிக்கு ஐந்து ஒன்பதில் சூரியன் செவ்வாய் கூடிநின்றால் கூபயோகம் இது இருபது வயதுக்குமேல் இருபத்து நாலுவருடம் நல்ல யோகம்

கூர்மயோகம்—லெக்கினம் இரண்டு மூன்று ஒன்பதுபத்து பதினொன்றில் சுபரும் பாவரும் கூடி நின்றாலும் அல்லது நாலு ஐந்துஆறுஏழுஎட்டு பனிரெ

சராசி.

ண்டில் சுபரும் பாவரும் கூடி நின்றாலும்,

(2) ஐந்து ஆறு ஏழில் சுபக்கிரசங்கள்கூடி நிற்க லெக்கினம் மூன்று மிடம் பாக்கியஸ்தானப ஸாபஸ்தானம் இதுகளில் பாவக்கிரகங்கள் கூடி நின்றாலும்,

(3) மூன்றுமிடம் பதினொறுமிடம் இதுகளில் குருநிற்க சுக்கிரன் சொட்சேத்திரமாகவாவது ஐந்திலாவதுநிற்கலெக்கிஞதிபதி பெலத்து நிற்குமாகினும்

(4) லெக்கிஞதிபதி லெக்கினத்தில் நிற்க பாக்கியாதிபதி பெலத்துநிற்குமேனும், லாபாதிபதி ஐந்திலேற புதன் கேந்திரகோணத்திருக்கலெக்கிஞதி பதிபெலத்திருக்க சுபக்கிரகம் பார்த்தாலும்,

(5) சராசிலெக்கினமாகி லெக்கிஞதிபதிபெலங்கொண்டுதிரராசியிலிருந்தாலும் அல்லது திரராசி லெக்கினமாகிலெக்கிஞதிபதி கேந்திர திரிகோணமான சராசியில் பெலத்து நின்றாலும் கூர்ம்யோகமாம், இதன் பலன் இராச்சியவான் நல்லபுத்தி பரவுபகாரி; மதுரவாக்கு பிராமண விசுவாசிதான தர்மமுடையவன் சிரிதுகாலம் சுகமுள்ளவன் சுகசரீரன் வித்தை விநோதன், இவ்விதபலன்களை கொடுக்கும்.

கெ

கெஜகேசரியோகம்— தனுராசியில குருவிருக்க மீனராசியில் சந்திரன் நின்றாலும், அல்லது கும்பராசியில் குருவிருக்கரிஷ

சகீர

ராசியில் சந்திரநின்றாலும்கெஜகேசரியோகம் இதன் பலன் ஜனரட்சகம், இராசிபத்தியம் மிருவாகனலாபம், பந்துஜன சேர்க்கை இவைகளுண்டாகும்

கே

கேதாரயோகம்— ஒன்பதாமிடத்தில் கீர்த்தி ஸ்தானாதிபதிவர்க்கோத்தமபாபிருக்க கீர்த்தி ஸ்தானத்தில் ஒன்பதுக்குடையவனிருக்க சந்திரனுக்கு ஒன்பதாமிடத்தில் குரு விருக்கில் கேதாரயோகமாம். இதுபதினாறுவயதுக்குமேல் மூன்றுவருடம் நல்ல யோகம்.

(2) நாலுராசிகளில் ஏழு கிரகங்கள் நிற்குமாகில் கேதாரயோகமாகும் இதுவேளாண்மைதொழிலுக்கும் பிறருக்குப் பரோபகாரியுமாகச்செய்யும்,

கோ

கோளயோகம்—ஒருராசியில் ஏழுகிரகங்கள் நிற்குமாகில் கோளயோகமாம் இது வறுமையுள்ளவனும்சிற்பசாஸ்திரனுமாய் அழுக்கனுமா யிருக்கச்செய்யும்.

ச

சக்ரயோகம்—பத்தாமிடத்தில்இராகுவிருக்க கருமஞதன இலக்கினத்திலிருக்க லெக்கிஞதிபதி பாக்கியத்திலிருக்கில் சக்கரயோகமாம் இது இருபத்தி ஒன்றுக்குமேல் ஆயுள்மட்டும் நல்லயோகமென்பர்.

சங்கமயோகம்—ஐந்துக்கும் ஆறுக்குமுடையவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்க அல்லது கேந்

சச — சழுத்தி.

திறத்திலேறலெக்கினதிபதிபெலமானாலும், ஐந்துக்கும் ஏழுக்குமுடையவர்கள் புதனுடனே கூடி யாரேனும் உச்சமாயிருக்க ஒன்பதா மிடத்திற்குடையவர் சுபக்கிரகமாய் தன்வீட்டிலிருந்தாலும் லாபஸ்தானத்தில் குருவிருக்க ஐந்தில் புதனிருக்க லெக்கினதிபதி பெலமாஇருந்தாலும்.

(2) சுக்கிரனும் சந்திரனும் கூடிநட்புவீட்டிலிருக்க ஒன்பதுக்குடையவன்செவ்வாயைப்பார்த்தாலும் லெக்கினதிபதியாவது கருமாதிபதியாவது ஒன்பதிலிருக்க பாக்கியாதிபதி பெலத்திருந்தாலும், மூன்றுக்குடையவனானாலும் அல்லது ஒருபாவியானாலும் நாலாமிடத்திலிருக்கும் உச்சக்கிரகத்தோடுகூடினாலும் சங்கமயோகமாம்.

சங்கியாயோகம்—ஏழு கிரகங்கள் ஒன்றின்மேலொன்றாய் லக்கினமுதல் அட்டம்மட்டும் நின்றிடில் சங்கியாயோகமாம், இதன் பலன் கீர்த்தி, செல்வம், மிகுபொருள் தீர்க்காயுசு உடையவனாவான்.

சசயோகம்—சனிகேந்திரம் உச்சம் மூலத்திரிகோணம்லக்கினத்திலிருந்தாலும் சசயோகமாம். இதன்பலன் அலேச்சல் சஞ்சாரம் குரூர புத்திதேசாதிபதியம் விதானிகன் ஞானி மாதுரு பக்தி தேச காந்தி வேசியர் போகம் நல்ல திரேசமுடையவனவன்.

சடாயோகம்—லக்கினத்தில் உச்சக்கிருகமிருக்க அதை செவ்வாய் பார்க்க பாக்கியாதிபதி மூன்றுமடத்திலிருந்திட சடாயோகமென்பர். இது 12-வயதுக்குமேல் 3-வருடம் நல்லயோகமாம்

சண்டயோகம்—பத்தாமடத்தில் சனியும் கருமாதிபதியும் ராகுடனே கூடிநிற்பது இது 50-வயதுக்குமேல் 3-வருடம் நல்லயோகமென்பர்.

சத்திரயோகம்—7, 8, 9, 10-ம்மிடங்களில் ஏழு கிரகங்கள் ஒன்றாய் கூடியிருப்பது இது துன்மார்க்கமும் தரித்திரமும் சோம்பேறித்தனமும் கொடுக்குமென்பர்

சந்திரிகாயோகம்—பாக்கி யாதிபதி இருந்த ராசிக்குடையன் சுக்கிரனைக்கூடி 5-ம் மிடத்தில் செவ்வாய்நிற்பதுஇது 26-வருடத்துக்குமேல் 3-வருடம் நல்லயோகமென்பர்

(2) இரண்டாமிடமுதல் எட்டாமிடம் வரையில் யேழுகிரங்கள் வரிசையாய் நின்றிடில் சந்திரிகயோகமாம்.

சந்திரயோகம்—யேழாமிட முதல் பன்னிரண்டாமிடம்வரையில் யேழுகிரகம் வரிசையாக நிற்பது இது பரோபகாரத்தன்மையுடையதாகும்.

சமுத்ராயோகம்—கருமாதி பதி பாக்கியத்திலிருக்க பாக்கியாதிபதி யேழாமிடத்தி லிருக்க யேழுக்கு மொன்பதுக்கு முடையவர்கள் கிரகமாரியிருக்க

சமுத்ராயோகம் ஐம்பத்தியே ழாண்டுக்கு மேல் பதினேழுவ ருடம்நல்ல யோகம்.

(2) இரண்டு நாலு ஆறு எட்டுபத் தில் பனிரெண்டில் யேழுகிரக கம் கூடியிருக்கினும் சமுத்ரா யோகம்.

சரஸ்வதியோகம்—லாபாதி பதி யினங்கிசாதிபதி பதினோராமி டத்தில் பாக்கியாதிபதியோடு கூடி உச்சம்பெற்று நிற்பது இ து நாற்பத்தியெட்டுக்கு மேல் முப்பத்திநாலு வருடம் நல்ல யோகமென்பார்.

சர்ப்பயோகம்—பாக்கியா திபதி மூன்றுமிடத்திலிருந்திட அதை குருபார்க்கின்சர்ப்பயோகமா ம இது ஆறுவயதுக்குமேல்மூ ன்று வருடம் நல்யோகமென் பர்

(2) ஒன்பதாமிடத்தில் சுக்கிரன் குரு லாபாதிபதி இவர்கள்கூடி நிற்க இவர்களை தானாதிபதி பா ர்த்து நிற்கிலும் சர்ப்பயோக மாம் இது ஐம்பத்துநாலுக்கு மேல்இருபத்துயெட்டுவருடம நல்லயோகமாம்.

சா

சாமரையோகம்—லெக்கின்தி ப தி கேந்திரத்திலாவது அல்ல து உச்சததிலாவதிருக்கஅதை குருநேரானபார்வை பார்த்து நிற்பது இதன்பலன், அழகுகீ ர்த்தி, தனம், சாஸ்திரங்கள் அனேகம் புத்திரர் இவைகள் உடையதாகும்.

(2) லெக்கினாதிபதி குருவோடுகூ டி பணபரத்திலிருக்க அதைசு க்கிரன் பார்ப்பதும் சாமரை யோகம் இது எழுத்துவித்தை சோதிட சாஸ்திரம் தர்மநெறி இவைகளை யுண்டாக்கும்.

(3) லெக்கினாதிபதி ஒன்பது பத் திலிருக்க லெக்கினம் சரராசி யாக இருக்கினும் சாமரையெ ன்பர் இது ராசாதிராசன் பா க்கியவானுமாகச்செய்யும்

(4) லெக்கினத்தில் இரண்டு சுபக் கிரகமிருக்க அல்லது வேறே ஏதாவது இருந்து யேழுக்கு மொன்பதற் குடையவர்கள்ப த்தாமிடத்தி லிருந்தாலும் சா மரையென்பர் இதன் பலன் ச மர்த்தன்வித்தைவாய்ச்சாலன் வல்லாண்மை இராசபூச்சியன் வயது எழுபது வரை நடக்கக் கூடியதாகும்.

(5) மூன்று பதினொன்றில் பாவ ரிருக்க அல்லது சுபக்கிரகமா வதிலிருக்க லெக்கினாதிபதி அ திக பெலவானாக யிருக்கினும் சாமரையென்பர் இது சோதி டவல்லவனாகவும் பந்துகிலேச னாகவு மிருக்கச்செய்யும்.

(6) சூரியன் வர்க்கோத்தமமாக வும் லெக்கினாதிபதியுச்சத்திரு க்க ஐந்து ஒன்பதில்புதனிருந் தாலும், லெக்கினம்சரராசியா கயிருந்து நாலுக்கும் ஏழுக்கு டையவர்கள் அதிக பெலமாக விருந்தாலும் சாமைரையோக மென்பதாம்.

(7) சரராசி உதயமாகிய பனிரெ ண்டில் லெக்கினாதிபதி யிருக்க குரு கேந்திரத்திலிருந்து பூரு வபட்சமாக இருந்தாலும் திர

ராசி உதயமாகி லெக்கினதிப
தி உச்சத்திலிருந்து லாபாதிப
திஒன்பதில் போயிருந்தாலும்
சாமரையென்பர்.

(8) பூருவபட்ச சந்திரனாகயிருந்
து பௌரணையில் ஜெனித்து
லெக்கினதிபதி உச்சத்திருக்க
லெக்கினத்தில் கிரகங்களிருந்
தாலும் புதன் சுக்கிரன் சூரிய
ன் ஒன்றுக்கொன்று கேந்திரி
க்க அல்லது கூடியிருந்தாலுஞ்
சாமரையென்பார். இதுகளின்
பலன்கீர்த்தி குலாபபத்தியம்
ராச்சிய சமானன் பாக்கியவா
னுமாக இருக்கச்செய்யும்.

சாரதயோகம்—லெக்கினம் வர்க்
கோத்தமமாக லெக்கினதிபதி
சுபக்கிரகத்தோடு கூட இவர்க
ளை லாபாதிபதி பார்க்கில்சார
தயோகம் இது வயது பதினை
ந்துக்குமேல் நாலுவருடம் நல்
லயோகமென்பர்.

சாலயோகம்—நாலுக்கும் பத்து
க்குமுடையவர் கிரகமாறியிரு
க்க லெக்கினதிபதி உச்சம்பெ
ற்றால் சாலயோகம் இதுவயது
பனிரெண்டுக்குமேல் எழுவரு
டம் நல்யோக மென்பர்.

சி

சித்ரயோகம்—இரண்டாமிடத்தி
ற்குடையவன் ஒன்பதிலிருக்க
பாக்கியாதிபதி பதினோராமிட
த்தில் நிற்க லாபாதிபதி உச்ச
மாகவிருந்தால் சித்ரயோகம்
இது ஒன்பது வருஷத்துக்கு
மேல் பத்துவருஷம்நல்லயோ
கமென்பர்.

சிவயோகம்—பஞ்சமா பதியும்
லாபாதிபதியும் பாக்கியஸ்தா
னத்திலிருக்க ஒன்பதுக்கும்ப
த்துக்கு முடையவர்கள்ஐந்தா
மிடத்திலிருக்கில்சிவயோகமா
ம் இது ஜெனனம் தொட்டு ஆ
யுள்மட்டும் நல்ல யோகத்தை
அடையன்.

சு

சுபயோகம்—இரண்டாமிடத்தில்
சந்திரன் சுக்கிரனோடுகூடிநிற்க
தனாதிபதி பதினோராமிடத்தி
லிருக்க லாபாதிபதி ஒன்பதி
லிருக்கில் சுபயோகம் இது வ
யதுநாற்பத்தியேழின்மேல் மு
ப்பத்திரெண்டு வருடம் நல்ல
யோகம்

(2) ஏழுக்குடையவன் மூலத்திரி
கோணமாயிருக்க தனாதிபதிஉ
ச்சமாகில் சுபயோகமாம் வ
யது ஐம்பதுக்குமேல் மூன்று
வருடம் நல்யோகமென்பர்.

(3) பாக்கியாதிபதி நின்ற அங்கி
சாதிபதிஉச்சனாகி தனஸ்தான
த்தில் தனாதிபதியும் பாக்கியா
திபதியும் கூடி நிற்கில் சுபயோ
கமாம் இது அறுபத்துமூன்று
க்குமேல் ஆறுவருடம் நல்ல
யோகமென்பர்.

சூ

சூலயோகம்—மூன்று ராசிகளில்
எழு கிரகங்கள் நிற்குமாகில் சூ
லமென்பர் இதநிரேகத்தில் த
ழும்பும் கொலைபாதகங்கள்செ
ய்ய வல்லவனாகவும், தரித்திர
வானுமாகவு மிருப்பான்.

த

தடாகயோகம்—இரண்டு ஐந்து
எட்டு இதில் எழுகிரகமிருந்தா

லும், அல்லது மூன்று ஆருஒன்பது இந்த மூன்று ராசிகளில் ஏழு கிரகங்கள் இருந்தாலும், தடாகயோகமாம். இது தனவானாகயிருந்தும் லோபியாக இருக்கச்செய்யும்.

தண்டயோகம்—மூன்றுக்குடையவன் உச்சமாகவிருக்க மூன்றுமிடத்தில் குருவிருக்க சுக்கிரன் பார்க்குமாகில் தண்டயோகமாம். இது இருபத்தைந்து வயதுக்குமேல் எட்டுவருடம் நல்யோகமென்பர்.

## தி

திரிமூர்த்தியோகம்—சந்திரன் சுங்காசநாங்கிசமாகவும் குருபாரிதாசாங்கிசமாகவும் சுக்கிரன் ஐராவதாங்கிசமாக விருந்தாலும், அல்லது சுக்கிரன் பாராவதாங்கிசத்திலாவது குருசிங்காச நாங்கிசத்திலாவது சந்திரன் ஐராவதாங்கிசத்திலாவது இருந்தாலும், அல்லது இரண்டாமிடத்ததிபதிக்கு இரண்டு எட்டு பனிரெண்டில பாபரும் சுபரும் கூடியிருந்தாலும் திரிமூர்த்தியோகமென்பர்.

(2) பத்துக்குடையோன் நின்றராசியாதிபதியின் அங்கிசாதிபதி எந்த அங்கிசாதிபதியோ அவன் கேந்திர உச்சமாகவிருந்தாலும் அல்லது அது அந்ததானத்துக்குடையோனும் ஒன்பது எட்டுநாலில் குருபுதன் சுக்கிரன் தனித்தனியே நின்றாலும், அல்லது நாலுபத்து பனிரெண்டில் சூரியன் செவ்வாய் சுக்கிரன் தனித்தனியே நின்றாலும் திரிமூர்த்தி யோகமென்பர். இதுகளின்பலன் சகலசம்பத்தும் ராஜயோகமும் சுகமும் கைகாலில்சுபரேகையும் ஞானவானாகவு மிருக்கச்செய்யும்.

## து

துர்துராயோகம்—சந்திரனுக்கு முன்னும் பின்னுமாக கிரகங்களெல்லாமிருக்குமாகில் துர்துராயோக மென்பர். இதன்பலன் போகபோக்கியம் தியாகி, பராக்கிரமன், பிரதானி, வெகு ஜனத்துக்கதிபதியாயும் வெகு ஜனங்களுக்குச் சினேகமுடையவனாகவும், பசுவர்க்கம்மெத்தஉடையதாகவு மிருக்கச் செய்யும்.

தூபயோகம்—செவ்வாயின் அங்கிசாதிபதிக்கும் சந்திரலெக்கிணதிபதிக்கும அய்ந்து ஒன்பதில் குருசுக்கிரன் இருக்க பத்தாமிடத்தில் சநி உச்சமாயிருந்தால் இது தூபயோகமாம். இது ஒன்பது வயதுக்குமேல் ஒன்பதுவருஷம் நல்ல யோகமாம்.

(2) லெக்கிணதிபதி நின்ற அங்கிசாதிபதி அய்ந்தாமிடத்திலிருக்க பஞ்சமஸ்தானத்தைச்சுக்கிரன்பார்க்கில் தூபயோகமாம். இதுபதினோராண்டுக்குமேல்மூன்றுவருடம்நல்லயோகம்.

## தே

தேவேந்திர யோகம்—திராசி உதயமாகி லெக்கிணதிபதி லாபத்தி லிருக்க குடும்பாதிபதி கருமத்தானத்திலிருந்து பஞ்சமாதிபதி குடும்பத்தானத்திலி

ருக்க பாக்கியாதிபதிலெக்கின மேரில் தேவேந்திர யோகமாம். இது முப்பத்தாரின்மேல் எட்டுவருடம்நல்லயோகமாம்

தோ.

தோனியோகம்—பஞ்சமா திபதி வரைந்து குடும்பத்தானத்தில் லாபாதிபதி சந்திரனைக்கூடி நிற்க தோணியோகமென்பர். இது முப்பதுவயதுக்குமேல் மூன்றுவருடம் நல்லயோகமென்பர்.

ந

நல்யோகம்—லெக்கினமுதல் யேழாமிடம்வரை யேழு கிரகங்கள் ஒன்றின்பின் ஒன்றால் தொடர்ந்துநிற்பது இதுகீர்த்தியுப் செட்டுத்தனமுமுடையதாகும்

நளயோகம்— பாக்கியாதிபதி நின்றஅங்கிசாதிபதி லெக்கினதிபதியுடன் கூடி உச்சம்பெற்று நிற்பது இது நாற்பத்திரெண்டு வயதுக்குமேல் முப்பத்திரண்டு வருடம் நல்லயோகம்.

நா

நாசிகாயோகம்—லெக்கினதிபதியும்குருவும் பத்தாமிடத்தி லிருந்திட சந்திரன் தனத்திலிருக்க சப்தமாதிபதிலெக்கினமேறி லெக்கினதிபதியினால் பார்க்கப்பட்டால் நாசிகாயோகமென்பர். இது பதின்மூன்று வயதுக்குமேல் மூன்றுவருடம் நல்லயோக மென்பர்.

நாபியோகம்—பதினோரா மிடத்தில் குருநிற்க குருவுக்கும்பதினொன்றில் லாபாதிபதி சந்திரனை கூடி நிற்கில் நாபியோகமாம்இது 30-வயதுக்குமேல் 3-வருடம் நல்லயோகமென்பர்.

நாளயோகம்—பூர்வபட்சத்து சந்திரனும் குருவும் சுக்கிரனும் ஒன்பதில் நிற்கபுதன்லெக்கினங்கிசம்பெற்று நிற்குமாகில் நாளயோகம்இது ஜெனனம்தொட்டு ஆயுள்மட்டும் நல்லயோகமென்பர்.

ப

பட்சியோகம்—நாலாமிடம் பத்தாமிடத்தில் கிரகங்களெல்லாமிருக்குமாகில்பட்சியோகம் இது தூர்த்தனாகவும் தேசாந்திரங்கள் சஞ்சாரனாகவுமிருப்பன்

(2) ஒன்று அய்ந்து ஒன்பதுகளில்கிரகங்களெல்லா மிருக்குமாகில்காடயோகமாம் இது வெகுகாலம்வரை சுகத்தை அனுபவிப்பன்.

பத்ரயோகம்—சந்திரனுக்கு ஒன்பதாமிடத்தில் குருவிருக்கலெக்கினத்திற்குஒன்பதாமிடத்தில் சுக்கிரன நிற்குமாகில் பத்ரயோகமாம். இது நாற்பதுவயதுக்குமேல் ஒன்பதுவருடம் நல்லயோகமென்பர்.

பரமானந்தயோகம்—திர லெக்கினம் உதயமாக யேழு அய்ந்து பதினோராமிடத்தில சூரியன், சந்திரன், சனிஇவர்கள் தனித்தனியே நின்று குருவும் உச்சம்பெருமாகில் பரமானந்தயோகமாம், இது நெடுநாள் வரை நல்லயோகத்தை அனுபவிப்பன்.

பர்வதயோகம்—யேழுக் குடையவனின்ற ராசியாதிபதி கேந்த

55 , 56 pages missing in book

பாவ.

ரகோண மூலத்திரி கோணம் பெற்றாலும் அல்லது லெக்கின திபதி விரையாதிபதி இவர்கள் நட்பு க்ஷேத்திரத்தில் கேந்திரம்பெற்று நட்புக் கிரகத்தால் பார்க்கப்படு மாகிலும் பர்வத யோகமாம்.

(2) குடும்பாதி பதியும் லாபாதி பதியும் உச்சம்பெற்றாலும் பர்வதயோகமாம் அல்லதுயேழாமிடத்தில் சுபக்கிரகமிருக்கவெட்டாமிடத்தில் பாவம்நிற்கலாபாதிபதியும் பாவிக ளுடனே கூடுமானால் பருப்பத யோகமாம் இது பாக்கியவான்கீர்த்திவெகுசனத் தால் பூசிக்கப்படுகிறவனு மாயிருப்பான்.

பா

பாசயோகம்—மூன்று மிடத்துக்குடையவன் ஒன்பதில் நிற்க அட்டமத்தில் சுக்கிரனிருந்து ஆறுமிடத்தில் சுபக்கிரக மிருக்குமாகில் பாச யோகமாம் இது பதி னைந்து வயதுக்கு மேல் யெட்டு வருடம் நல்ல யோகம்.

(2) ராசிக்குள்ளே யேழுகிரகமிருக்குமானாலும் பாசயோகமாம் இது ஆளடிமை திரவிய சம்பத்தும்சுகசரீரமாகவும்மிருக்கச்செய்யும்.

பாதாளயோகம்—சுக்கிரன் வியாழத்திலிருக்க பனிரெண்டுக்குடையவன் உச்சனுகி பாக்கியாதி பதியுடன்கூடி நின்றால் பிரதானயோகமாம் இது அய்ம்பத்தேழு வயதுக்கு மேல் பனிரெண்டுவருடம் நல்லயோகமென்பர்.

பூச.

பிரமயோகம்—குரு ஒன்பதாமிடத்திலாவதுகேந்திரத்திலாவதிருக்க சுக்கிரன்லாப கேந்திரத்திலாவது அல்லது குரு சுக்கிரன் கிரகமாறி நின்றாலும் பிரம யோகமாம் இது முப்பத்தாராண்டுக்குமேல் பனிரெண்டுவருடம் நல்லயோகமென்பர்.

பு

புஷ்ப யோகம்—என்பதுக்கு உடையவன் ஒன்பதிலிருக்க கருமாதிபதி குடும்பஸ்தானமேரி லெக்கினதிபதி லாபத்தில் உச்சம்பெற்று நிற்குமாகில் புஷ்ப யோகமாம். இது வெகு நாள் வரை அதிக சம்பத்தோடுங் கூடி வாழ்வனென்பர்.

புத்ரயோகம்—புதன் லெக்கினம் கேந்திரம் மூலத்திரிகோணம் உச்சம் இந்தராசிகளில் இருக்குமாகில்புத்ரயோகமாம் இது பந்து ஜனப்பிரியம், காரியசமர்த்து, அதிக காமதத்துவம், சர்வஜனஉபகாரத்துவம் இதுகளையுடையதாம்.

பூ

பூபயோகம்—சந்திரன் அய்ந்தில் நிற்க அய்ந்துக் குடையவன் உச்சனுக பாக்கியாதிபதி குடும்பமேரி நிற்கில் பூபயோகமாம் இதுமுப்பத்திரண்டு வயதுக்குமேல்ஆயுள்மட்டும் சகல சம்பத்தையுடைய நல்லயோகமென்பதாம்.

(2) லெக்கினம் இரண்டு மூன்று நாலு இந்த ராசிகளில் யேழு கிரகங்கள் நிற்குமாகிலும் பூப

பூப.

யோகமாம் இது யோகம், தவம், ஞானம், யாகம் இவைகளுக்குடையதாம்.

பேரிகையோகம்—இரண்டுயேழு பனிரெண்டில்கிரகங்களிருந்து பத்தாமிடத்திற்குறியவன் பெலத்து நின்றாலும் அல்லது குரு கேந்திரத்தில சுக்கிரனேடும் லெக்கினதி பதியோடும் கூடி நிற்க பாக்கியாதிபதிபெலத்து நின்றாலும் அல்லது செவ்வாய்க்குகேந்திர திரிகோணத்தில் சுக்கிரனும் குருவும் இருக்க லாபாதிபதி பெலத்து நின்றாலும் அல்லது லாபாதிபதிக்கு சுக்கிரன் கேந்திரதிரிகோணம் பெற்றாலும் பேரிகை யோகமாம்.

(2) சனிக்கு ஆறுயெட்டில் செவ்வாயிருக்க, செவ்வாய்க்குஆறுயெட்டில் குருவிருக்க, குருவுக்குஆறுயெட்டில் சூரியன் இருந்தாலும், அல்லது அய்ந்து ஒன்பதில் பாவக்கிருக மிருக்க கேந்திரத்தில் சுபகிரக மிருக்க சூரியன் பெலத்து நின்றாலும் அல்லது குருவுக்கு மூன்றிலாவது அய்நது யேழிலாவது புதனிருக்க புதனுக்குப் பதில்குருவிருந்தாலும் பேரிகை யோகமாம்.

(3) லெக்கினதிபதி குரு செவ்வாய் இவர்கள் மூன்றில் நிற்க அல்லது பார்க்க இரண்டாமிடம்ஒன்பதாமிடம் இதுகளில் பாவக்கிரகங்கள்இருந்தாலும், அல்லதுலாபாதிபதி உச்சனைக லாபஸ்தானத்தைகுருபார்க்க சுக்கிரன் கேந்திரதிரிகோணத்திலிருந்தாலும் அல்லது ஒன்பதாமிடம் பனிரெண்டாமிடம் இதுகளில் புதனிருக்க ஒன்று அய்ந்து இதுகளில் குருவிருந்து அட்டமத்தோன் பெலத்திருக்குமேனும் பேரிகையோகமெனபதாம்.

(4) நாலாமிடத்திற் சதிபதியும் குருவும் ஒன்பதா மிடத்தைப் பார்த்தாலுமிருந்தாலும் அது வன்றி குருஉச்சம்பெற்றாலும் அல்லது வெள்ளியும் குருவும் ஒன்றுக் கொன்று நட்பாய்ப் பார்த்தாலும் உச்சம்பெற்றிருந்தாலும அல்லதுபுதன்குரு லெக்கினத்தைப்பார்க்க லெக்கினதிபதி உச்சமா யிருந்தாலும அல்லது ராகுஇருந்த ராசியாதிபதி உச்சகேந்திர திரிகோணத்திருக்க ராகுசுபராசியேறி சுபவர்க்கம் பெற்றாலும் பேரிகையோகமாம்.

இதுகளின் பலன் அழகு ஜனப்பிரியம் தனம் தர்மம தீர்க்காயுளும் இராஜசமானம் புத்திரசம்பத்து செல்வம் வித்தை ஆயுள் விர்ததியும், நற்குலம் மன்னர் சமானம வாகனப் பிராப்தி ஆரோக்கியம் கீர்த்தி பூமிலாபம்ஜனச்சேர்க்கை வீரலாபம்

இதுகளும் ஞான சாஸ்திரம்துய்யபுத்தி வாய்ச்சாலகம் சாது தத்துவம் நல்லகுணம் போக போக்கியம் ஆகிய இப்பலன்களெல்லாம் முறை முறை நடக்குமென்பதாம்.

போகபோக்கியம்—ஒன்பதுக்குடையவன் நின்ற திரேகாண

ராசியில் பஞ்சமாபதி யிருக்க ஐந்தாமிடத்தில் குருயிருக்கு மாயின் யோகயோக மென்பதாம் இது நாற்பத்திரண்டுக்கு மேல் ஐந்துவருடம்நல்லயோக மென்பதாம்.

## ம

மகுட்யோகம்—குருஐந்தாமிடத் திலிருக்க பஞ்சமாதிபதி ஒன்பதிலிருக்க பத்தா மிடத்தில் சனியிருக்கில் மகுடயோகமென்பதாம் இது முப்பத்தாரூண்டு வருடத்திற்குமேல் முப்பத்திரண்டு வருஷம் நல்ல யோகமென்பதாம்.

மட்சயோகம்—லெக்கினத்திலும் பாக்கியத்திலும் பாவகிரகமிருக்க ஐந்தாமிடத்தில் பாவரும சுபரும்கூடியிருக்க நாலாமிடத்திலும்பாவரிருந்தாலும் அல்லது சரராசியில் குருவிருந்து சரராசியேலெக்கினமாகி சுபகிரகம்பார்க்க இருக்ககேந்திரஸ்தானத்தில் நல்லோ ரிருக்க லெக்கினுங்கிர கேந்திரகோணத்தில் ஐந்துக்குடையவன் பார்த்தாலும மட்சயோகமென்பதாம்.

(2) குருவும் சுக்கிரனும் திரராசியிலிருக்க திரிகோணராசியில் கிரகங்களிருக்க அதிக பெலதுடன் லெக்கினததில் கிரகங்கள்இருந்தாலும் அல்லதுமூன்றுக்குடை யவனுடைய அங்கிசாதிபதி உச்சமாகவிருக்கசுப க்கிரகம்பார்த்தாலும் அல்லது ஒன்பதுக் குடையவனேறின அங்கிசாதிபதி குருசுக்கிரனுங்



கேந்திர கோணத்திருந்தாலும் மட்சயோகமென்பதாம்.

(3) லெக்கினதிபதி சுபர் அங்கிசம்பெற்று தேவலோகாங்கிசமாகிபாக்கியாதிபதி சிங்காங்கிசம்பெற அல்லது கேந்திரமிருக்க சரராசி லெக்கினமாகில் மட்சயோகமாம் இதுகளின் பலன் கலைக்கியானி குணம் அழகு மனோரதம் தயவு மக்ராச சமானம் கிரமாதிபதி கோபுரம் ஆலயம் திருப்பணி செய்து முடித்தல் மகாதானம் செய்தல் மாசுத்தனமா போகி புத்திர மித்திரர்கள் யோகம் ரூபலாவண்யமுள்ள தார இத்யாதிபலன்களை யுடையதாம்.

மதனயோகம்—ஐந்துக் குடையவன்நட்புக் கிரகத்தோடும் சுக்கிரனோடுங்கூடி லெக்கினத்திலிருக்க லாபாதிபதி நட்பு ஆட்சி உச்சராசிகளில் இருந்தால் மதனயோகமாம். அது இருபத்தைந்துவயதுக்குமேல் யெட்டு வருடம நல்லயோகமென்பரர்.

மந்தாகினி யோகம்—சுக்கிரனும் குருவும் அட்டமத்திலிருக்க புதன் லெக்கினமேவ சரராசி லெக்னமாக ஐந்து யேழு பதினொன்றில் சூரியன் சந்திரன் சனி இருந்தால் மந்தாகினி யோகமெனபதாம் இது இருபத்தேழு வயதுக்குமேல் பதினொரு வருடம் நல்லயோக மென்பதாம.

மரணயோகம்—நாலு ஐந்துஆறு ஏழு இந்த ராசிகளில ஏழுகிரகங்கள் இருக்குமாகின் மரண

யோகமென்பர். இது துஷ்டன் அடுத்தவரை கெடுக்கும் தன்மை கொலைகள் அனேகம்செய்யும் தன்மை யெக்காலமும் கொடியனென்று பேர் கொடுக்கும் தன்மை யுடையதாம்.

மா

**மாலிகாயோகம்** - லெக்கினமுதல்யேழுராசி வரையில் ஏழு கிரகங்கள் நிற்குமாகில் மாலிகா யோகமென்றும் இது கீர்த்தை வித்தை தனதானியம் ராஜாங்கம் பெரியோர் பூஜித மென்றுரைப்பார்.

(2) இரண்டா மிடமுதல் யெட்டாமிடம் வரையில் ஏழு கிரகமிருக்குமாகில் இரத்நாவலி மாலிகாயோகமென்றும இதன்பலன் அழகுபிதிர்பக்தி கெணித வித்தை தனவானதீரன் வருங்கால மறியுந் தன்மை யுடையதாகும்.

(3) மூன்றா மிடமுதல் ஒன்பதாமிடம் வரையில் எழு கிரகமிருந்து அதிலிரண்டு கிரகம நேத்திரம் பெற்று நின்றாலும் இரத் நாவலி மாலி கா யோக மெனபதாம். இதன் பலன் யோகி வித்துவான், ஜெயமுடையயோன், வாய்ச்சாலகன் செயலல்லோன தீரன் இத்யாதி குணங்களை யுடையதாம்.

(4) நாலா மிடமுதல் பத்தாமிடம் வரையில் எழு கிரகம் நிற்குமாகிலும் மாலிகா யோகமென்பதாம இதன் பலன் பக்திவித்தைதெய்வப் பிரதிஷ்டை மகாராஜன் வெகுதேசாதிபத்தியம் குருதெய்வம்பிராமணால் விசுவாசம் சவுக்கியம் பாக்கியதை போகி விநோ வேடிக்கையில பிரியம் இத்யாதிபலனை யுடையதென்பதாம.

(5) ஐந்தா மிடம் முதல் பதினோராமிடம் வரைக்கும் எழு கிரகங்கள் நிற்குமாகில் இதுபின மாலிகாயோகமெனபர் இதனபலன் வித்தைமந்திரி ஞான சாஸ்திரிகள் தீட்சதன்போகி தனங்கீர்த்தி ராசாங்கம் தெய்வப்பிராமணர் பத்திதயை விதரணம் இதுகளையுடையதாம்,

(6) ஆறாமிடம் தொட்டு பனிரெண்டாமிடம் வரையில் எழு கிரகம் நிற்குமாகில் தரித்ர மாலிகாயோகமெனபதாம் இதன் பலன் தரித்திரன்சஞ்சாரன் துஷ்டன்காமி அனுசாரன் இத்யாதிபலன்களை யுடையதாம்.

(7) ஏழாமிடம் முதல் லெக்கினம் வரையில் ஏழுகிரகம் வரிசையில் நிற்குமாகில் இதுகாமமகலிகாயோகமென்பதாம் இதன் பலன் நிருபர்க்கு பூஜிதனும்போகி, களத்திர மனேக முடையதும் தெய்வப்பிராமணர்பக்தி தீர்க்கவித்தை தீர்க்கபுத்தி தெய்வப் பிரதிஷ்டை இதுகளையுடையதாம்.

(8) யெட்டாமிட முதல் இரண்டாமிடம் வரையில் எழுகிரகம் நிற்குமாகில் துர்பாக்கிய மாலிகாயோகமென்பதாம் இதுயாகாதி சர்மதானத்திறகதிகாரன் தேவபக்தி சகலகலைவல்லோன் தீர்க்காயுள பாவசிந்தைசுராபாணி மாதரால் ஜெயிக்கப்பட்டோன் இத்யாதிபலனையுடையதாம்.

(9) ஒன்பதாமிடம் முதல் மூன்றாமிடம்வரையில் ஏழுகிரகங்கள் நின்றால்சுபமாலிகா யோகமென்பதாம். இது தியாகிதனம்புத்தி அழகுநற்கீர்த்தி வெகு களத்திரத்தையுடையயன் பிரியவசனம் சர்வஜனப்பிரியன் கால்கைகளின் நல்லரேகைகளையுடையவன துன்ப மில்லாமல் பொருளை யுடையவன இத்தியாதி பலன்களையுடையதாம.

(10) பத்தாமிட முதல் நாலாமிடம்வரையில் ஏழுகிரகங்கள் நிற்குமாகில் கீர்த்திமாலிகா யோகமென்பர். இது சாஸ்திரிகோபி வித்துவான இராஜப் பிரசித்தன் பந்துஜனப் பூஜிதனும்.

(11) பதினோராமிடமுதல் ஐந்தாமிடம்வரையில் எழுகிரகங்கள் நிற்குமாகில் விஜயமாலிகா யோகமென்பதாம். இது தனவான் தேவப்பிரதிஷ்டை நிபுணன, நல்லபுத்தி காரிய சமர்த்தன, யோகிகாமி இதயாதி பலன்களை யுடையதாம்.

(12) புனிரெண்டாமிட முதல் ஆறாமிடம் வரையில் எழுகிரகங்கள் வரிசையாகநிற்கிலும் மாலிகாயோகமெனபதாம். இது தெய்வப்பிரதிஷ்டை தர்மவான், சாமர்த்தன், புதன்மானும், அங்கவீனமுடையவன, மன்னவனும், மனறமேயார்கள் பூச்சியனு பாவ சிந்தையுடையவனும், இத்யாதி பலன்களை யுடையதாம்.

மாளவயோகம் - சுக்கிரன், மூலத்திரிகோணம், உச்சம, கேந்திரம், உதயம் இந்த ஸ்தானங்களில் இருந்தால் மாளவ யோக மென்பதாம. இதன பலன் சுகந்தவாசனையுடைய தேகம், உச்சகம், புத்திரசம்பத்து, வாகன பாக்கியம் விதரணம் இதுகளை யுடையதாம்.

மி

மிருகயோகம்-எட்டாமிடத்திற் குடையவனின்ற அங்கிசாதிபதி பாக்கியஸ்தானத்தில் சுபகிரகங்களோடு கூடிநிற்க பாக்கியாதிபதி உச்சமாயிருக்கில் மிருகயோகமாம் எழுவயதுக்குமேல் ஒன்பது வருடம நல்லயோகம்.

(2) பனிரெண்டுக் குடையவன் பனிரெண்டிலிருக்க அட்டமாதிபதிநாலு பனிரெண்டிலிருக்க பாக்கியாதிபதி இவரைப் பார்க்கிலும் மிருகயோகமாம் இது நாறபது வயதுககு மேல் முப்பததிரெண்டு வருடம் நல்லயோகமென்பர்.

மிருதங்க யோகம் - லெக்கினதிபதியினங்கிசாதிபதி, அமுசையில் எந்த அமுசை பெற்றிருக்கிறானோ அதற்குடையவன் உச்சகேந்திர கோணத்தில் சுபக்கிரகத்துடன் கூடி நிற்கிலும்.

(2) அங்காரகன் சொட்சேத்திரம் பெற்று அமுசையில் உச்சாங்கிசம் பெற்றுநிற்க இவரை குரு எழிலிருந்து பார்க்கிலும்.

(3) ஐந்தாமிடத்திற் குடையவன் நின்ற அங்கிசாதிபன் கேந்திரகோணத்திலாவது அல்லது உச்சாங்கிசம்பெற்றிருந்தாலும்.

(4) சூரியன் அங்காரகனுக்கு ஆறுயெட்டில் நிற்க சனி சூரியன் நின்ற அங்கிசத்திற்கு கேந்திரகோணத்திலிருந்தாலும் அல்லது உச்சம் பெற்றிருந்தாலும்.

(5) பதினோரா மிடத்திற்குடையவன் உச்சமாகி சுக்கிரனோடு நிற்க இவர்களின் ராசியாதிபதி கேந்திரத்தில் நிறகிலும் இவைகளெல்லாம் மிருதங்கயோகமாம் இதுகளின்பலன் தெய்வப்பிராமணர் பக்தி, காமசிந்தை, பெரியதனம், பாவபுத்தி, விதரணிகள், பதினாலு வயதுக்குமேல் ஒன்பது வருடம் நல்லயோக மெனபதாம்.

மீ

மீனயோகம் - பதினொன்றுக் குடையவன் சுக்கிரனோடுகூடி உச்சம்பெற்றிருக்க லெக்கினதிபதி கேந்திரம பெற்றால் மீன யோகமாம் இது பதினைந்து வயதுக்குமேல் மூனறு வருஷம நல்ல சம்பத்தை அனுபவிப்பன.

மு

முசலயோகம் - பத்தா மிடத்தில் ராகு நிற்க பத்துக்குடையவன் உச்சனாக இவரை சனிபார்த்து நிற்கில் முசல யோகமாம். இது முப்பத்திஒன்று வயதுக்குமேல் மூனறுவருஷம்நல்ல யோகமென்பர்.

(2) எழு கிரகங்கள் திராசியில் நின்றிடில் முசல யோகமாம். இதன் பலன அபிமானம், தனவானபந்துக்கள்கூட்டம், இவைகளை யுடையவனும்.

மே

மேகயோகம்-குருவுக்கு மூன்றில் சுக்கிரனும் சுக்கிரனுக்கு ஒன்பதில் சூரியனும் நிற்க பத்துக்குடையவன் நாலில் நின்றிடில் மேகயோகமாம். இது இருபத்தியேழு வயதுக்குமேல மூன்றுவருஷம் நல்லயோகமென்பர்.

மேதினியோகம்-ஐந்து, ஒன்பது, எழு பத்து, இந்த ஸ்தானங்களில் சுபக்கிரகபநிற்க இவர்களை பாவக்கிரகங்கள் பாராதிருக்குமாயின் மேதினி யோகமாம். இது ஐம்பத்திநாலு வயதுக்குமேல் ஐந்துவருஷம் நல்லயோகமென்பர்.

யூ

யூகயோகம் - இரண்டு ராசிகளில் ஏழு கோட்கள் கூடிநிறகுமாகில்யூகயோகமென்பர். இதன்பலன் தரித்திரம், மெலிந்ததேகம், அழுக்காடை வஸ்திரபீடை இவைகள் உண்டாகும்.

ரி

ரிஷபயோகம்-சந்திரன் கேந்திரமேறி பதினோராமிடத்தில் செவ்வாயும் சுக்கிரனும்நிற்க சந்திரனுக்கு ஒன்பதில் குருவிருக்கு மகில் ரிஷபயோகமென்பர் இது இருபத்தி ஐந்து வருடத்திற்குமேல் ஒனபதுவருடம் நல்லயோகமென்பர்.

வ

வம்சயோகம்-ஏழுக் குடையவனேரிய அங்கிசாதிபதி உச்சம் பெற்று பத்துக்குடையவனைக் கூடி நின்றால் அதுவும் வம்சயோகமெனபர். இது பதினேழுவயதுக்குமேல் எட்டுவருஷம் செலவத்தை அனுபவிப்பனென்பர்.

வா

வாசியோகம்-சூரியனுக்குமுன்னேசுக்கிரன் நிற்கிலும் இதன பலன் பயம.துர்ச்சனன்,கல்விப் பிரியன்பேசுகவான்.

விகட.

(2) சூரியனுக்கு முன்னே சநிநிற்கிலும இதன்பலன பரஸ்திரி கமனன், பாதாரவிஷயன், பர உபகாரி, பந்துக்குடையவன்

(3) சூரியனுக்கு பின்னே கிரகங்கள் நிற்கிலும் வாசியோகம்.

(4) சூரியனுக்கு பின செவவாய்நிற்கில வியாபாரயிகும், வல்லான்வித்தை தீர்க்கம், வெகுபுத்திரருமுடையவன.

(5) சூரியனுக்கு பின் புதன்நிற்கில் போகபோக்கியனும் கலவி, தனம், பாக்கியம் உடையவனும,

(6) சூரியனுக்குப்பின் குருசுக்கிரன் கூடிநிற்கில் சகலசாஸ்திரம் கேழ்க்கவும படிக்கவும் பிரியனும் புதிய வஸதிரங்களும், ஆபரணங் களும், அணிந்துகொள்ளப் பிரியன்.

(7) சூரியனுக்கு பினனே சநிநிற்கில் எல்லாம் விபரீதப் பலனகளாகவே நடக்கும்.

வி

விகடயோகம்-நாலு, ஐந்து,ஆறு, எழு எட்டு, ஒனபது, பத்து, இந்தஸதானங்களில் எழுகிரகங்கள் சேர்ந்து நின்றால் விகடயோகமாம இதன் பலனசிலவகைசெய்வன. பொய்சொல்லுகிறவனுமாக இருப்பன்.

விஷ்ணுயோகம் - கருமாதிபதி ஒன்பதாவது அங்கிசமேறி பாக்கியஸதானத்தில் பாக்கியாதிபதியோடு கூடி நின்றால் விஷ்ணுயோகமாம். பதினாலுவயதுக்குமேல்ஜெனமம்வரையில் லெக்ஷிமிகடாக்ஷமும் நிறைசெல்லுவானுமாக இருப்பன்.

விஷ்ணுயோகம்-கருமாதிபதி உச்சம் பெறறு பூருதபட்சத்து சந்திரனுடனேகூடி ஏழாமிடததில் நிற்க சரராசி லெக்கினமாகி இராத்திரியில் ஜெனனமாகில் விஷ்டி யோகம் இருபத்திஐநது வயதுக்குமேல் ஐந்துவருஷம் நல்லயோகமென்பர்.

வீணையோகம்-எட்டாமிடதிதோனுச்சனுது மூன்றில்நிற்க லாபாதிபதி இ

வேசி

ரண்டாமிடத்தில் நிற்குமாகில் வீணையோகமாம் இது பனிரெண்டுவயதுக்குமேல் பனிரெண்டு வருடம் நல்ல யோகமென்பர்.

(2) லெக்கினமுதல் ஒவ்வொரு ராசிகளிலும் ஒவ்வொரு கிரகமாக தனித்தனியே ஏழுகிரகங்கள் நிற்குமாகினும் வீணையோகமென்பதாம். இதன்பலன் கூத்து, பாட்டு, சங்கீதம் முதலிய உல்லாசவித்தைகளில் பிரியமுள்ளவனாக இருப்பன்.

வே

வேசியாயோகம்-1. சூரியனுக்கு முன்னே கிரகங்கள் நிற்பது வேசியா

வேசி

யோகமாம். அதில் செவ்வாய் நின்றால் ஸ்திரீ நிந்தையுள்ளவனாகவும் ஒருவனுக்குகீழ்ப்பட்டவனாகவும் வரவும் செலவும் சரியாக இருக்கக்கூடியவனாகவு மிருப்பன்.

(2) சூரியனுக்கு முன்னே புதன் நின்றால் வித்தையுடையவன் தரித்திரன் ஆசாரவான், பக்தர்கள் சேர்க்கையுள்ளவனாகவு மிருப்பன்.

(3) சூரியனுக்குமுன்னே குரு நிற்கில் வித்துவான், வெகு புத்திருடையவன் வியாபாரத்தில் வல்லவனாகவும் தீரனாகவும் இருப்பன்.

யோகப்பொருளகராதி-முற்றிற்று.

# சோதிடக் கடல்போதினி.

## வெண்பா.

போற்றுகின்ற சோதிடநூல் பொய்யா தொருநாளுஞ்
சாற்றலறியாதவர்க்கு பொய்-நேற்றியுள
வாசானைத்தேடியவர் பதத்திற்றெண்டுசெய்து
பேசானைப்போலே பிழை..

கேட்போரியல்பு.

பெருங்கடல் சூழ்ந்தவையகத்தில் பெருகிய மாந்தர்க்கெல்லாம்
வருமின்பதுன்பந்தன்னின் வகையதை யறியவேண்டில்
பருதியோடொன்பான்கோளின் பலன்புணர்ந்தறிவோர் தம்மை
குருவதாய்மனதிலெண்ணிக் கொண்டவரிடத்திற்சென்றே. (1)

வெள்ளிலையடைக்காயோடு விரும்புதட்சணையும்வைத்து
உள்ளுளோபிவர் தானிந்த வுண்மைசொல்லவ.ரேயென்று
கள்ளமில்லாதுகேட்கில் கதிரவன்முதலாய்நான்கு
வள்ளலினருள்பெற்றோர்கள் வகுத்திடவழங்குந்தானே. (2)

## நூல்.

யுகம் ௪.

கிரேதாயுக ௵ ௧௭ லட்சத்து ௨௮௲
திரேதாயுக ௵ ௧௨ லட்சத்து ௯௬௲
துவாபரயுக ௵ ௮ லட்சத்து ௬௪௲
கலியுக ௵ ௪ லட்சத்து ௩௨௲

## வருஷங்களாவன.

| | | |
|---|---|---|
| பிரபவ | சர்வசித்து | பிலவங்க |
| விபவ | சர்வதாரி | கீலக |
| சுக்கில | விரோதி | சௌமிய |
| பிரமோதூத | விக்ருதி | சாதாரண |
| பிரஜோற்பதி | கர | விரோதிகிருது |
| ஆங்கீரஸ | நந்தன | பரிதாபி |
| ஸ்ரீமுக | விஜய | பிரமாதீச |
| பவ | ஜய | ஆநந்த |
| யுவ | மன்மத | ராக்ஷஸ |
| தாது | துன்முகி | நள |
| ஈஸ்வர | ஹேவிளம்பி | பிங்கள |
| வெகுதான்ய | விளம்பி | காளயுக்தி |
| பிரமாதி | விகாரி | சித்தார்த்திரி |
| விக்கிரம | சார்வரி | ரௌத்திரி |
| விஜு | பிலவ | துன்மதி |
| சித்திரபானு | சுபகுருது | துந்துபி |
| சுபானு | சோபகிருது | ருத்ரோத்காரி |
| தாரண | குரோதி | இரக்தாட்சி |
| பார்த்திப | விசுவாவசு | குரோதன |
| விய | பராபவ | அக்ஷய ஆகவருஷம் 60. |

## மாதங்களாவன.

| | | |
|---|---|---|
| சித்திரை | ஆவணி | மார்கழி |
| வைகாசி | புரட்டாசி | தை |
| ஆனி | ஐப்பசி | மாசி |
| ஆடி | கார்த்திகை | பங்குனி ஆகமாதம் 12. |

## வாரங்களாவன.

| | | |
|---|---|---|
| ஞாயிறு | புதன் | சனி |
| திங்கள் | வியாழம் | |
| செவ்வாய் | வெள்ளி | ஆகவாரம் 7, |

## நட்சத்திரங்களாவன.

| | | |
|---|---|---|
| அசுவனி | மகம் | மூல |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் |
| உரோகணி | அஸ்தம் | திருவோணம் |
| மிருகசீரிடம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி ரேவதி |
| ஆயிலியம் | கேட்டை | ஆக நட்சத்திரம் 27. |

## திதிகளாவன.

| | | |
|---|---|---|
| பிரதமை | சப்தமி | திரயோதசி |
| துதியை | அஷ்டமி | பௌர்ணமி |
| திருதியை | நவமி | அல்லது |
| சதுர்த்தி | தசமி | அமாவாசை |
| பஞ்சமி | ஏகாதசி | பௌர்ணமி |
| சஷ்டி | துவாதசி | ஆக திதி 15. |

## அயனம் ௨.

| | | |
|---|---|---|
| உத்தராயணம் | | தக்ஷிணாயனம். |
| தைமீ முதல் | ஆறுமாதம் | உத்தராயணம். |
| ஆடிமீ முதல் | ஆறுமாதம் | தக்ஷிணாயனம். |

| | | | |
|---|---|---|---|
| சித்திரைமீ | | ஐப்பசிமீ | |
| வைகாசிமீ | வசந்தருது, | கார்த்திகைமீ | சரருது |
| ஆனிமீ | | மார்கழிமீ | |
| ஆடிமீ | கிருஷ்மருது. | தைமீ | ஏமந்தருது |
| ஆவணிமீ | | மாசிமீ | |
| புரட்டாசிமீ | வருஷருது. | பங்குனிமீ | சிசிரருது |

## பக்கம் ௨,

பூர்வபக்கம், அல்லது சுக்கிலபக்கம் வளர்பிறை
அமரபக்கம் அல்லது கிருஷ்ணபக்கம் தேய்பிறை

## யோகங்களாவன.

| | | |
|---|---|---|
| விட்கம்பம் | கண்டம் | பரிகம் |
| பிரீதி | விருத்தி | சிவம் |
| ஆயுஷ்மான் | துருவம் | சித்தம் |
| சௌபாக்கியம் | வியாகாதம் | சாத்தியம் |
| சோபனம் | அர்ஷணம் | சுபம் |
| அதிகண்டம் | வச்சிரம் | சுப்பிரம் |
| சுகர்மம் | சித்தி | பிரமம் |
| திருதி | விதீபாதம் | மகேந்திரன் |
| சூலம் | வரியான் | வைதிருதி |
| | | ஆக யோகம் 27. |

## கரணங்களாவன.

| | | |
|---|---|---|
| பவம் | கரசை | சதுஷ்பாதம் |
| பாலவம் | வணிசை | நாகவம் |
| கௌலவம் | பத்திரம் | கிந்துக்கினம் |
| தைதுலம் | சகுனி | ஆக கரணம் ௧௧. |

இராசிமாதங்களாவன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மேடம் | ... | சித்திரை | துலாம் | ... | ஐப்பசி |
| இடபம் | ... | வைகாசி | விருச்சிகம் | ... | கார்த்திகை |
| மிதுனம் | ... | ஆனி | தனுசு | ... | மார்கழி |
| கர்க்கடகம் | ... | ஆடி | மகரம் | ... | தை |
| சிங்கம் | ... | ஆவணி | கும்பம் | ... | மாசி |
| கன்னி | ... | புரட்டாசி | மீனம் | ... | பங்குனி |

ஆக இராசிமாதம் 12.

| [திக்குகளாவன] | திக்கு | [திக்குப்பாலர்களாவன.] | |
|---|---|---|---|
| கிழக்கு | மேற்கு | சந்திரன் | வருணன் |
| தென்கிழக்கு | வடமேற்கு | அக்கினி | வாயு |
| தெற்கு | வடக்கு | இயமன் | குபேரன் |
| தென்மேற்கு | வடகிழக்கு | நிருதி | ஈசானன் (கள்-8. |
| | ஆக திக்கு 8. | | ஆக திக்குப் பாலர் |

## நட்பு-ஆக்ஷி-உச்சம்-பகை-நீசம்-சமன்

### மூலதிரிகோணங்கள்.

### விருத்தம்.

#### சூரியன்.

ஆதவனுக்குறவுதனுமீன் குருசெய்சந்திரனு மாக்ஷிசிங்கம்
கோதகலுங்கொறியுச்சம் பகைவிடையாள்தேன்கடகங்குடமான்கன்னி
நீதகலும்புகர்சனியேதுலைநீசம் புதன்சமனுஞ்சிறந்தசீயங்
காதலமிருமூலதிரிகோண மதாமதர்த்தமழைக்கருங்கணமாதே.

#### சந்திரன்.

சந்திரனுக்குறவுமிதுனந்தனுமீன் கன்னிபுதன்றபனனுகுஞ்
சுந்தரநண்டாக்ஷி விடையுச்சமதாங் குடமேடந்துலைமான்சிங்கம்
இந்தவிராசிகள்பகையாங் கோட்பகையேயிலைநீசமியம்புதேளாம்
மந்தனொடுபொன்புகர்சேய் சமன் மூலதிரிகோணம்வயங்குமேறே.

#### அங்காரகன்.

மங்கலனுக்குறவுகுடார்ந்துலைவிடையாழ் கன்னிகுருமதிவெய்யோனுந்
தங்கவிருச்சிமேடமாக்ஷியதாம் வளருச்சஞ்சுறவேயாகுந்
தங்குபகைபரிதனுமீன்புதனுகுங் கற்கடகஞ்சாற்றுநீசம்
பொங்குபுகர்சனிசமனுங்கொறிமூல திரிகோணம்பொலிமுகத்தாய்.

#### புதன்.

புதற்குறவுசனு மேடம்விடைமகரந் துலைகடகம்பொருதேன்கும்பம்
விதப்புறுசெங்கதிர்புகராம்பொலியகட்கி கன்னியொடுமிதுனமாகும்
மதித்தசுரிகுழலுச்சமபகையரியு மதியுமாம்வருமீனீசம்
கதித்தமன் சேய்சனியாம்பெண்மூல திரிகோணங்கழைமென்றோளாய்.

குரு.

பொன்னவனுக்குறவுதுலைகன்னிகுடம் தண்டுவிடைபொருந்துசிங்கந்
தன்னிரவிமதிகுஜனுமாகூழிதனு மீனாகுஞ்சொனாநண்டுச்சம்
மன்னுபகைதேள்வருடை புதன்புகரேயாநீசமகரமாகும்
பன்னுசமன்சனிமூலதிரிகோணம் வில்லாகும்பவளவாயாய்.

சுக்கிரன்.

சுக்கிரனுக்குறவுவிருச்சிகமேடஞ் சிலைகுடம்யாழ்சுறவுநண்டு
மிக்குபுதன்சனியாகுமாட்சிவிடை கோலாகுமீனையுச்சந்
தக்கபகைதேளரியம்புலியிரவி யாநீசந்தையலாகுஞ்
சொக்குலவுசமன்குருசெம்துலைமூவ திரிகோணஞ்சுடர்பைம்பூணாய்.

சனி.

சனிக்குறவுயாழ்விடைமின்கன்னி சிலைபுதன்புகரஞ்சாற்றுமாட்சி
கனக்குமெழிற்குடஞ்சுறவாங்கோனுச்ச மாம்பகைகர்க்கடகஞ்சிங்கம்
நினைக்கும்விருச்சிகங்கதிர்சேய் மதியாகும்புகலவருடைநீசமாகுந்
தனிக்குருவேசமன்மூலதிரிகோணங் கும்பமிளந்தனத்தினாளே.

இராகு.

கரும்பாம்புக்குறவுதுலைமீன்மகரங் குருவெள்ளிகாரியாகும்
விரும்பாட்சிதனுமிதுனங்கன்னியாம் பகைகடகமேடஞ்சிங்கம்
இரும்பானுசெய்மதியாங்குடமூல திரிகோணமெறிதேளுச்சம்
பெரும்பாண்டிநீசமதாங்கேதுபுதன் சமனாகும்பிறழுங்கண்ணாய்.

கேது.

செம்பாம்புக்குறவுகுடங்கோல்விடைமான் கன்னிசனிசெவ்வாய்வெள்ளி
நம்பாட்சிமீனாகும்பகைகடகஞ் சிங்கமதிஞாயிறாகும்
வெம்பாறத்தேள்மூலதிரிகோணந் தண்டுச்சம்வில்லேநீசம்
அம்பாருங்கூர்விழியாய்சமன்கொறிபோன் புதன்ராகேயாகுந்தானே.

குளிகசாரங்களின் விபரமாவன:-

விருத்தம்.

வருமிரவிக் கையைந்து கலையிருப தென்பார்
மதிக்கிருபத் திரண்டுடனே கலைநான்க தாகும்
மொருசேய்க்குப் பாகைபத்து கலைநாற்பத் தொன்பான்
புதனுக்குப் பாகைபன்னேழ் கலையிருபத் தேழாங்
குருவாறு பாகையுடன் கலையொன்றே யாகுங்
கொடும்புகர்க்குப் பாகையைந்து கலையைம்பத் தைந்தாம்
கருதுசனிக் கொருபாகை கலைமுப்பத் தொன்பான்
கடுங்குளிக னுதிக்கின்ற ராசியிற்காண்பதுவே.

## கிரகதேவதைகள் முதலிய விபரமாவன.

சூரியன-சிவன
சந்திரன்-ஈஸ்வரி
செவ்வாய்-சுப்பிரமணியர்
புதன்-விஷ்ணு
குரு-பிர்ம்மா
சுக்கிரன்-இந்திரன்
சனி-இயமன
இராகு-காளி
கேது-சித்திராபுத்திரன்

### ஜாதிகளாவன.

குரு-சுக்கிரன பிராமணர்
சூரியன்-செவ்வாய் க்ஷத்திரியர்
சந்திரன்-புதன வைசியர்
சனி-ருத்திரர்
இராகு-கேது சங்கிரமஜாதியாம்

### கிரகபுஷ்பங்களாவன.

சூரியன்-செந்தாமரை
சந்திரன்-வெள்ளல்லி
செவ்வாய்-சண்பகம
புதன்-வெண்காந்தன்
குரு-முல்லை
சுக்கிரன்-வெண்டாமரை
சனி-கருங்குவளை
இராகு-மந்தாரை
கேது-செவ்வல்லி

### கிரகதானியங்களாவன.

சூரியன்-கோதுமை
சந்திரன-நெல்
செவ்வாய்-துவரை
புதன்-பச்சைப்பயறு
குரு-கடலை
சுக்கிரன்-மொச்சை
சனி-யெள்ளு
இராகு-உளுந்து
கேது-கொள்

### கிரகசமித்துகளாவன.

சூரியனுக்கு-எருக்கு
சந்திரனுக்கு-முருக்கு
செவ்வாய்-கருங்காலி
புதனுக்கு-நாயுருவி
குருவுக்கு-அரசு
சுக்கிரனுக்கு-அத்தி
சனிக்கு-வன்னி
இராகுக்கு-அறுகு
கேதுக்கு-தருப்பை

### கிரஹபாஷைகளாவன.

சூரியன்-குரு, சுக்கிரன் } சமஸ்கிருதம்
சந்திரன்-தமிழ்
செவ்வாய்-மந்திரம் தெலுங்கு
புதன்-சோதிடம்
சனி-இராகு கேது அன்னியபாஷை

### திக்குகளாவன.

வெண்பா.

பானுவுக்குத் தானநடு பார்க்கவற்குப்பூர்வமிந்து
தானந்தீ சேய்தட்சணம் ராகுக்-கேநிருதி
மந்தன்மேற் பாற்கேது வாயுகுரு வுக்குத்ர
புந்திக்கீ சானமெனப் போற்று.

### தூபதீடங்களாவன.

வெண்பா.

சந்தனமுஞ் சாம்பிராணி தான்குங்கல்யம்பூரம்
நந்தலிலா லாம்ப லிலவங்கம்—முந்தக்
கறுப்புள்ள காலி கடுகுசெம்மாத்தூள்
சிறப்பிரவி முன்புகைதீபம்.

ஐம்பூதங்களாவன.

வெண்பா.

பாரேசெய் பிரதிவாம் பைங்கதிர்க் யகாளப்பாகும்
சீர்கதிருஞ் சீவனுமே தேயுவாம்—தேர்ப்பாகன்
வாயுவாங் காரிதலை வாலரவர் காயந்தான்
ஆபிவிவை யைம்பூதமாம்.

சப்ததாதுக்களாவன.

(வெ) பானெலும்பியுந் தேதிரம் பார்பத்தி ரன்மச்சை
யூனமிலாப் புந்திதோ லென்றறிவ—தேனிதழி
திங்மாமி சஞ்சுங்கள் சுக்கிலஞ் சுன்னரம்பு
மெய்சத்து தாதுவென வீள்.

இராசிநாழிகைகளாவன.

(வெ) ஆடீமீனாலேகாலாண சாணு லேமுக்கால்
பீடுபெண கோலைந்து பேசுமியா—ழோடரியுந்
தேன்மகர மைந்தேகால் செப்புகவிர் விற்கன்னல்
தோள்வனிதை யைந்தரையாகும்.

ஆண்பெண்ணறியும் விபரமாவன.

| ... | ஞாயிறு | திங்கள் | செவ் | புதன் | வியா | வெள் | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| கவ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| உ½ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௩¾ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௫ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௬வ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௭½ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ௮¾ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | ஆண் | ஆண் |
| க0 | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| ககவ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| கஉ½ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| க௩¾ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| க௫ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| க௬வ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| க௭½ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| க௮¾ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| உ0 | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| உகவ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| உஉ½ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| உ௩¾ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| உ௫ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| உ௬வ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| உ௭½ | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| உ௮¾ | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ௩0 | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |

## வேளையறியும் விபரமாவன.

| வரை | ஞாயிறு | திங்கள் | செவ் | புதன் | வியா | வெள் | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| ௩¾ | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச |
| ௭½ | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ |
| ௧௧¼ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத |
| ௧௫ | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச |
| ௧௮¾ | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ |
| ௨௨½ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத |
| ௨௬¼ | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச |
| ௩௰ | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ |
| ௩௩¾ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத |
| ௩௭½ | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச |
| ௪௧¼ | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ |
| ௪௫ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத |
| ௪௮¾ | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச |
| ௫௨½ | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ |
| ௫௬¼ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத |
| ௬௰ | தாமச | சாத்மீ | ராசத | தாமச | சாத்மீ | ராசத | தாமச |

## ஓரையறியும் விபரமாவன.

| கடிகை. | ஞாயிறு | திங்கள் | செவ் | புதன் | வியாழ | வெள் | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| ௨½ | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு | சுக்கி | சனி |
| ௫ | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு |
| ௭½ | புதன் | குரு | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் |
| ௧௰ | சந்தி | குசன் | புதன் | குரு | சுக்கி | சனி | ரவி |
| ௧௨½ | சனி | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு | சுக்கி |
| ௧௫ | குரு | சந்தி | சனி | ரவி | சந்தி | குசன் | புதன் |
| ௧௭½ | குசன் | சனி | குரு | சுக்கி | சனி | ரவி | சந்தி |
| ௨௰ | ரவி | குரு | குசன் | புதன் | குரு | சுக்கி | சனி |
| ௨௨½ | சுக்கிர | குசன் | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு |
| ௨௫ | புதன் | சுக்கி | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் |
| ௨௭½ | சந்தி | புதன் | புதன் | குரு | சுக்கி | சனி | ரவி |
| ௩௰ | சனி | சந்தி | சந்தி | குசன் | புதன் | குரு | சுக்கி |
| ௩௨½ | குரு | சனி | சனி | ரவி | சந்தி | குசன் | புதன் |
| ௩௫ | குசன் | குரு | குரு | சுக்கி | சனி | ரவி | சந்தி |
| ௩௭½ | ரவி | குசன் | குசன் | புதன் | குரு | சுக்கி | சனி |
| ௪௰ | சுக்கி | ரவி | ரவி | சந்தி | குசன் | புதன் | குரு |
| ௪௨½ | புதன் | சுக்கி | சுக்கி | சனி | ரவி | சந்தி | குசன் |
| ௪௫ | சந்தி | புதன் | புதன் | குரு | சனி | சனி | ரவி |
| ௪௭½ | சனி | சந்தி | சந்தி | குசன் | குரு | குரு | சுக்கி |
| ௫௰ | குரு | சனி | சனி | ரவி | குசன் | குசன் | புதன் |
| ௫௨½ | குசன் | குரு | குரு | சுக்கி | ரவி | ரவி | சந்தி |
| ௫௫ | ரவி | குசன் | குசன் | புதன் | சுக்கி | சுக்கி | சனி |
| ௫௭½ | சுக்கி | ரவி | ரவி | சந்தி | புதன் | புதன் | குரு |
| ௬௰ | புதன் | சுக்கி | சுக்கி | சனி | சந்தி | சந்தி | குசன் |

### தினபலனறியுமாறு.

ஜென்ம நட்சத்திரம் முதல் அன்றைய நட்சத்திரம் வரையில் எண்ணிக்கண்ட தொகையுடன் ஞாயிறுமுதல் அன்றையவாரம் வரையிலும் பிரதமை முதல் அன்றைய திதிவரையிலுங்கண்ட தொகையைச்சேர்த்து ஒன்பதிற் கழித்தமிச்சம் 1-க்கு வியாகுலம் 2-க்கு சுபம். 3-க்கு துர்வார்த்தை 4-க்கு பந்து 5-க்கு பெண்போகம். 6-க்கு சுபம் 7-க்கு கலகம் 8-க்கு லோபம் 9-க்கு ஞானவாக்கியமாம்.

### தாரபலனறியுமாறு.

ஜென்மநட்சத்திரமுதல் அன்றைய நட்சத்திரவரையில் எண்ணிக்கொண்டு வந்ததொகையை ஒன்பதிற்கழித்து நின்ற மிச்சத்தில் 2-4-6 உத்தமம்.

1வது ஜென்மம் 2-வது சம்பத்து 3-விபத்து 4-க்ஷேமம் 5-பிரத்தியக்கு 6-சாதசம் 7-வதை 8-மைத்திரம் 9-பரமமைத்திரம்.

சிலர் 9-வது தாரைசுபமென்பர் சிலர்முதற் பரியாயத்தில் ஜென்மதாரையும் இரண்டாம் பரியாயத்தில் விபத்துதாரையும் மூன்றும் பரியாயத்தில் பிரத்தியச்குத்தாரையும்; மூன்றும் பரியாயத்திலும் வதைதாரையும் ஆகாவென்பர். மற்றவைக் கூடுமென்பர்.

ஒன்றுக்குச் சூரியனும். 2-க்கு புதனும், 3-க்கு ராகுவும், 4-க்கு குருவும், 5-க்கு கேதுவும், 6க்கு சந்திரனும், 7-க்கு சனியும், 8-கக்கு சுக்கிரனும், 9-க்கு செவ்வாயும், அதிபதியாகக்கொள்வது பலன்முறையே தாபம், லாபம், நாசம், தைரியம், கீர்த்தி, லயம, ஆனி, பிரமோதம், விருத்தியுமாம்.

### இடவிபரமாவன.

1-5-9-திரிகோணம்.

1-4-7 10-கேந்திரம்.

6-8-சஷ்டாஷ்டகம்

3-6-8-12-மறைவிடம்.

2-5-8-11-பணபரம்.

3-6-10-11-உபசெயம்.

3-6-9-12-ஆபோக்லிபம்.

| நட்சத்திரம். | சனம். | மிருகம். | பட்சி. | விருக்ஷம். | பாமகா. |
|---|---|---|---|---|---|
| அச்சுவனி | தேவம் | ஆண்குதிரை | இராஜாளி | எட்டி | சாரு |
| பரணி | மானுஷம் | ஆண்யானை | காக்கை | நெல்லி | ருசா |
| கிருத்திகை | ராக்ஷஸம் | பெண்ஆடு | மயில் | அத்தி | ருச |
| ரோகணி | மானுஷம் | ஆண்நாகம் | ஆந்தை | நாவல் | ருசா |
| மிருகசீரிட | தேவம் | அலிசாரை | கோழி | கருங்காலி | ருசா |
| திருவா | மானுஷம் | ஆண்ஞாய் | அன்றில் | செங்கருங்கா | ருசா |
| புனர்பூசம் | தேவம் | பெண்பூனை | அன்னம் | மூங்கில் | [illegible]உ |
| பூசம் | தேவம் | ஆண்ஆடு | நீர்காக்கை | அரசு | ருஉ |
| ஆயிலியம் | ராக்ஷஸம் | ஆண்பூனை | சிச்சிலி | புன்னை | ருசா |
| மகம் | ஷை | ஆண்எலி | ஆண்சமுத | ஆல் | ருச |
| பூரம் | மானுஷம் | பெண்எலி | பெண்சமுத | பலாசு | ருங |
| உத்திரம் | ஷை | எருது | சிறுவண்டு | அலரி | ருசா |
| அஸ்தம் | தேவம் | எருமை | பருந்து | ஆத்தி | ருஎ |
| சித்திரை | ராக்ஷஸம் | ஆண்புலி | மரம்கொத்தி | வில்வம் | சா0 |
| சுவாதி | தேவம் | எருமைகடா | தேனீ [வி | மருதமரம் | சாரு |
| விசாகம் | ராக்ஷஸம் | பெண்புலி | செவ்வால்கு | விளா | சாக |
| அனுஷம் | தேவம் | பெண்மான் | சாதகம் [ரு | மகிழமரம் | சா0 |
| கேட்டை | ராக்ஷஸம் | ஆண்மான் | சக்கரவாகம் | பிராயம் | சாஉ |
| மூலம் | ஷை | பெண்ஞாய் | செம்போத் | மா | சாங இ |
| பூராடம் | மானுஷம் | ஆண்குரங்கு | பசண்டை | வஞ்சி | சாஉ |
| உத்திராடம் | மானுஷம் | மலட்டுப்பசு | வலியன் | பலா | ருரு |
| திருவோண | தேவம் | பெண்குரங | நாரை | எருக்கு | சாரு இ |
| அவிட்டம் | ராக்ஷஸம் | பெண்சிங்கம் | பெண்வண்டு | வன்னி | சாசா இ |
| சதயம் | ஷை | பெண்குதி | அண்டங்காக் | வேம்பு | சாங இ |
| பூரட்டாதி | மானுஷம் | ஆண்சிங்கம் | உள்ளான் [கா | தேமா | சாசா இ |
| உத்திரட் | ஷை | பசு | கோட்டான | கடம்பு | சாங இ |
| ரேவதி | தேவம் | பெண்யானை | வல்லூரு | இலுப்பை | சாச |

## கிரகசமயங்களாவன.

க-ஸ்நானம
உ-அலங்காரம்
ங-விபூதிசந்தனமிடல்
ச-செபம்
ரு-சிவபூசை
சா-அவுபாசனம்
எ-விஷ்ணுபூசை
அ-பிராணபூசை
கூ-நமஸ்காரம்
க0-பிரதக்ஷணம்
கக-வைசுவதேயம்
கஉ-அதிதிபூசை
கங-போசனம்
கச-புராணப்பிரசங்கம்
கரு-கோபம
கசா-தாம்பூலம்
கஎ-இராசாங்கம்
கஅ-கிரீடம்பூணல்
ககூ-சலபானம்
உ0-ஆலிங்கனம்
உக-சயனம்
உஉ-அமுதபானம்
உங-மதனலங்காரம்
உச-லீலை
உரு-போகம்
உசா-நித்திரை
உஎ-ரத்தினபரிட்சை

மேஷமுதல் சாதகனுடைய சன்மலக்கினம் வரையும் எண்ணின தொகைக்கும் லக்கினமுதல் அந்தந்தக்கிரகமிருக்கிற லக்கினம் வரையில் எண்ணின தொகைக்கும் பெருக்கி ௨௭-ல் கழித்து நின்ற மிச்சத்தையும் அவரவர்கள் திசை வருஷத்தையும் பெருக்கி-௨௭-ல் கழித்து நின்ற மிச்சம் சமயமாம்.

### வாரசூனியங்களாவன.

ஞாயிறு-அனுஷம்-கேட்டை-மகம்-விசாகம்-பரணி-மிருகசீரிடம்.
திங்கள்-பூராடம்-அனுஷம்-மகம்-பூரட்டாதி-கார்த்திகை-விசாகம்.
செவ்வாய்-அவிட்டம்-திருவோணம்-சதயம்-கேட்டை-திருவாதிரை.
புதன்-திருவோணம்-கார்த்திகை-அவிட்டம்-அச்சுவணி-பரணி-மூலம்.
வியாழம்-மிருகசீரிடம்-பூராடம்-ரேவதி-புனர்பூசம்-பூசம்.
வெள்ளி-பூசம்-விசாகம்-ரோகணி-அவிட்டம்-மிருகசீரிடம்-அஸ்தம்-அனுடம்.
சனி-அஸ்தம்-பூசம்-புனர்பூசம்-உத்திரம்-ரேவதி.

### வார இராகுகாலங்களாவன.

### கலி விருத்தம்.

அரிபிரு பத்தா றேகா லம்புலி மூன்றே முக்கா
லெரிவண்ண னிருப தோடு மிரண்டரை புதன்மீ ரைந்து
குருபதி னெட்டே முக்கால் குளிர் வெள்ளி பதினொன் றேகால்
கரியனே ழரையீ ராகு காலமென் றறிந்துகொள்ளே.

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு ... ... ... | ௨௬¼ | வியாழம் ... ... | ௧௮¾ |
| திங்கள் ... ... ... | ௩¾ | வெள்ளி ... ... | ௧௧¼ |
| செவ்வாய் ... ... ... | ௨௨½ | சனி ... ... | ௭½ |
| புதன் ... ... ... | ௧௫ | இந்த நாழிகைக்குமேல் ௩¾, நாழிகை இராகுகாலமாம். | |

### வாரசூலங்களாவன.

கிழக்கு திங்கள்-சனியில்-௮-நாழிகையும்.
வடக்கு-செவ்வாய்-௧௨-நாழிகையும், புதன்-௧௬-நாழிகையும்.
மேற்கு-வெள்ளி, ஞாயிறில்-௧௨-நாழிகையும்.

தெற்கு-வியாழத்தில்-௨௦-நாழிகையும், உருத்திரமூர்த்தியின் சூலமிருப்பதால். அந்தந்த நாழிகைக்குமேல் சூலதோஷமில்லையாம்.

### சூலபரிகாரங்களாவன.

### கலி விருத்தம்.

திங்களுஞ் சனியுமிந்திரன் றிசையிலோ ரெட்டதாகும்
பொங்குபொன னிருபான் றெற்குப் புகர்கதிர் மேற்கீராறும்

தங்குசேய் வடக்க ாருஞ் சார்புத னதிலீ ரெட்டுச்
சங்கரன் கையிற் சூலங் தரணியில் வைக்குங் கன்னல்.

வெண்பா.

சூலத் திசையினிலே சொற்பயணம் போக வெனின்
சீலத் துடனுண்டு செல்வடக்குப்-பாலாம்
தயிர் கிழக்குத் தெற்குத் தயிலமா மேற்குச்
செயிர் தீர்ந்த வெல்லமெனச் செப்பு.

வாரமுக்குண வேளைகளாவன.

திங்கள், வியாழம்-சாத்வீகம், வெள்ளி, செவ்வாய்-இராசகம், புதன், ஞாயிறு, சனி-தாமதம், உதயாதி நாலுநாழிகைவரையில் கொள்ளவும்.

வாரவிழிப்புகளாவன.

புதன், வியாழம், வெள்ளி-இருகண்களுள்ள நாள்கள்.
ஞாயிறு, திங்கள்-ஒருகண்ணுள்ள நாள்கள்.
செவ்வாய், சனி-குருட்டுநாள்கள்.

பகற்குளிகன் விபரமாவன.

விருத்தம்.

ஞாயிறு முகூர்த்த மேழா நன்மதிக் காறுஞ் செவ்வாய்க்
கேயவைந் தாகும் புந்திக் கீரிரண டாம்பொன் மூன்றாம்
தூயநற் புகர்க் கிரண்டாஞ் சுன்னினுக் கொன்ற தாகும்
ஆயிவிம் முகூர்த்தத் தோடே யற்றிடுங் குளிக னெல்லில்.

இராக்குளிகன் விபரமாவன.

விருத்தம்.

கதிரவன் றனக்கு மூன்றாங் கவின்மதிக் கிரண்டதாகும்
கதிர்பெறு செவ்வாய்க் கொன்றுஞ் சாற்றிய புகற்கேழாகும்
மதிவளர் பொன்னுக் காறு மணம்புகர்க் கைந்தாகான்கு
கதிற்மகற் காமுகூர்த்தங் காட்டிய பகற்போற் கொள்ளே.

| பகல். | | | | இரவு. | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | ... | ௨௬வ | ,, | ௧௧வ |
| திங்கள் | ... | ... | ௨௨இ | ,, | ௭இ |
| செவ்வாய் | ... | ... | ௧௮ஙு | ,, | ௩ஙு |
| புதன் | ... | ... | ௧௫ | ,, | ௨௬வ |
| வியாழம் | ... | ... | ௧௧வ | ,, | ௨௨இ |
| வெள்ளி | ... | ... | ௭இ | ,, | ௧௮ஙு |
| சனி | ... | ... | ௩ஙு | ,, | ௧௫ |

இந்த நாழிகைகளோடே குளிகன் காலம்முடிவாம்.

### வாரத்தியாச்சியங்களாவன.

ஞாயிறு-௩௨, திங்கள்-௪௨, செவ்வாய்-௩௧, புதன்-௪௨, வியாழம்-௩௧ வெள்ளி-௨௧, சனி-௧௪, இந்த நாழிகைகளுக்குமேல்-௩௫-நாழிகை வாரத்தியாச்சியமாம்.

### மலமாதங்களாவன.

இரண்டமாவாசியையாவது இரண்டு பௌர்ணமியாவது வரும் மாதங்கள் மலமாதம்.

### மாதசூனியங்களாவன.

சித்திரையில்-அஷ்டமி, ஏகாதசி, ரோகணி, கும்பம்.
வைகாசியில்-துவாதசி, சித்திரை, சுவாதி, உத்திராடம், மீனம்.
ஆனில்-திரயோதசி, புனர்பூசம், ரிஷபம்.
ஆடியில் சஷ்டி, பூரம், அவிட்டம், மிதுனம்.
ஆவணியில்-அமாவாசியை, பூரணை, பூராடம், மேஷம்.
புரட்டாசியில் சத்தமி, சதையம், பூரட்டாதி, ரேவதி, கன்னி, தனுசு
ஐப்பசியில்-நவமி, பூரட்டாதி, விருச்சிகம்,
கார்த்திகையில்-பஞ்சமி, கார்த்திகை, பூசம், மகம். துலாம்.
மார்கழியில்-துதியை, நவமி, அனுஷம், உத்திரட்டாதி, விசாகம் தனுசு.
தையில்-பிரதமை, அஸ்தம், திருவாதிரை, ஆயிலியம், கர்க்கடகம்
மாசியில்-சதுர்த்தி, தசமி, மூலம், திருவோணம், மகரம்.
பங்குனியில்-சதுர்த்தி, பரணி, கேட்டை, சிங்கம்.

இப்படிவரின் சுபகாரியங்களுக்கு விலக்காம்.

அலிநட்டசத்திரங்களாவன மிருகசீரிடம்-மூலம்-சதயம்.
இவை சுபகன்மங்களுக்கு விலக்கப்படும்

அலிநட்சத்திரங்களாவன:—மிருகசீரிடம்-மூலம்-சதயம்.
இவை சுபகன்மங்களுக்கு விலக்கப்படும்.

### மாதாந்த வருடாந்த தோஷங்களாவன:—

மாதாந்தரத்தில் மூன்றுநாளும் வருடாந்திரத்தில் பதினைந்துநாளும் கிராணந்தீண்டினநாளும் அதற்குமுன் மூன்றுநாளும், பின்மூன்றுநாளும், நட்சத்திரத்தில் அந்த இரண்டு நாழிகையும் சுபகன்மங்களுக்கு விலக்கப்படும்.

### மாதத்தியாச்சியம்[அல்லது] கரிநாள்களாவன:

| | |
|---|---|
| சித்திரை-௬-௧௫ | ஐப்பசி-௬ |
| வைகாசி-௭-௧௬-௧௭ | கார்த்திகைமுதல் சோமவாரம் - ௧-[௧௰-௧௭ |
| ஆனி-௧-௬ | மார்கழி-௬-௯-௧௧ |
| ஆடி-௨-௰-௨௰ | தை-௧-௨-௩-௧௧-௧௭ |
| ஆவணி-௨ ௯-௨௮ | மாசி-௧௫-௧௬-௧௭ |
| புரட்டாசி-௧௬-௨௯ | பங்குனி-௬-௧௫-௧௯ |

ஆகக்கரிநாள்-௩௪

நட்சத்திர விஷகடிகைகளாவன்:—

திருவாதிரை-௨௧, பூரட்டாதி-௧௬, அஸ்தம்-௨௨, உத்திரம்-சதயம்-௧௮, கார்த்திகை-மகம்-புனர்பூசம்-ரேவதி-௩௰, சுவாதி-விசாகம்-கேட்டை-மிருகசீரிடம்-௧௪, உத்திராட்டாதி-பரணி பூராடம்-௨௪, அச்சுவனி-௫௰, ஆயிலியம்-௩௨, பூரம்-பூசம்-சித்திரை-உத்திராடம்-௨௰, ரோகணி-௪௰, அவிட்டம் அனுஷம்-திருவோணம்-௰, மூலம்-௨௰-௫௬, நாழிகைக்குமேல் நாலு நாழிகையாம் இவை சுபகன்மங்களுக்கு விலக்கப்படும்.

திதிவிஷகடிகைகளாவன:—

பிரதமை௨௪, துதியை-௫௫, சஷ்டி-சதுர்த்தி-௫, பஞ்சமி-௫, அஷ்டமி-சப்தமி-௪௰, நவமி-௨௨, தசமி ௭, ஏகாதசி-௩௧, துவாதசி-பௌர்ணமி-௯, திரயோதசி-௩௰, சதுர்த்தி-௫௪, அமாவாசை-௩௨, நாழிகைக்குமேல் ஒருநாழிகை விஷகடிகை, சுபகன்மங்களுக்கு விலக்கப்படும்.

அமிர்தகடிகைகளாவன:—

அச்சுவனி௨௧, பரணி-மிருகசீரிடம்-பூரம்-௩௰, கார்த்திகை-௫௪, திருவாதிரை-ஆயிலியம்-௪௰, ரோகணி - புனர்பூசம்-அவிட்டம்-அனுஷம்-மூலம்-உத்திராடம் ௧௪, பூசம்-சித்திரை-௧௯, விசாகம்-சதையம்-திருவோணம்-௨௧, உத்திரம்-௩௩, மகம்-௭, பூரட்டாதி-௪௰, உத்திரட்டாதி-௪௮, ரேவதி-௧௨, நாழிகைக்குமேல்-௪-நாழிகைவரையில் அமிர்தகடிகை.

மூகூர்த்தகாலத்தின் விபரங்களாவன:—

குறைக்கொள்ளி. இடி, நட்சத்திரம், ஆலங்கட்டி இவைவிழுதல், சருவி, அக்கினி, வியசனப்பட்டல், மழைபெய்தல் வீட்டிலுள்ளவள் மாதருதுவந்து வெளிப்படல் அசரீரவர்க்கு, துர்வசனம் பூரணகும்பங் கவிழ்தல், பால்கவிழ்தல், தேங்காய்சிதறல், போர்செய்தல், தெய்வபிராமணர், குருவார்க்கம், 'மனோரசஞ்சலியபப்படல், தேவாலயத்தில் திருவிழாநடத்தல், இவைசுபகன்மங்களுக்கு விலக்கப்படும்.

பெண்களின் பெயர்களாவன:—

சர்ப்பம், சலம், பருப்பதம், தருவர்க்கம், மிருகம், சந்து இப்பெயருள்ள கன்னிகையை விவாகத்துக்குக் கூட்டுதல் கூடாவாம்.

முகூர்த்தங்கூறும் விபரமாவன:—

நட்சத்திர அவயோகம். கிரகவேதியை, அபிசிதது, நட்சத்திராந்தியம், விடகடிகை, கொண்டாந்தம். வைநாசியம், உதைப்பு, ஆபத்து அனற்சிகை, சூலம், மகாசூலம், கும்பபூர்த்தி, நட்சத்திரமாரணம், சலாவேதை, பாபமத்தியம்கிரகணதினம், ஆகுலம், ரோகம், மிருத்து, அலி, விதந்து, சத்துரு, வாயுமண்டலம், அனமண்டலம், கலைக்கிபானபாதம், புரட்டாசி, மாசி, மார்கழி, ஆடி, மலமாதம், பூகம்பமுண்டானமாதம், குளிகனதொட்டலக்கினம், ௯-அ௧௨-ல் சந்திரனிருக்கும் லக்கினம், பாபர் இருக்குஂலகினம், பாபாபாக்கும்லக்கினம், பாபாவிட்டாலக்கினம், குரு சுக்கிரர் சமசத்தலக்கின்ம், குருசுக்கிரர் மகாஸ்தமானத்துக்கு முன்னேழு பின்னேழுநாள்கள் இவர்கள் வக்கிராஸ்தமானத்துக்கு முன் மூன்று பின் மூன்று நாள்கள், இவர்கள் அஸ்தமானநாள், சாயன்

காலம், சந்தியா காலம் கண்டாந்தம், உஷ்ணம், தியாச்சியந் தொட்டலக்கினம், பவம், பாலவம், கரசை; பத்திரை நீங்கிய கரணங்கள் ஞாயிறு, சனி, செவ்வாய் வாரமும், இராகுகாலம் பஞ்சதோஷம், படுபட்சி இவைகளை நீக்கி முகூர்த்தஞ்சொல்லுக.

மேடவிராசியின் பலன்களாவன:—

வெண்பா.

மந்தனொடு மால்சுங்கன் மாபாவி நல்லவர்கள்
தொங்கலர்பூங் கோதாய் குருவிரவி—சந்ததமுந்
தீயபலன் காரியொடு தேவர்பிரான் சேர்ந்தாக்கால்
எயுமவ னேடொத்த தே.

இதுவுமது.

மாரகத்தா னப்பதியா மன்னுகின்ற பாக்கலனும்
மாரகத்தைப் பண்ணுனம் மானவர்க்கும்—மாரகத்தைச்
செய்வார் சனிமுன்னோர் செவ்வியமே டம்பிறந்தோர்க்
கிவ்வா றுரைப்பீ ரிருந்து.

இடபவிராசியின் பலன்களாவன:—

வெண்பா.

குருவெள்ளியோடிந்து கொண்டா டடர்க்கொடியர்
மாவுசுபக் கோண்மந்தன் மன்னும்—திருவுறுமா
யோகங் கொடுப்போ னொருவ னவன்சனியே
ஆகு மம்பாவா யறி.

இதுவுமது.

குருமுதலாக் கூறுகின்ற கோட்கனே கொல்லும்
இருவினைய ராயினு ரென்றும்—தெரியும்
படியிடப வோரையினிற் பார்மிசையிற் றோன்றும்
முடி யுடையோர் கட்கு மொழி.

மிதுனவிராசியின் பலன்களாவன:—

வெண்பா.

சேயரச னேடிரவி சேராக் கெடுங்கொடியர்
ஆயில்புக ரோனொருவ னுனகோள்—சேயிழையாய்
மாதனொடு மந்திரியும் கூட்டமென்னி விம்மண்ணிற்
நந்துமே டப்படியே நாடு.

இதுவுமது.

அசமர்த்த னிந்துகொல்கைக் கங்கா ரகன்மூன்
அசமர்த்த ரல்லரிதா ராயில்—இசையுற்
றிலங்கு மதிமுகத்தா யென் றறிமூன் றுரும்
நலங் கொளிரா சிக்கு நவில்.

கடகவிராசியின் பலன்களாவன:—

வெண்பா.

சுங்கனித்து மைந்தனிவர் சூழாக் கொடுங்கோட்கள்
மங்கலன்மா வேந்தனிவர் மன்னுகின்ற—துங்கருள்ள
நல்லவர்க ணல்லயோ கத்திறைவ ஞருமவன்
சொல்லுறிற் பூசுதனுச் சொல்.

இதுவுமது.

ஆதித்தன் கொல்லான்மற் றுரென்னிற் கொல்லுமலர்
சோதித்து ரைக்கிற்சங் கன்முதலாய்—தீதுற்றோர்
கண்டென்று கண்டோ ருமக்குஞ்சொற் காரிகையாய்
நண்டிலுதிற் தோர்க்கு நவில்.

சிங்கவிராசியின் பலன்களாவன:—

வெண்பா.

பந்தியும் பார்க்கவனும் போற்றுக் கொடும்பாபர்
செந்திறத்த செவ்வாயே செம்மைக்கோள்—அந்திரத்தில்
யோகமுற்றோர் தீப்பலனை யோராத லித்திடுவ
ராகுமதி யாரல புகர்.

இதுவுமது.

புந்திமுத லாப்புகலும் பொல்லாரே பூமிசையோர்க்
கந்தமதாக் கொல்வ ரவர்வினையில்—பந்தமுற்றோர்
ஆமாகி லாயிழையா யார்கலிசூழ் வையகத்தில்
தாமாண்சிங் கத்தவர்க்குச் சாற்று.

கன்னிராசியின் பலன்களாவன:—

வெண்பா

செவ்வாயுஞ் செம்பொன்னுஞ் சேணர் மதியுமிவர்
செவ்வாயர் வெள்ளி விளம்புங்கால்—ஒவ்வுசுபன்
பார்க்கவனும் பங்கயமா னவரிவமைந்தன் றனிலர்கள்
ஏர்க்கமிகு யோகத் தாரே.

இதுவுமது.

கொல்லான் பெரிய பிருகுகுஜன் முதலாய்
எல்லாருங் கொல்லு மியல்புடையர்—கல்லாயென்
றென்னுளுங் கூறுவா யோரிவை மீதுவந்த
மன்னு மவர்க்கு மகிழ்ந்து.

துலாவிராசியின் பலன்களாவன:—

(வெண்பா.)

குருவிரவி சேய்கொடியர் கூறுசனி புந்தி
மருவு நலமுடையார் மண்ணில்—திருவுறுமா
யோகத்தா ரிந்தது மொண்கதனு மொண்ணுதன்மீ
தாகுமள கத்தா யறி.

இதுவுமது.

சேயவன்கொல் லான்பின்னே சீவன்முன்ஞ னவர்கள்
தேயு மதியனைய செந்நுதலாய்-ஆயும்
அறிவினோர்க் கெல்லா மளந்தரியக் கோலின்
குறியாகு மென்றுநீ கூறு.

விருச்சிகவிராசியின் பலன்களாவன:—

(வெண்பா.)

புந்தியுஞ்சே யும்புகரும் பொல்லாக் கொடியராம்
இந்து வொருத்தனே வேந்திழையாய்—சந்ததமும்
நல்லனிரு ஞான நலனளிப்போன் ஞாயிறுடன்
அல்லவனு மாக வறி.

இதுவுமது.

குருவென் பவன்கொல்லான் கோதாய்கொல் வோர்கள்
மருவு புதன்முதலோர் மன்னும்—திருவிதியர்
என றுரைத்தாய் தேட்பிறந்தோ ரெல்லார்க்கு மிப்படியே
குன்றெனவே கூறு முலே.

தனுசுவிராசியின் பலன்களாவன:—

வெண்பா.

ஒருவன் புகர்பொல்லா ஞெஞ்சே யிரவி
மருவுநல்ல யோகமது மன்னுந்—திருவுடையோர்
பார்க்கனும் புந்தியென்று பாம்பே ரகவல்குல்
சீர்கமலச் சேயிழையாய் செப்பு

இதுவுமது.

கதிரவன்சே யரகிவளர் காரிகொல்லான் கொல்வார்
மதிமுதலாய் வெள்ளிமுன்னோர் மன்னுந்—திதியுடைய
பாபிகளென் றேந்திப் படியிசையி வென்னுளும்
சாபமதி லுற்றவர்க்குச் சாற்று.

மகாவிராசியின் பலன்களாவன:—

வெண்பா.

ஆரல்பொன் னிந்துபொல்லா ரானவர்சங் கனபுந்தி
வீரமிகு யோகபரன் வெள்ளியே—காரனைய
கூந்தனமட மானேகேள் கும்பிகொல் லானென்றே
ஆய்ந்துணர்ந்தோர் தாமுரைத்தா ராம்.

இதுவுமது.

செய்முதலாய் முன்னமே செப்புமவ ரேகொள்வர்
வாய்ந்த மகரமதில் வர்துதித்துக்—காந்திபெற
வாழுமவர்க்கென்றே வகுத்துரைத்தா ரென்றுமிசச்
சூழமட மாமயிலே சொல்.

கும்பவிராசியின் பலன்களாவன்:—

வெண்பா.

பொன்மதிசேய் பொல்லார் புகரொருவ னேபுனிதன்
நன்னயஞ்சேர் யோக மயந்தளிப்போன்—கன்னனிகர்
ஆனமொழி மாதே யசுரர்தமக் கெஞ்ஞான்றும்
ஞான நிலையுரைப்பே னன்கு.

இதுவுமது.

வேந்தனென்போன் கொல்லாது வெறிகமழ்பூங் கோதைகொல்வார்
ஆய்ந்துணரி லாரன்முன் னனவரே—தேர்ந்துரையாய்
வேலைபுடை சூழுலகில் வெம்புங் குடந்தன்னில
சாலவுதித் தோர்க்கென்று சாற்று.

மீனவிராசியின் பலன்களாவன:—

வெண்பா.

காரிபுகர் வெய்யோன்மால் காணக் கடுங்கொடியார்
ஆரேலா டிந்துவிவ ரானவரே—சேரக்கால்
செய்யோன் குருவிவரோ செல்வமளிக் கும்பெரியோர்
அய்யநுண் ணூலிடையா ளாய்ந்து.

இதுவுமது.

பூசுதன்கொல் லான்கொல்வார் போற்றுச் சனிமுதலாம்
தேசுபெரும் படவரென்று தேர்ந்துரைப்பாய்—காசினியில்
கட்டழகி யென்று கதிதமுவள் ஆனத்தின்
உட்பிறப்போர்க் கொண்ணுதலா யோர்ந்து.

போதகன், வேதகன், பாசகன், காரகன்களாவன:—

வெண்பா.

கூறு பலனைக் கொடுவென்போன் போதகனும்
வேறுபண்ணித் தடடுவிப்போன் வேதகனும்—தேறுபலன்
கூட்டுவிப்போன் பாசகனுங் கோல மகாதிசைக்கே
ஈட்டுபொருள் காரகனீ வான்.

இதுவுமது.

பானு திசைக்குமந்தன் பாசகனுஞ் சுக்கிரனே
மானேகேள் வேதகனு மன்னவனே—தேனனையாய்
காரகனுஞ் செவ்வாயோ காசினியோர் தாமறிய
தாணியும் போதகனு மே.

இதுவுமது.

இந்து திசைக்குவெள்ளி யேயற்றிதோர் பாசகனும்
வந்தைமலர் கண்பனே வேதகனும்—மந்தனே
சங்கா நதிபுடைசூழ் காசினியிற் காரகனும்
அங்கார கண்போ தகன்.

இதுவமது.

மங்கலனூர் தன்றிசைக்கு மார்த்தாண்டன் பாசகனும்
திங்களிரும் போதகனுஞ் சேயிழையீர்—பொங்குபுகழ்
வயபுதனே வேதகனு மித்தரணி யோரறிய
ஆயசனி காரகனே யாம்.

இதுவுமது.

புந்தி திசைக்குப் புரவலனே போதகனும்
சுந்திரனே பாசகனுந் தானுவ—னிந்துநுதல்
மின்னனையீர் செவ்வாயோ வேதகனும் வெள்ளியோ
மன்னுபுகழ் காரகனு வான்.

இதுவுமது.

வேந்தன் மகாதிசைக்கு வெய்யவனே வேதகனும்
போந்துவ ருஞ்செவ்வாயோ போதகனுங்—காந்திசெறி
சந்திரனே காரகனுந் தையலே தாரணியில்
அந்தகனே பாசகனு வான்.

இதுவுமது.

வெள்ளி மகாதிசைக்கு வேந்தனே போதகனும்
தெள்ளுபுதன் பாசகனுஞ் செங்கதிரோ—மெள்ளவரும்
காரகனே தானுகும் காரியே வேதகனும்
வாரணியும் கொங்கைமயி லே

இதுவுமது.

சனியின் றிசைக்குச் சசியோ தகனும்
இனியசெவ்வாய் வேதகனென் றேத்துங்—கனிமொழியாய்
வெள்ளியே பாசகனும் வேந்தனே காரகனும்
தெள்ளுதமி ழோருரைத்த சீர்.

இதுவுமது.

ஒருவர் மகாதிசைக்கு ளுற்பல னுண்ண
வருவர் நவக்கிரக மாதே—அவரவரில்
போதகனும் பாசகனும் போற்றுபொருள் காரகனும்
வேதகனு மாகிவரு வார்.

இதுவுமது.

இந்தப் படிநால்வ ரெய்தியொரு கோள்திசைக்குள்
வந்துபல னுண்ணும் வகையறிமதே—சிந்தித்
துரைத்தபல னுத்திருக்கு மொண்டொடியே கேளாய்
தரைத்தமிழோர் தாமறியத் தான்.

# அட்டவர்க்கங்களாவன.

## இரவி—௪௮.

| | | | |
|---|---|---|---|
| இரவி. | ௧-௨-௪-௭-௮-௯-௰-௧௧ | ... ஆக | ௮ |
| மதி. | ௩-௬-௰-௧௧ | ... | ௪ |
| குஜன். | ௧-௨-௪-௭-௮-௯-௰-௧௧ | ... | ௮ |
| புதன். | ௩-௫-௬-௯-௰-௧௧-௧௨ | ... | ௭ |
| குரு. | ௫-௬-௯-௧௧ | ... | ௪ |
| புகர். | ௬-௭-௧௨ | ... | ௩ |
| சனி. | ௧-௨-௪-௭-௯-௰-௧௧ | ... | ௮ |
| லக்கினம். | ௩-௪-௬-௰-௧௧-௧௨ | ... | ௬ |

## மதி—௪௯.

| | | | |
|---|---|---|---|
| இரவி. | ௩-௬-௭-௮-௰-௧௧ | ஆக | ௬ |
| மதி. | ௧-௩-௬-௭-௰-௧௧ | ... | ௬ |
| குஜன். | ௨-௩-௫-௬-௯-௰-௧௧ | ... | ௭ |
| புதன். | ௧-௩-௪-௫-௭-௮-௰-௧௧ | ... | ௮ |
| குரு. | ௧-௨-௪-௭-௮-௰-௧௧ | ... | ௭ |
| புகர். | ௩-௪-௫-௭-௯-௰-௧௧ | ... | ௭ |
| சனி. | ௩-௫-௬-௧௧ | ... | ௪ |
| லக்கினம். | ௩-௬-௰-௧௧ | ... | ௪ |

## குஜன்—௩௯.

| | | | |
|---|---|---|---|
| இரவி. | ௩-௫-௬-௰-௧௧ | ஆக | ௫ |
| மதி. | ௩-௬-௧௧ | ... | ௩ |
| குஜன். | ௧-௨-௪-௭-௮-௰-௧௧ | ... | ௭ |
| புதன். | ௩-௫-௬-௧௧ | ... | ௪ |
| குரு. | ௬-௰-௧௧-௧௨ | ... | ௪ |
| புகர். | ௬-௮-௧௧-௧௨ | ... | ௪ |
| சனி. | ௧-௪-௭-௮-௯-௰-௧௧ | ... | ௭ |
| லக்கினம். | ௧-௩-௬-௰-௧௧ | ... | ௫ |

## புதன்—௫௪.

| | | | |
|---|---|---|---|
| இரவி. | ௫-௬-௯-௧௧-௧௨ | ஆக | ௫ |
| மதி. | ௨-௪-௬-௮-௰-௧௧ | ... | ௬ |
| குஜன். | ௧-௨-௪-௭-௮-௯-௰-௧௧ | ... | ௮ |
| புதன். | ௧-௩-௫-௬-௯-௰-௧௧-௧௨ | ... | ௮ |
| குரு. | ௬-௮-௧௧-௧௨ | ... | ௪ |
| புகர். | ௧-௨-௩-௪-௫-௮-௯-௧௧ | ... | ௮ |
| சனி. | ௧-௨-௪-௭-௮-௯-௰-௧௧ | ... | ௮ |
| லக்கினம். | ௧-௨-௪-௬-௮-௰-௧௧ | ... | ௭ |

## குரு—௫௬.

| | | | |
|---|---|---|---|
| இரவி. | ௧-௨-௩-௪-௭-௮-௯-௰-௧௧ | ஆ௧ | ௯ |
| மதி. | ௨-௫-௭-௯-௧௧ | ... | ௫ |
| குஜன். | ௧-௨-௪-௭-௮-௰-௧௧ | ... | ௭ |
| புதன். | ௧-௨-௪-௫-௬-௯-௰-௧௧ | ... | ௮ |
| குரு. | ௧-௨-௩-௪-௭-௮-௰-௧௧ | ... | ௮ |
| சுக்ர. | ௨-௫-௬-௯-௰-௧௧ | ... | ௬ |
| சனி. | ௩-௫-௬-௧௨ | ... | ௪ |
| லக்கினம். | ௧-௨-௪-௫-௭-௯-௰-௧௧ | ... | ௯ |

## சுக்ர—௫௨.

| | | | |
|---|---|---|---|
| இரவி. | ௮-௧௧-௧௨ | ஆ௧ | ௩ |
| மதி. | ௧-௨-௩-௪-௫-௮-௯-௧௧-௧௨ | ... | ௯ |
| குசன். | ௩-௪-௬-௯-௧௧-௧௨ | ... | ௬ |
| புதன். | ௩-௫-௬-௯-௧௧ | ... | ௫ |
| குரு. | ௫-௮-௯-௰-௧௧ | ... | ௫ |
| சுக்ர. | ௧-௨-௩-௪-௫-௮-௯-௰-௧௧ | ... | ௯ |
| சனி. | ௩-௪-௫-௮-௯-௰-௧௧ | ... | ௭ |
| லக்கினம். | ௧-௨-௩-௪-௫-௮-௯-௧௧ | ... | ௮ |

## சனி—௩௯.

| | | | |
|---|---|---|---|
| இரவி. | ௧-௨-௪-௭-௮-௰-௧௧ | ஆ௧ | ௭ |
| மதி. | ௨-௬-௧௧ | ... | ௩ |
| குஜன். | ௩-௫-௬-௰-௧௧-௧௨ | ... | ௬ |
| புதன். | ௬-௮-௯-௰-௧௧-௧௨ | ... | ௬ |
| குரு. | ௫-௬-௧௧-௧௨ | ... | ௪ |
| சுக்ர. | ௬-௧௧-௧௨ | ... | ௩ |
| சனி. | ௩-௫-௬-௧௧ | ... | ௪ |
| லக்கினம். | ௧-௩-௪-௬-௰-௧௧ | ... | ௬ |

### திரிகோண சோதினைகளாவன:—

(வெண்பா.)

ஆடரிவில்லான்பெண்மான் யாழ்கோல்சா ணண்டுதேன்மீன்
தேடரிய தாகுந் திரிகோணம்--கூடவற்றில்
ஒன்றுங் கணக்கைத்தள் ளொன்றில ரெண்டிருக்க
நன்றுங் குறைமேனை நாடு.

ஏகாதிபத்திய சோதனைகளாவன:—

(வெண்பா.)

ஆடுதே ளாங்கோலாம் யாழ்பெண்வில் மீன்மான்சால்
யீமடதிர்கோ ளில்லாதி யெண்குறையில்-நடுசமம்
ஆனால்கோன ரெண்டி லமைந்தா லதுகோள்
போனால் சரியெடுத்துப் போடு.

இதுவுமது.

போடில்கோ ளொன்றிற் பொருந்திபொன்றிலில்லாமல்
வீரண்டின் விந்துசமமேவிற்கோள்-கோடிலக்கங்
கொள்கோளில் வர்க்கெஞ்சில் கோளில்லா வீடுயரில்
தானவாய்தாழ் வாகச் சரி.

இராசிகுணகாரங்களாவன:—

(வெண்பா.)

ஆடுவிடை யேழிடப மாளிபத்தி யாழ்தேளெட்டு
நீடுநவிற் நால்பெண்மான் நேரைந்து-கோடுதனு
சொன்பான்சால் பன்னொன் றுறுமீனம் பன்னிரண்டு
தன்விந்துக் கும்மாறுதல்.

கிரககுணகாரணங்களாவன:—

(வெண்பா.)

பானுமதி மால்பங்கு பஞ்சமத்திற் சேயெட்டில்
கோனுக்குப் பத்தில் குளிர்கவியேல்--ஆனதொகை
ராசிகுணயத் தால்பெருக்கி யான பிரண்டின் றொகையைத்
தேசுபெற வைத்துபின் றீட்டு.

நிமித்தங்களாவன:—

(வெண்பா.)

தலையார் கழுத்தக்த நாபியந்தம் தங்குங்
கொலையாசு ராங்கூர் முழுந்தா--ணிலைவணிகர்
மற்றதின்கீழ் வேளாளர் மாக்கரட்டின் கீழ்மயிரு
முற்ற பறையென் றுணர்.

இதுவுமது.

அங்கஞ் சொரிதல் வெளுப்பா மடிகுய்பஞ்
செங்கைமுகம் பச்சை சிவப்பாகுர்--துங்க
மயிரும் வயிறே கறுப்பரைபொன் கேட்கி
லுயிரி முட்டுமென வோர்.

இதுவுமது.

கருத்தாயின் மங்கலமாங் கைவளையாங் காதேற்
குழைத்தானு மொருவேற் கூறை--சுழித்த
வயிறுயிற் கெற்ப யதிறுதன்மேற் பட்ட
மெயிறுயிற் றின்பனவா மென்.

இதுவுமது.

காணின்றிக் கண்விலங்கிக் காணல் கார்சேய்த்தல்
கோணின் றடிபுதைதல் கைகூப்பல்-சாணிற்
களவுமின் னேராக் கவிப்புதருஞ் செல்வ
முளவுமின் னேரென் றுரை.

இதுவுமது.

பாற்றெரித்த நின்றொன்றைப் பார்த்தல் குறிதாய்க்
கூற்குலைத்தல் கூந்தல் குலைத்தல்-காத்தை
முறித்தடுத்த லங்குலிகாற் றேய்த்திடுதனை முன்பே
குறித்தபொரு ளிழவாய்க்கூறு.

இதுவுமது.

மாடு மனிதர் மரகதிவில் வந்திடினுங்
கோடு மொழிதலையே கூடிடினு-மூடக்
கிடந்தானே கேட்பினுங் கேடெய்து நளு
மடந்தைகெல்லாய் கூறல் வழக்கு.

இதுவுமது.

வெஞ்சுடர் தான்கத்தி விற்காற் முகங்கண்டு
நஞ்சுடைய மூல நடுங்குலவே -பஞ்சு
பிதிர்த்திடினுங் கோபம் பெறுங்காலதீயே
பிதிர்ந்திடினுந் தீதென் றுரை.

இதுவுமது.

மூக்குநீர் சிந்தன் முகஞ்சுரித்தல் வெய்துயிர்த்தல்
வாய்க்குளறல் கொட்டாவி வாய்விடுத-லார்க்கும்
பிணிவினவிற் றீராப் பெயர்ந்தபொருள் வாரா
துணிபில்வு முற்றுமை சொல்.

இதுவுமது.

முடியாக்கருமம் பொருட்பேறு முற்றுக்
கொடியாயினவுங் கொடுமே-முடிவி
விழந்தனபே றில்லை பிணிநோய் பெருகு
முழந்தா ளிடங்கொடுதன் மூன்.

இதுவுமது.

வட்டமாய்க்கீறின் வயிறுதோள் வாய்வதனந்
தொட்டிடினுங் கெட்டனதான் றோன்றுமாம்-பிட்ட
மலைகான் முதுகு பிடரிகைக்கீழென்
றுலைதாளை தோன்றுமை யோர்.

இதுவுமது.

நாகந் தரித்தார் நடையிலார் நாணமிலார்
சோக முடையார் சுடர்ப்படையார்-போகந்

துறந்தார்வெறுங்கழுத்தர் துன்ஞதாற் கண்ட
லிறந்தானென் றெண்ணப்படும்.

இதுவுமது.

நூலைக்கயிற்றை நெருடன் முறுக்கியிடல்
காலைக்கை யாம்பிடித்தல் கண்ணரக்கன்-மேலைத்
தலையிலீ மஞ்சுமத்தற் றூன்கிடைத்துற் றூங்கல்
கொளை தீமை நோய்மரணங் கூறு.

இதுவுமது.

எண்ணெய்மெய்ப் பூச லெயிறுரிஞ்சன் மைதீர்த்தல்
கண்ணையே மூடல் கதவடைத்தன் மண்ணசையக்
கோவோடன் லங்கை நிலைகெடுதல் கூர்தருநோய்
சாவோடு கேடு தரும்.

இதுவுமது.

கோல மிடுதல் குடைபிடித்தல் கொங்கலர்பூ
மாலையுடைய மயிர்முடித்தல்-மாலை
முடிக்கேற்றி வைத்தல் முடிமன்னர் போற்றும்
படிப்பேறு பாத்திபாரம் பார்.

இதுவுமது.

வையந்திருத்தல் வடிவெழுதன் மற்றொன்றைக்
கைவைத்தல் சிந்தைகனிந்திருத்தல்-கையாற
றழுவன் மொழியின்பந் தாரை யுருதலுண்டேல்
வழுவி னிதிபெருகும் வந்து.

இதுவுமது.

பால்வெண்ணை பார்ப்பார் பரிமாப்பகடெருமை
சூல்வெண் சுரயியொடு சூலினபெண்-சாலக்
குடநிறைநீர் பெண்க டலைமுழுக்க தன்டேற்
றிடநிறைநீர் கூவந்தெவி.

இதுவுமது.

அல்லற் படுவா ரகமோ டகந்தையுளார்
கொல்லப் படுவார் குறைப்புண்டா—ரில்லின்
புடைநின் றிகழ்விடையார் போரிடுவார் தம்மைக்
கடைதலையுங் காண்டல் கடை.

இதுவுமது.

விரும்புமறை வாணரம் வெம்பரிமே லானோர்
குரும்பை முலைமடவார் கூட்டம்—விரும்புங்
கொடையாளர் கொற்றப்படையாளர் கூறு
நடையாளர் காண்ட னலம்.

கெருட தரிசனங்களாவன:—

(விருத்தம்.)

தினகரனுன் கலியாண பலமே யுண்டாம்
   திங்களதனில் நினைத்தவெல்லாந் திரள யக்கூடும்
அன்புடனே இறுசுவையுஞ் சிக்குஞ் செவ்வாய்
   அபமிருத்து தோஷத்தை யகற்றும் புந்தி
மனதிலுறு துயரம்போம் குருவாரத்தில்
   வளர் வெள்ளி தனக்கிடுக்கண மாற்றிவைக்கும்
கனசனிநாள் கெம்பீர பலனே யுண்டாம்
   கருடனைக்கண் டாலிதுவே கழறு வாயே.

## திசைகளின் விபரங்கள்.

௧-வது மகாதிசைகளாவன:—

| | | | |
|---|---|---|---|
| அச்சுவினி, மகம், மூலம், | கேதுதிசை | ௵ | ௭. |
| பரணி, பூரம், பூராடம், | சுக்கிரதிசை | ௵ | ௨௦. |
| கார்த்திகை, உத்திரம், உத்திராடம், | சூரியதிசை | ௵ | ௬. |
| உரோகணி, அஸ்தம், திருவோணம், | சந்திரதிசை | ௵ | ௰. |
| மிருகசிரம், சித்திரை, அவிட்டம், | குசன்திசை | ௵ | ௭. |
| திருவாதிரை, சுவாதி, சதயம, | இராகுதிசை | ௵ | ௧௮. |
| புனர்பூசம், விசாகம், பூரட்டாதி, | குருதிசை | ௵ | ௧௬. |
| பூசம், அனுஷம், உத்திரட்டாதி. | சனிதிசை | ௵ | ௧௯. |
| ஆயிலியம், கேட்டை, ரேவதி, | புதன்திசை | ௵ | ௧௭. |

ஆக மகாதிசை ௯-க்கு ௵ ௧௨௰.

௨-வது உற்பன்ன திசைகளாவன:--

ஜென்மநட்சத்திரமுதல் எண்ணினல் ௫-வது நட்சத்திரமெதுவருமோ அந்த நட்சத்திரத்துக்கு என்ன கிரகதிசையோ அதுவேயாம்.

௩-வது மிருத்தியுதிசைகளாவன:-

ஜென்மநட்சத்திரத்துக்கு மூன்றாவது நட்சத்திரதிசையாம்.

௪-வது பிராணதிசைகளாவன:-

சூரியன் ஜெனனகாலத்தில் எந்தராசிபாகை கலையிலிருக்கிறானோ அதை யறிந்து மேஷாதியாக இராசி ௧-க்கு ௧௮00-கலையாகக் கணக்கிட்டு எந்தராசி

யின் எத்தனையாவது பாதையிலிருக்கிறானோ அதை பாகை ௧-க்கு ௬0-கலையாக மேல்கண்டகலைகளுடன் கூட்டி ௮00-ல் வகுக்கவந்த யீவுகளை அசுவினி முதலாக வெண்ணி மீந்தகலைககு எந்த நட்சத்திரம் வருகிறதோ அதே நட்சத்திரத்துக்கு என்ன திசையோ அதுவே பிராணதிசையாம்.

௫-வது ஆதான திசைகளாவன:—

ஜென்ம நட்சத்திரத்துக்கு ௮-வது நட்சத்திரதிசையாம்.

௬-வது வாமதிசைகளாவன:—

ஜென்ம நட்சத்திரமுதல் தலைகீழாக எண்ணினால் நாலாவதாகவரும் நட்சத்திரதிசையாம்.

௭-வது உடுதிசைகளாவன:—

பிராணதிசையிற் சூரியனுக்கு கண்டதுபோல் சூரியன் சந்திரனிருவருக்குங் கண்டகலைகளை யொன்றுபடுத்தி முன்போலக்கண்டதிசையாம்.

௮-வது நிரியாணதிசைகளாவன:—

சூரியனுக்குப் பார்த்ததுபோல் லக்கினமிருக்கும் பாகைகளை ௬0-ல் பெருக்கில் மீதி தலையோடுசேர்த்து ௮00-க்கு கொடுத்த யீவுவரை நட்சத்திரம் போக மீதிகலைக்குரிய நட்சத்திரதிசையாம்.

௯-வது மகாப்பிராணதிசைகளாவன:—

உடுதிசைபோல சந்திர, சூரிய, இலக்னென் புடங்களைக்கூட்டிக் கண்ட நட்சத்திரதிசையாம்.

௰-வது குளிகநிரியாணதிசைகளாவன:—

குளிகனிருக்கும் இராசி பாகை கலையை முன்பிராணதிசை முதலியதுக்குக் கண்டதுபோல கலையாக்கி ௬-ஆல் பெருக்கி சந்திரனிருக்குமிராசி பாகை கலைகளை கலையாக்கி மேலைபெருக்கும்படி சொன்ன கலையோடு சேர்த்து ௮00-க்கு கொடுத்துவந்த யீவு எத்தனையோ அதை முன் போலவே எண்ணிக் கண்டதுபோக மீதியான கலையெந்த நட்சத்திரமோ அதற்குரிய திசையையேயாம். மிச்சங்கலையில்லாவிடில் வந்த யீவின் நட்சத்திர திசையாம். இதுபோலவே எல்லாவற்றினுக்கு மகாதிசைபோல் எனக்கூறினர்.

சோதிடக்கடல்போதினி முற்றிற்று.